841.6 SU/PR

பிஸ்மில்லாகி.

---

சீறு - நபியவதாரப்படலம்

# உரைகடிலக நிராகரணம்.

---

இது,

நாகூர்-ம-ா-ா-ஸ்ரீ

வா. குலாம் காதிறு நாவலர்

செய்தது.

---

காரைக்கால்

கா. காசிமுகியித்தீன்ராவுத்தரால்

தமது 0465

முகம்மதுஸமதானி யந்திர சாலையில்

அச்சுப்பதிப்பிக்கப்பட்டது.

---

1892.

ஜனுவரி ௴

---

பிஸ்மில்லாகி.

# சீறா - நபியவதாரப்படலம்

# உரைகடிலக நிராகரணம்.

---

### காப்பு - வெண் செந்துறை.

இல்லவன் போல வினைய வென் றேத்தும்
வல்லவற் பணிந்து வணங்குதுமற் றே.

## முகவுரை.

---

சற்றேறக்குறையப் பதினைந்துவருஷங்களுக்கு முன் சீறாவின் நபியவதாரப் படலத்திற்கு மாத்திரம் எம்மால் ஓர் உரை எழுதப்பட்டுக் கரலிகிதமாயிருந்து, சுமார் ஐந்துவருஷங்களுக்குமுன் "சீறா நபியவதாரப் படலவுரை" என்னும் நாமத்துடன் அச்சிடப்பட்டது. அது, கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு உபயோகமாம்படிப் பதவுரையும் அவசியமான சில இலக்கணக் குறிப்புக்களு முள்ளதாகச் செய்யப்பட்டதன்றி, வித்துவத்திறத்தைக்காட்டி விரித்து எழுதப்படவில்லை.

அவ்வுரை அச்சாய் வெளிப்பட்ட இரண்டொரு வருஷங்களுக்குப்பிறகு, பறங்கிப்பேட்டையிலுள்ள காதிறசஞமரைக்காயர் என்பவர் அதனைமறுத்து வேறோர் உரை எழுதுகின்றார் என்று எமக்குச் செய்திவந்தது. அப்போது யாம், நம் உரையை மறுத்தெழுதும் திறன்

அவருக்கிருந்தாலன்றி அவ்விஷயத்தில் தலையிடாரே. எங்ஙனம் எழுதுகின்றாரோ பார்ப்போம் என்று எண்ணியிருந்தோம்.

பின்பு, நாம் கேள்விப்பட்டபடியே "சிறு நபியவதாரப் படலம் உரைகடிலசம்" என்னும் பெயருடன் அவர்செய்த புத்தகமொன்று எம் பார்வைக்கு வந்தது.

திலகம் என்னும் அப்புத்தகத்தை யாம் ஒருவாறு பார்த்தபோது அத் திலகக்காரர் அதனை மகா விந்தையாக எழுதி முடித்திருக்கின்றார் என்பது எம்மெண்ணத்திற் பட்டு, ஆதியோடந்தமாகப் பின்னும் வாசித்துப் பார்வையிட்டோம். அவர், யாம் முந்தியே எம் உரையில் எழுதிக்காட்டியுள்ள அரியபெரிய இலக்கிய இலக்கணங்கள் அனைத்தையும் இருந்தபடி யமைத்தும் தாம் செய்தது வேறுரையென்பதை மெய்ப்பிக்க வேண்டி, சொற்சுவை பொருட்சுவை தோன்றக் காப்பியப் பண்புடன் அமைந்து கிடக்கும் அப்படலத்தின் அருமந்த செய்யுட்களை ஆசிரியர்க்கும் ஏனையர்க்கும் எவ்வளவும் பொருந்தாவண்ணம் குரங்கின்கைப் பூமாலையைப்போலச் சின்ன பின்னமாகச் சிதைத்துக் கெடுத்து, தொன்றுதொட்டு வழங்கும் அர்த்தங்களுக்கும் சரித்திரத்திற்கும் முழு விரோதமானதாக எவ்வாற்றானும் பொருந்தாத விபரீதார்த்தங்களையும் அநாவசியமான சூத்திரங்களையும், நிராதார வாக்கியங்களையும் எமக்கு மாறாக நேர்ந்தபடியெழுதித் தம் புத்தகத்தை விரித்து முடித்திருப்பதுமன்றி, அதில் எம்மை "சிற்றறிவினர்" "போலியறிவினர்" "அறிவின்மையர்" "போலிப்புலவர்" என்



பனமுதலிய பலவித நிந்தனை சொற்களைப் பலவிடத்தும் அடுத்தடுத்துப் பிரயோகித்தெழுதி மிக இழிவுதோன்ற இகழ்ந்திருக்கின்றார். அன்றியும், யாம் எம் கல்வியைக் கடலினும் பெரிதெனக் கொண்டு நூலாசிரியராகிய உமறுப்புலவரை ஒருமை பன்மை யறியாதா ரெனக் குற்றங்கூறி யிருக்கின்றேம் என்றும் அதில் அடிக்கடிச்சொல்லுகின்றார்.

யாம் நூலாசிரியரை எவ்விடத்திலும் எவ்விதத்திலும் குற்றங் கூறவில்லையென்பதும், அவ்வாசிரியரது கல்வித்திறத்தையும் மகிமையையும் விளக்கி, அவர் செய்யுட்களிற் கிடந்த அரும்பொருட்களையும் இலக்கணங்களையும் எடுத்துக்காட்டிப் புகழ்ந்திருப்பதும், எம் உரையை உற்று நோக்கும் மனநீதியுள்ள எவர்க்கும் மிகத் தெளிவாய் விளங்காமற்போகா.

வெகுகாலத்திற்குமுன் செய்யப்பட்ட காப்பியமாதலின் கரலிகிதங்களால் சிற்சிலவிடங்களிற் கலந்துபோந்த இலக்கணவிரோதமான வழுக்களைத்திருத்திமாத்திரம் எழுதி, அத்திருத்தலுக்கு நியாயமுங்காட்டியிருக்கும் எம்மீது, ஆசிரியர் ஒருமை பன்மையறியாதா ரெனக் குற்றங்கூறினதாக அபவாதஞ்சுமத்துதலும் நிந்தித்தலும் நியாயவிரோதமென்பது அவர் அறிவிற்படாமற்போனது ஆச்சரியம்.

யாம் எழுதிய புத்தகத்தில் தவறுகண்டாராயின் இன்ன இன்னவை இன்ன இன்ன நியாயங்களால் தவறும் என்று வித்துவான்கள் மனச்சாக்ஷியுடன் ஒப்புக்கொள்ளத்தக்க விதிகளைக்காட்டி நிவாரணஞ் செய்து

தம் சமர்த்தை அவர் வெளியிடலாமன்றி, எம்மை நிந்தித்து இகழ எவ்வளவும் நியாயமில்லை. ஆகவே, ஒருவாற்றானும் தவறுற்றிராத எம்மை நிராதாரமான ஆபாச ஏதுக்களைக்கொண்டு தவறினதாகத்தாபித்து, தம் மனஞ்சென்றபடி நிந்தித்து இகழ்ந்ததற்கு வதிலாக யாமும் நிந்தித்து இகழ்ந்து அவரை மனநோவப்பண்ணாமல், முஸ்லிமானவனை மற்றொரு முஸ்லிமானவன் மனநோவப்பண்ணுதல் பெரும்பாவமாகையால் "அகழ்வாரைத்தாங்கு நிலன்போலவையத் திகழ்வார்ப்பொறுத்தறலை" என்பதைக்கருதி, நியாயமின்றி இகழும் அவர் தன்மையை உலகமே மதித்தறியட்டுமென்று பொறுத்து, அவரையொத்தபெருமான்களால் இகழப்பட யாம் போக்கிய முடையோமாயினதே பெரும்பாக்கியமென்றும், எம்மை இகழ்ந்து அதனால் அவர் மனமகிழ்ந்திருப்பது எமக்கு மகிமையும் சந்தோஷமுமேயென்றும் தீர்மானித்து, எம் மனதை அவ்விஷயத்தில் நுழையவிடாமலிருந்தோம்.

இருந்தாலும், மதிகேடற்ற திலகக்காரர் "மூடிய முத்து உலகம்பெறும்" என்பதுபோல மௌனமாயிராமல், இவ்விதம் இறங்காத்துறையில் இறங்கித் தம் கவுரவத்திற்குக் குறைவைத்தரத்தக்க திலகத்தைத் தீட்டிக்கொண்டு வெளிவந்தாரேயென்று எமக்கு நினைப்பு வருந்தோறும் அத்திலகத்தை எடுத்துப்பார்க்க நேர்ந்தது. அங்ஙனம் பார்க்கப் பார்க்க, தாம் ஒருகல்விமானாய் வெளிவரவும், அதற்கு வேறுகல்விமான்களைக் குற்றங்கூறி நிந்தித்தால் தம்மையும் கல்விமானென்று பிறர் நினைத்துக்கொள்ளுவாரென வெண்ணிப் பிறரை நிந்திக்



கவும் ஆவலுள்ளவராயிருக்கின்றார் என்பதாக நாம் அபிப்பிராயப்பட்டு, அவர் எண்ணம்போலச் சித்திபெறட்டுமென்று, அத்திலகத்தை மூலையிற் போட்டுவிட்டு, பின்பு ஒருதரமும் நினைத்தும் பாராதிருந்தோம்.

அவர் திலகம் எங்கும் பரவி எவர் கைக்கும் வந்தபின் எம் நேசர் சிலர் எம்மை நோக்கி "நாவலீர், நும் கல்வித்திறத்தை நீவிர் செய்துள்ள உரையால் மாத்திரமன்று, ஏனைய நூற்களாலும் பண்டிதர்கள் நன்குமதித்திருக்கின்றனர். ஆயினும், பாமரர்களோ திலகத்தைப் பார்த்துத் தமக்கு நேர்ந்தபடிப் பிதற்றுவர். அப்பிதற்றலுக் கேற்க நீவிர் பெருந்தன்மை பற்றி மௌனியாயிருப்பது அத்திலகம் ஒப்புக்கொள்ளத்தக்கதென்பதற்குச் சான்றாம் ஆகலின், அதற்கு ஒரு நிராகரணஞ் செய்து வைப்பதே முறை" என்று சொல்லினர். அதற்கு யாம் "எவ்வித நிராகரணஞ் செய்யினும் பாமரர்களால் யாதுபலன்? அவர்கள் அதனுண்மையை அறிவார்களா? அதனையும் பழிக்கத்தான் துணிவார்கள். கற்ற பண்டிதர்களுக்கு நிராகரணம் வேண்டியதில்லையே. அத்திலகமே சாட்சிபகராதா?" என்றுசொல்லி மறுத்தும், அவர்கள் கேளாமல் பலதரம் அழுத்திச் சொன்னபடியால், அச்சொல் எமக்கும் ஒருவாறு ஒத்து, அவர் எம் உரையில் எங்கெங்கு எதை எதைத் தவறென்று மறுத்திருக்கின்றாரோ அங்கங்கு அதை அதை நிராகரித்து "சீறா - நபியவதாரப்படலம் உரைகடிலக நிராகரணம்" என்னும் அபிதானத்துடன் இந்நூலை எழுதி முடித்தோம்.

ஆனாலும், திலகக்காரர் தம்மனஞ் சென்றபடி யெழுதியிருக்கும் விஷயங்கள் அனைத்தையும் நிராகரிக்கப் புகின் மிக விரிவாமாதலாலும், எம்மேல் ஏற்றிய அபவாத தோஷங்களை நிராகரிப்பதொன்றே எம் கடமையாதலாலும், அவர்சொல்லும் நிந்தனுதி பரார்வாக்கியங்கள் அத்தனையையும் பாராட்டாமல், நிராகரிக்க வேண்டுவன வற்றை நிராகரித்து, எம் உரையை மறுத்தெழுதியிருக்கும் கல்வித் திறத்தையும், நிரேதுவாக நிந்தித்திருக்கும் புத்திசாதுரியத்தையும் உலகம் அறியும் பொருட்டு அங்கங்கே எடுத்துக்காட்டி, இந்நூலைச் சுருக்கமாகவே முடித்திருக்கின்றோம்.

### கல்விமான்களே,

நீங்கள் ஒவ்வொருவரும் தயைசெய்து, முந்தியாம் செய்திருக்கும் "சீறா - நபியவதாரப்படலவுரை" யையும், பின் அதனை மறுத்துத் திலகக்காரர் எழுதிய "சீறா - நபியவதாரப்படலம் உரைகடிலக" த்தையும், அதனை நிராகரித்து இப்போது யாம் செய்துள்ள இந்த "சீறா-நபியவதாரப்படலம் உரைகடிலக நிராகரண"த்தையும் ஒருங்குவைத்து எழுத்தெழுத்தாகப் பார்வையிட்டு, உங்களில் ஒவ்வொருவருக்கும் உண்டாம் அபிப்பிராயங்களைப் பலரும் அறிய வெளியிடும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

"அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்."

**வா· குலாம் காதிறு நாவலர்.**

## சீறா - நபியவதாரப் படலம்

# உரைகடிலக நிராகரணம்.

1. பெருகிய கோடி சந்திரப்ரகாச மாய்
வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
கருணைவீற்றிருந்த செங்கமலக் கண்ணினைத்
திருநபி வருமவதாரஞ்செப்பு வாம்.

இச் செய்யுளில் ஆசிரியர் * "ஆயிரங்கோடி செங்கதிர்ச்செல்வர்" "அநந்தகோடி சூரியரில்" சேட்டிளம்பருதிகோடி" "ஆயிரங் கோடி வெய்யோ னலர்ந்தென" † "ஆயிரங்கோடி பருதிவான்பூத்ததாமென" 0 "செஞ்சுடரநந்தகோடி செறிந்தொருங் குதித்தாலென்ன" என்பனபோன்ற முன்னோர் செய்யுட்களுக் கிணங்க "பெருகியகோடி சந்திரப்ரகாசம்" என்றமைத்து, ஒரேகோடியென வரையறுக்காது பலகோடி யென்பான்வேண்டிப் பெருகிய வென்னும் பெயரெச்சத்தைக் கோடியென்னு மெண்ணுப் பெயரான் முடித்து வைத்தவாறே, இத்தனைகோடி யெனப்படாது பெருகிய பலகோடி சந்திரன் என யாம் பொருள்கூறினதுமன்றி, அப்பெயரெச்சத்தைச் சந்திரனென்பதனோடு முடித் துரைகூறுவாருமுளர் எனப் பிறர் மதமுங் கூறி

---

* கூர்மபுராணம்.
† காசிகாண்டம்.
0 கந்தபுராணம்.

னேம். திலகக்காரர் எம் பிற்கூற்றைப் பற்றுக்கோடாக் கொண்டு "பெருகிய சந்திரன்" என்கின்றார். அங்ஙனம் வாளா கூறுவதினும் பெருகிய கோடிசந்திரன் என்ப தே சிறப்புடைத் தாகலின், எம்முரை மறுக்கப்படாமை காண்க.

அதா அன்று, அக்கோடி யென்பதனைப் புதிதெனும் பொருளைத்தரும் அடைமொழி யெனக்கொண்டு "இவ்வுலகத்துச் சந்திரனிழிவின தென்னுங் கருத்தினராய்த் தூயபெருமானாரது வடிவத்திற்கு உவமித்தற் பொருத்தமுடைத் தன்றென்பதூஉம், படைப்பாதி புலன்களாலமைக்கொணுக் காரணப் பேற்றினவாய சந்திரனையே யொழிய கருதிலேமென்பதூஉந் தோன்றச் சந்திரனைப் பிரித்தற்பொருட்டுக் கோடி என்னும் அடைகொடுத்தார்" என்கின்றார்.

மதியம் என வாளாகூறாது, பெருகிய கோடிசந்திரப்பிரகாசமாய் வரும் ஒரு பெருங்கதிர் மதியம் என்றமைதானே அம்மதி இம்மதி யல்லாததோர் புது மதியென்பதை யுணர்த்திற்றாகலின், கோடியென்பதற்குப் புதிதெனப் பொருள்கோடற் பொருந்தாமை யறிக. அது பற்றியே ஆசிரியர் கோடிப்புடவை யென்பதுபோலக் கோடிச் சந்திரனென்னாது கோடிசந்திரனென்றதூஉ மென்றுணர்க.

அதா அன்று, ஆசிரியர் கருத்திற்கும் ஏனையர்க்குமொப்ப, பெருகிய பலகோடி சந்திரன்களது பிரகாசமுழுவது மொன்றாய் வரும் பெரியகிரணங்களையுடைய வொப்பில்லாத சந்திரனைப்போல வரும் அவதாரம் என யாம் பொருள்கூறியதனைமறுத்து, தெளிவாய்ப் பொருடந்து நிற்குஞ் செய்யுளைச் சிதைத்துக் குலைத்து, மதியம் போல வென்பதற்கு "மதி அம்போல - அழகிய நிலவுபோன்ற" என்றும், போல வென்னும் வினையெச்சத்தைத் தாமாத் திரித்துக்கொண்ட போன்றவென்ற பெயரெச்சத்தை முடிப்பதற்கோர் பெயர்தேடிப்போய் எல்லா நபிமாருள்ளும் மேன்மைய ரென்பான் திருநபி யென நபி யென்பதற்குக்கொடுத்த திருவென்னு மடைமொழியைக் கண்டுபிடித்து, அதனைமுடித்து, போன்றதிரு எனவைத்து, அத்திருவை மேனியென்றமைத்து, மேனியையும் கண்ணிணையையு முடைய நபியென்றும் தமக் கியைந்தபடி யுளறுகின்றார் பேதையர். அது பதரமென்பதறிக.



அதா அன்று, நபிபெருமானாரது வடிவத்திற்கு யாண்டுமுவமை கூறாமென்பது தோன்ற "இவர்க்கெதை யுவமைசொல்லுவதே" எனக்கூறிய ஆசிரியர் கருத்திற்குங் கூற்றிற்கும் மாறுபட "நிலவு போன்றமேனி" என இல்லாத மேனியை உள்ளதாக்கி அதற்கு உவமையுங் கூறியது இழுக்கென்பதைக் காண்க.

அதா அன்று, எவ்வித மேன்மைத்தான சிருட்டியும நபிபெருமானாருக் கொப்பாகாதென்பது போதா மதியமென்னு முவமானத்திற்கு அவதாரத்தையே யுவமேயமாகக்கொண்டு, வருமதியம்போல வருமவதாரம் என ஆசிரியர் விளக்கிவைத்தவாறு யாம் பொருள் கூற,

"அவதரித்தலினிறுத்த முறையான சரித்திரத்தையவதாரமென்றாரா தலி னது பொருந்தாதென மறுக்க" என்கின்றார்.

இனி "எழுந்தமுழுமதிபோல முகம்மது நபி பிறந்தனரே" என்று அவதரிக்கு மிடத்துஞ் சிறப்பிக்கும் ஆசிரியர், அவதாரத்தை யுணர்த்துஞ் சரித்திரத்தையுஞ் சிறப்பித்தற் பொருந்தாதென்பது எற்றுலென்க.

அதா அன்று, வருமவதாரமென்பதற்கு யாண்டு முயிர்த்துவரும் எனப் பொருள்கூறி, நபிபெருமானார் உயிர்த்து வருதலை யாம் அறியா திடர்ப்பட்டே மென்கின்றார். இயேசாண்டவர் சிலுவையிலறையுண்டு கல்லறையுளடங்கிய மூன்றாந் தினம் உயிர்த்து வந்தாரென்று கிறிஸ்தர் சொல்லுமாறு உயிர்த்துவருதல் மாண்டோன் மீண்டு முயிர் பெற்று வருதற்கே யர்த்தமென்று யாம் கற்றறிந்துள்ளே மன்றி, நபிபெருமானார் அவதரித்தலை உயிர்த்துவருதலென் றறியக் கற்றிலே மென்க.

இன்னும் அவர் கூற்றின் விபரீதங்களை விரிக்கின் ஈண்டே பல்குமாகலானும், பின்னும் பலவிடத்து முள்ளனவற்றை ஆங்காங்கு விளக்கிக்காட்டிப் பலரையுஞ் சிரிப்பிக்கவேண்டு மாகலானும் இம்மட்டில் ஒழிகின்றேம். இனிவருவனவற்றையுங் கவனிக்க.

## வேறு.

2. கடியிருந் தொளிர்கற்பகமுஞ் சுடர்
வடிவிருந் தமணியும் வனசமும்
படியுங்கார் முகி லேழும் பழித்துவிண்
குடியிருத்துங் கொழுந் தடக்கையினர்.

இச் செய்யுளில் ஆசிரியர், அப்துல்லாவின் கைகள் ஈகையிற் சிறந்த கற்பகத்தையும், சிந்தாமணி முதலிய்



தேவமணிகளையும, பதுமநிதியையும், முகில் ஏழனையும் பழித்து ஆகாயத்திலேயே குடியிருத்தின வென்பது தோன்ற, கற்பகம், மணி, வனசம், முகில் என்பனவற்றை முறையே நிறுத்தி, அந்நான்கும் விண்ணின்க ணுள என வென்பது பயப்ப "பழித்து விண்குடியிருத்தும்" என முடித்தற்கேற்ப யாம் பொருள்கூறினேம். திலகக்காரர், முதலினு மீற்றினு முள்ள கற்பகத்தையும் முகிலையும் வேறுபிரித்து, நடுவணுள்ள மணிவனசமென்பவற்றை வேறாக்கி மணியை இரத்தினங்களென்றும் வனசத்தை இலக்குமியென்றுங்கொண்டு, மணியையும் வனசத்தையும் பழித்துவிட்டு, கற்பகத்தையும் முகிலேழனையும் பழிக்காது விண்ணிற் குடியிருத்துங்கை யெனமுடிக்கின்றார். ஈண்டு யாங் கூறிய வேதுவான் இது ஆசிரியர்க்கு உடன்பாடன்று மாகலானும், இரத்தினங்களும் இலக்குமியும் பெற்றார்க்குமாத்திரம் செல்வம் பயப்பிக்குமன்றி, தேவமணி பதுமநிதிபோலக் கேட்டதைக் கொடுக்கும் பொருளல்ல வாகலானும் அவர் கூற்றுப் பொருந்தாமை காண்க.

அதா அன்று, "இச்செய்யுண் மாட்டிலக்கணத்தான்முடிந்தது. இனி, ஆற்றுநீ ரொழுக்குப் பொருட்கோளதாய்க் கொண்டு முதலுரையார் மயங்கிக் கூறுவனவெல்லா மாசிரியர்க் குடன்பாடாகாவென்பதி யாங் கூறிய வாற்றானன்குணர்க. என்னை? மணி, வனசம் முறையே தேவமணியென்றும் வனசவுருவாய்க் கிடக்கும் பொன்னென்றும் கூறுவதால் தேவமணி, வனச உருவாய்க் கிடக்கும் பொன் இத்தன்மைத்தாய பொரு

ளென்பன தெற்றெனத் தோன்றாமையானுந் தோற்று விக்காமையானும் பிறவெல்லாம் வருமுறை கெடுமாக லானும் பொருள் வியந்து முடியாவென வறிக" என் கின்றார்.

அவர், மாட்டிலக்கணம யாற்று நீர்ப் பொருட் கோளென்பனவற்றைப் பற்றிப் பின்னுங் கூறுகின்றா ராகலின், யாம் அங்கு இதுவுஞ்சேர ஒருங்கு நிராக ரிக்குதும். தேவமணியும் பதுமநிதியும் தெற்றெனத் தோற்றாவாயின், அவரெடுத்துக்கொண்ட கற்பகமென்ப து தெற்றெனத்தோற்றும்போலும்! ஒருக்கால்அதனைக் கண்டிருப்பினு மிருப்பர். "* ஈட்டியதெல்லா மிதன் பொருட்டென்பதே, காட்டிய கைவண்மை காட்டினர் வேட்டொறுங், காமருதார்ச்சென்னி கடல்சூழ் புகார் வணிகர், தாமரையுஞ் சங்கும்போற்றந்து" என்பது போன்ற பழஞ்செய்யுட்களானும், பிறநூற்களானும், தேவமணி, சங்கநிதி, பதுமநிதி யென்பன இன்னவை யென்று சற்றறியாமை யானன்றோ இங்ஙனம் மயங்கு வாராயினார் பேதையர். இங்ஙன மாயினோர் பிறரைப்ப ழித்து வெளிப்பட்டது ஆச்சரியமே.

### வேறு.

3. விண்டொடு கொடுமுடிமேரு வீறழித்
தெண்டிசைக் கிரியொடு மிகலுங்கொங்கையர்
கொண்ட மாமயலொடு மனமுங்கூர்விழி
வண்டொடு வண்டுறை மாலைமார்பினர்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உ௰-வது "அறுவகைப்பட்ட" என்னுஞ்சூத்திரவுரை.



இச்செய்யுளில், விண்டொடு கொடுமுடி என்பதற் கு ஆகாயத்தைத் தீண்டுஞ்சிகரம் என யாம் பொருள் கூறியிருப்ப, திலகக்காரர் எவரினு மிக நுண்ணறிவு டையார்போல

"தேவலோகத்தைப் பிடிக்கும்படியான சிகரம்" என்கின்றார்.

பிடிக்குதல் கரத்திற்கன்றிச் சிகரத்திற் கியலாவா மாகலின், அது பொருந்தாதென்க.

அதாஅன்று, மேருவு மெண்டிசைக்கிரிகளும் பிற பருவதங்களிற் சிறந்தவாகலின் வேறுபிரித்து, பிறபருவ தங்களுடன் மேருவினது வீற்றையுமழியச்செய்து எண் டிசைக்கிரியொடு மிகலுமெனப் பொருள் கூறுவாருமு ளர் என யாம் பிறர் மதங்கூறியிருப்ப, இதனை யுய்த்து ணராது,

"மேருவுமெண்டிசைக்கிரியுங் கூறிய பிற்றைப் பி றபருவதங்களையுமென வேறெடுத்தோதற் பயனில் கூற் றாம்" என்கின்றார்.

எண்டிசைக்கிரி யென்பதை அஷ்டபருவதங்க ளென்றறியாது, எட்டுத்திசைகளிலுமுள்ள எல்லா மலை களையு மென வைத்துக்கொண்டார்போலும்!

அதாஅன்று, கூர்விழி வண்டொடு என்பதை உரு வகமாக ஆசிரியர் கூறியவாறு, கூரியவிழிகளாகிய வண் டுகளோடு என யாம் பொருள்கூறியிருப்ப, அதனை ம றுத்து, வண்தொடு எனச் செய்யுளைக் கலைத்து, வண் என்பது தெளிவென்றும், தொடு என்பது உண்ணலா

ளென்பன தெற்றெனத் தோன்றாமையானுந் தோற்றுவிக்காமையானும் பிறவெல்லாம் வருமுறை கெடுமாகலானும் பொருள் வியந்து முடியாவென வறிக" என்கின்றார்.

அவர், மாட்டிலக்கணம யாற்று நீர்ப் பொருட்கோளென்பனவற்றைப் பற்றிப் பின்னுங் கூறுகின்றாராகலின், யாம் அங்கு இதுவுஞ்சேர ஒருங்கு நிராகரிக்குதும். தேவமணியும் பதுமநிதியும் தெற்றெனத் தோற்றாவாயின், அவரெடுத்துக்கொண்ட கற்பகமென்பது தெற்றெனத்தோற்றும் போலும்! ஒருக்கால் அதனைக் கண்டிருப்பினு மிருப்பர். "* ஈட்டியதெல்லா மிதன் பொருட்டென்பதே, காட்டிய கைவண்மை காட்டினார் வேட்டொறுங், காமருதார்ச்சென்னி கடல்சூழ் புகார் வணிகர், தாமரையுஞ் சங்கும்போற்றந்து" என்பது போன்ற பழஞ்செய்யுட்களானும், பிறநூற்களானும், தேவமணி, சங்கநிதி, பதுமநிதி யென்பன இன்னவை யென்று சற்றறியாமை யானன்றோ இங்ஙனம் மயங்குவாராயினார் பேதையர். இங்ஙன மாயினோர் பிறரைப்பழித்து வெளிப்பட்டது ஆச்சரியமே.

வேறு.

3. விண்டொடு கொடுமுடிமேரு வீறழித்
தெண்டிசைக் கிரியொடு மிகலுங்கொங்கையர்
கொண்ட மாமயலொடு மனமுங்கூர்விழி
வண்டொடு வண்டுறை மாலைமார்பினர்.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உ௰-வது "அறுவகைப்பட்ட" என்னுஞ்சூத்திரவுரை.



இச்செய்யுளில், விண்டொடு கொடுமுடி என்பதற்கு ஆகாயத்தைத் தீண்டுஞ்சிகரம் என யாம் பொருள் கூறியிருப்ப, இலகக்காரர் எவரினு மிக நுண்ணறிவுடையார்போல

"தேவலோகத்தைப் பிடிக்கும்படியான சிகரம்" என்கின்றார்.

பிடிக்குதல் கரத்திற்கன்றிச் சிகரத்திற் கியலாவாமாகலின், அது பொருந்தாதென்க.

அதா அன்று, மேருவு மெண்டிசைக்கிரிகளும் பிறபருவதங்களிற் சிறந்தவாகலின் வேறுபிரித்து, பிறபருவதங்களுடன் மேருவினது வீற்றையுமழியச்செய்து எண்டிசைக்கிரியொடு மிகலுமெனப் பொருள் கூறுவாருமுளர் என யாம் பிறர் மதங்கூறியிருப்ப, இதனை யுய்த்துணராது,

"மேருவுமெண்டிசைக்கிரியுங் கூறிய பிற்றைப் பிறபருவதங்களையுமென வேறெடுத்தோதற் பயனில் கூற்றாம்" என்கின்றார்.

எண்டிசைக்கிரி யென்பதை அஷ்டபருவதங்களென்றறியாது, எட்டுத்திசைகளிலுமுள்ள எல்லா மலைகளையு மென வைத்துக்கொண்டார்போலும்!

அதா அன்று, கூர்விழி வண்டொடு என்பதை உருவகமாக ஆசிரியர் கூறியவாறு, கூரியவிழிகளாகிய வண்டுகளோடு என யாம் பொருள்கூறியிருப்ப, அதனை மறந்து, வண்தொடு எனச் செய்யுளைக் கலைத்து, வண் என்பது தெளிவென்றும், தொடு என்பது உண்ணலா

லென்றும் பொருள் படுத்தினதன்றி, "பருவத்தை யடைதலா னிகழு மின்பத்தை வண்ணென்றுகூறினாராசிரியர்" என ஆசிரியர் மீதும் அறியாமை யேற்றுகின்றார். இதனைக் கற்றோர் கவனிக்க.

அதாஅன்று, யாம் அதனை உருவகப் பொருட்டாவுணா கூறினமைபற்றி

"இங்ஙனமாகுமேல் மாலையின் சிறப்பன்றித் தலைமகன் சிறப்பாகாமையானும், அங்ஙனந் தலைமகன் சிறப்பே கூற லாசிரியர்க் குடன்பாடாகலானும் அவருரை பொருள் வியப்பின்றி முடிர்ததாதலினது பொருந்தாதென மறுக்க" என்கின்றார்.

இங்ஙனஞ் சிறந்தமாலையையுடையார் எங்ஙனஞ் சிறந்தாரென விளங்கக்கிடப்பது அவரறிவிற்குப் புலப்பட்டிலைபோலும்!

4. கொன்னுனை வெண்ணிறக் கோட்டுவாரணச்
செந்நிறக் குருதியிற் றிமிர்ந்துவாய்கழீஇ
மின்னவிர் கணமணி விளங்குமாமுடி
யொன்னலருயிரை மேய்ந்துறங்கும் வேலினர்.

இச்செய்யுளில் திலகச்சாரர் "அருந்துமுன் வாயலம்பு மரபானே 'வாரணக்குருதியில் வாய்கழீஇ ஒன்னலருயிரைமேய்ந் துறங்கும்' என்றா ராசிரியர். இஃதறியாமுதலுரையார் 'ஒன்னலருயிரை மேய்ந்து வாரணக் குருதியில்வாய்கழீஇ உறங்கும்' என மாற்றிக் கூறியிடர்ப்படுவர். அங்ஙனம் படுமிடர் என்னையோ? எனின், வாயலம்பி யருந்துமரபானே அருந்தியபிற்றையு மலம்பு



மென்பது இலேசான்பெறும். அருந்தியபிற்றை யலம்புமென்றவழி யருந்துமுன்னரு மலம்புமென்பது தெற்றெனப் படாமையானென்க" என்கின்றார்.

ஒன்றைத் தின்னுமுன் வாய்கழுவுதல் மாந்தரியல்பு. படைக்கலங்கள் ஒன்றைக் கொல்லுமுன் கழுவுதல் வேண்டுமென்பது நியதியன்று. ஒருவன் படைக்கலத்தை யோங்கி ஒன்றைக்கொல்லத் துணியின், முந்தி அப்படைக்கலத்தைக் கழுவிக்கொள்வானுமல்லன். கொன்றபின்னரே உதிரக்கறைபோகக் கழுவுவான் என்பது வெளிப்படை. இதுவே பலநூற்றுணிபாம். அல்லதூஉம், மாந்தரியல்பையே படைக்கலத்திற்கும் வைத்துக்கொள்வோமாயினும் உண்டவெச்சிலைக் கழுவுதற் கூறற்பாலதன்றி, உண்ணுமுன் கழுவுதல் வேண்டுமென்பது அப்பாலதன்றாம். அவகாசமற்ற வமயத்து வாய்கழுவானுண்டானுங்கூடும் உண்டபின்கழுவுதல் எவ்வமயத்தும் வேண்டற்பாலதாம. ஆகவே, ஒழுக்கத்திற் சிறந்தாராகிய அப்துல்லாவின் கைவேல் ஒன்னலருயிரை மேய்ந்து அவ் வெச்சில்வாயுடனுறங்காது வாரணக்குருதியில் வாய்கழீஇச் சுத்தமா யுறங்குமென்பதே ஆசிரியர்க்குடன்பாடென் றுணர்க. இது,

* "வென்றவாளின் மண்ணே டொன்ற" என்னும் விதிபற்றியதென்க. அன்றியும், † "மாணார்ச்சுட்டிய வாண் மங்கலமும்" என்பதானும்பெற்றாம்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௯௩-வது சூத்திரம்.

† ௩௬-வது சூத்திரம்.

அதாஅன்று. கணமணியென்பதற்கு மணிக்கணமென்றும்; அவை நவமணியென்றும் யாங்கூறியதனைப்பயனில்கூற்றாமென்றுவரைந்து, மணியென்றபொதுமையே நவமணிகளையுமுணர்த்தும், கணமென்பது திரட்சியாமென்கின்றார். கணமென்பது கூட்டத்தையும் இனத்தையுமுணர்த்துமுரிச்சொல்லாகலின் ஈண்டது இனத்தையுணர்த்திற்றன்றி, திரட்சியையுணர்த்தாதென்றறிக. மணிக்கணம், கணமணி என்பனவற்றிற்குத் திரண்டமணியென்றெழுதியிருப்ப எந்தவுரையிற்கண்டாரோபேதையர்.

5. முடங்கலங்கைதழுள்ளெயிற்றுவெண்பணிப்
படங்களாயிரத்தினும் பரித்தபாரெலா
மிடங்கொள்பூத ரப்புயத்திருத்தியேதிலார்
மடங்கலேறெனு மனவலியின்மாட்சியார்.

இச்செய்யுளில், ஆன்றோர் புராணங்களுள் அரசனைவியந்துகூறுமிடத்துப் பூமியைப்புயத்திற்சுமந்தோனெனக்கூறப்பட்டிருப்பதற்கொப்ப ஆசிரியர் "பாரெலாம்—புயத்திருத்தி" என்றார். அதுபற்றியே பூமிமுழுவதையும் புயததின்கண்ணிருத்தினவர் என யாம் பொருள்கூறினேம். திலகக்காரர் அதனை யாம் வாளாகூறினமென்றுமறுத்து "பாரெலாம்—பூலோகமெல்லாம், புயத்து—புயத்தின்வலியை, இருத்தி—இருத்தினவர்" என்கின்றார்.

பூமியைப்புயத்திற்சுமந்தோன், இருத்தினோன் என ஆன்றோர்வழங்கிய செய்யுட்களநேகம் பலபுராணங்களிலும் மலிந்துகிடக்கின்றன. அவற்றைக்கற்



றோர் அறிவர். அவர்க்கு எடுத்துக்காட்டுவேமேல், விரிவாம் அவற்றையும்பழுதென்பர். ஆனால், பலரால்வியந்தோதப்படும் "புதூகுஷ்ஷாம்" என்னும் புராணத்து, ஜபலாமுதற்போர்புரிபடலத்தில் "மறக்கோல்வளையவுலகடொறைமறத்தோள்சுமந்து பலன்பயவா, கிறக்கில்" என்பதற்கு யாதுபொருள் விரிப்பரோபேதையர்.

அல்லதூஉம், பாரெலாமென்பதற்குப்பூலோகமெல்லாம் என்கின்றார். எல்லாமென்பது எங்குமென்னும்பொருளென்பது அவர்கருத்து. அங்ஙனம் எல்லாமென்பது எங்குமென்றுபொருள்படுமா? புயத்திலிருத்தி என்பது ஏழாம்வேற்றுமைத்தொகையாய்ப் புயத்திருத்தியெனநிற்க, அதனைப்புயத்தின்வலிமையையிருத்தி என வலிமையென்னுமொருசொல்லை எந்தவிதிபற்றி ஆண்டுவருவித்தாரோ! புயத்துஎன்றால் புயத்தின்வலிமையெனப்பொருள்கொள்ளல் ஆருவ திலச்சணம்போலும்! வலிமையென்பதை ஆசிரியர் அதற்குள் மறைத்துவைத்திருப்பதை எங்ஙனங்கண்டு பிடித்தாரோ ஆச்சரியம்! இதனைக்கற்றோர்கவனிக்க.

6. மாக்கடனெடும்புவி வளைந்தவன்கலி
நீக்கியவெண்குடை நீழலோம்புவோர்
வீக்கியகழலடி வேந்தர்பொன்முடி
தாக்கியமறுச்செழுங் கமலத்தாளினர்.

இச்செய்யுளில்ஆசிரியர் "வெண்குடைக்கீழ்கடன்மலையடங்க" எனப்பின்னுங்கூறுமாறு, குடிபுறங்காத்

தோம்பற்கெடுத்தகுடையென்பதுதோன்ற "* ஈடைமிகுத்தேத்தியகுடைநிழன்மரபும்" என்றபுறப்பொருள் விதியானே, மாக்கடனெடும்புவிவளைந்த வன்கலிநீக்கிய வெண்குடை நீழலோம்புவோர்என்றூர். அதுபற்றியே பெரியகடலாற்சூழப்பட்ட நெடியபூமியை, யாண்டும்வளைந்த வலியவறுமையை நீககினவெள்ளைக்குடையினது நிழலாற்காப்பவர் என யாம்பொருள்கூறினேம். திலசக்காரர் இதனையுய்த்துணராது, பூமியைவளைந் தவலியவறுமையை, வெள்ளைக்குடையினது நீழலால்காப்பவரெனயாங்கூறினதாகமருண்டு,

"வாளாமயங்கியிடர்ப்படுவர் முதலுரையார், என்னேயோவிடர்! எனின், பஞ்சத்தை நீக்குதல் தியாகத்தினது இயற்கையேயன்றி வீரத்தினதியற்கையன்றென்பதுவெளி" என்றும், பிறவும்பிதற்றுகின்றூர்

யாம் புவியையோம்புவோரெனக் கூறினேமன்றி வன்கலியை யோம்புவோரெனக்கூறினேமல்லேம். எம்முரையைக்காண்க "† எல்லாவுலகுமேவியவெண்குடைச்செம்பியன்" என்றூர்பிறரும்.

அதாஅன்று, ஓம்புவோர் என்பது தெரிநிலைவினையாலணையும்பெயராய் அப்துல்லாவை யுணர்த்திநிற்ப, அதனைமறுத்து, குறிப்புமுற்றெனக்கொண்டு, ஓம்புவோராகிய வேந்தர்களது என்று வேந்தரென்பதோடு முடிக்கின்றூர். அதுபொருந்தாமையறிக.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௬௬-வது சூத்திரம்.

† வீரசோழியம், சந்திப்படலம், ஏழாவதுகாரிகை.



அதாஅன்று, வன்கலிஎன்புழிக் கலியென்பதனைப் பகைவரின் அச்சமென்கின்றூர். அது பொருந்தாதென்பது மேற்காட்டியவாற்றுனுணர்க.

பின்னும் விரிப்பிற் பல்குமாகலின் அவருரையானறிக.

7. வரபதியுலகெலாம் வாழ்த்துமக்கமா
புரபதிக்கதிபதி யென்னும்பூபதி
பரபதியரசர்கள் பணிந்திறைஞ்சிய
நரபதியப்துல்லா வென்னுநாமத்தார்.

இச்செய்யுளில், வரபதியென்பதற்கு வரத்தையுடையநகரமென்றும், மக்கமாபுரபதியென்பதற்கு மக்காவாகிய ராஜதானிநகரமென்றும், அதிபதியென்பதற்குப் புரபதிக்கதிபதி யென்றமையான் அந்நகரத்திற்கு அதிபதியென்றும்; பூபதியென்பதற்குப் பூமிக்கரசரென்றும், பரபதியரசர்களென்பதற்குப் பலநகரங்களினரசரென்றும், நரபதியென்பதற்கு மனிதபதியென்றும் ஆசிரியர்கருத்தின்படியே யாம்பொருள்கூறியிருப்ப, திலகக்காரர் பொருள்கிடக்கை நோக்காது ஒன்றைவிட்டொன்றிற்பாயும் தமதியற்கைக்கேற்ப, வரபதியென்பதற்கு "ஆசிர்வாதத்தையுடைய தலங்களமைந்திராநின்ற" என்றும், மக்கமாபுரபதிக் கதிபதியென்பதற்குரை கூறுதுநிறுத்தி, பரபதியரசர்களென்பதற்கு "பரமண்டலத்துத்தலைவர்கள்" என்றும், அதிபதியென்பதற்குத் "தலைவர்களென்றுசொல்லும்". என்றும், பூபதியென்பதற்கு "அரசர்கட்கும்" என்றும், நரபதியென்பதற்கு "நராதிகட்கு மொளிவுபோலும்" என்றும்,

"பரபதியரசர்கள் பணிந்திறைஞ்சிய மக்கமாபுரபதி" எனச் சேர்த்தும் பொருள்கூறினதுமன்றி,

"இக்கருத்தறியாது முதலுரையார்—எனப்பொருள்வரைந்தார். இவர் பூமிபதி மனிதபதி என்பதனையுறும் இடரறியாது வாளாமயங்கிப் புத்தகமுடிவதொன்றே முடிபெனப்போந்தார்போலும்" என்றும் பிறவுங்கூறுகின்றார்.

அவர்கூற்றுக்களுள் ஏனையநிற்க, நரபதியென்பதற்குப் பொருள் "நரர்ஆதிசட்கும் ஒளிவுபோலும்" என வெகுநீளமாகவெழுதுகின்றாரே பேதையர். நரபதியென்பதென்னதொடர்? நரம் என்பது நராதியுள்ளவெல்லாவற்றையு முணர்த்திநிற்கும் ஒருஅதிசயமான மொழிபோலும்! இங்ஙனமுள்ளபேதையர் மேலெழுதியபலவுமெழுதி எம்மையிகழப்போந்தது யாதுபற்றியோ! கற்றோர் ஆய்க.

8. செழுமழை முகிலெனவமுதஞ் சிந்திட
வழிகதிர் நபியெனவகுத்த பேரொளி
பொழிகரத்தப்துல்லா விடத்திற் பொங்கியே
பெழிறரு திருநுதலிடத் திலங்குமே.

இச்செய்யுளில், நபியெனவகுத்த வழிகதிர் பேரொளி, பொழிகரத்து அப்துல்லாவிடத்தில் செழுமழை முகிலென வமுதஞ்சிந்திடப் பொங்கி, எழில்தரு திருநுதலிடத்து இலங்கும் என ஆசிரியரமைத்த வாறறியாது திலகக்காரர்,



"வடியாநிற்கும் பிரகாசத்தினையுடைய முகம்மது நபியென்று ஒப்பறப்பிரிக்கப்பட்ட பிரபையானது, செறிய மழையைப் பெய்யாநிற்கும் மேகங்களைப்போல முத்தியைச் சிதையுற வீசுகின்ற கையினையுடைய அப்துல்லாவினது உள்ளத்தின்கண் சென்று பிரவாகித்து, அழகுவிளங்காநிற்குந் தெய்வீகத்துவ நெற்றியினின்று பிரகாசிக்கும்" என்கின்றார்.

அவர் சிறிதும் ஆராய்வின்றி, அமுதமென்பதற்கு முத்தியெனப் பொருள்கொண்டு, மழைமுகிலைக் கைக்கு உவமையாக்கி, "முத்தியைவீசுகின்றகை" என விபரீதார்த்தம்பண்ணுவது மன்றி, எம் உரையைப்போலியாம் என்று மிகழ்கின்றார். முத்தியென்பதைக் கை எங்ஙனம் வீசுமோ தெரியவில்லையே? இது பரமரகசியம்போலும்!

ஆதாஅன்று, "நபிபெருமானார் கடவுளன்றியறிதற்கமையாத் தவப்பேற்றினையும் ஒப்பின்றியெவற்றினுங் கலவாத்தூய்மையு முடையவராய்ப் பிரிக்கப்பட்டவரென்பது தோன்ற வகுத்தபேரொளியென்றார். இக்கருத்தறியாது, வகுக்கப்பட்ட பேரொளியானது வகுத்தற்கிடமாயதோர் வஸ்துவைப்பற்றி யல்லதுவாராது; ஆகவே அத்தொழில் நிகழ்தற்கிடமாயவவ்வஸ்து பேரொளிவிற்கு ஆதியாயும் அப்பேரொளினுஞ் சிறப்புடையதாயும் ஆகுமன்றோ! ஆதலினாலே அப்படி நபிபெருமானினுஞ் சிறப்புறுவது கடவுளேயொழிய பிறயாவுள! எனக்கருதி யவ்வஸ்துவே கடவுளாதல்வேண்டுமெனுந் தவறுளம்பற்றி வகுத்த பேரொளியென்பதைக் கடவுள் தன்னொளிவினின்றுபிரித்த ஒளிவென

வேதநூலோடுமுழுதூஉ முரணுரைவரைந்து யிடர்ப்படுவர் முதலுரையார்" என்றும, அதனல்வரும் இடர் இன்னதென்றுங்கூறுகின்றார்.

யாம் அவரைப்போல வேதநூற்கடலின் கரைகாணாமையால், அதனோடுமுரணுரைவரைந்தேமேயாகுக. ஆயினும், நபிபெருமானாரது பேரொளியை யாங்கூறியதுபோலவே அவரும் பிரிக்கப்பட்டதென்று கூறுகின்றாராகலின், அவ்வொளி யாங்கூறுமாறன்றி வேறாக, இன்னபொருளினின்று இன்னவினைமுதலாற் பிரிக்கப்பட்டதென வெடுத்துக் காட்டியன்றோ யாந்தவறுளம் பற்றியதனைத் தாபித்தல்வேண்டும்? அங்ஙனமன்றி, நேர்நபடிக்கூறுகின்றார். அவரும் பிரிக்கப்பட்டதென்றே கூறியபடியால், யாங்கூறியதல்லாத வேறெந்தப் பொருளில் எந்தவினைமுதலாற் பிரிக்கப்பட்டதெனக் கூறுவரோபேதையர்? இங்கு எங்கூற்றைமறுக்க வேண்டுமாயின் இங்ஙனந்தான் மறுக்க அவருக்கு வழி வாய்த்தது? ஆச்சரியம்! வகுத்தவென்புழி வகுக்கப்பட்டவெனப்பொருள் சொள்ளாது மறுக்கலர்மே. அஃதறியார்போலும்!

அதாஅன்று, அப்துல்லாவிடத்தி லென்பதற்கு இடமென்பதை உடன்முழுதுமென யாம்பொருள்கூறியதனை மறுத்து, இடமென்பதை மனமெனக்கொண்டு

நபிபெருமானாரது பேரொளி அப்துல்லாவினது உள்ளத்தின்கண்சென்று பிரவாகித்து" எனப்பொருள் கூறுகின்றார்.



ஒளி பிரவாகிக்க மனம் நிலைக்களனுமா! இதனைக் கற்றோர் கவனிக்க. இடமென்பது மனந்தானெனபதற் குநியாயமாக,

"உலகெலாஞ் சிறந்தானென்புழிப் பாழ்ந்தலங்களினுஞ் சிறந்தானென்பதன்று. பொழிலுந்தொழிலும் மனையுங்கொண்ட மானிடாதிகளைப் படைத்த விடத்திலே சிறந்தானென்பதுபோல அப்துல்லாவை யுலகம் போற்கொண்டு அதிற் சிறந்த புலாதிகளைப்பற்றி அப்புலாதிகளிற்சிறந்த வுள்ளத்தைக்குறித்து நின்றதென்க" எனத் திருட்டாந்தங் கூறுகின்றார்.

அப்துல்லாவின் உள்ளந்தவிர மற்ற அங்கவுறுப்புகளனைத்தும், உலகத்தில் மானிடாதிகள் சஞ்சரிக்குமிடந்தவிர மற்றவை பாழானாற்போலப் பாழாயினபோலும்! தாட்டாந்தமும் திருட்டாந்தமும் வெகுநேர்த்தி. இங்ஙனஞ் சொல்வதன்றோ கல்வித்திறன்!

நபிபெருமானாரது ஒளி மானிடவடிவெடுத்தற்குச் சுக்கிலமாதல் வேண்டுமாகலின், அச்சுக்கிலம் உதிரத்தாலாம். ஆகவே, அவ்வொளி உதிரத்திற்கலந்து உடலெங்கும் பரவிநின்றதாகலின், உதிரத்தன்மையாகவே ஆசிரியர் பொங்கியென்றார். இனி, ஆகாரங்களினின்று பிரிகின்ற சத்து அன்னரசமாய், அதினின்று பிரிகின்ற சத்து உதிரமாய், அதினின்று பிரிகின்ற சத்தே சுக்கிலமாதலின், அவ்வொளி உடன் முழுதும் பொங்குமென்பதே உலகத்திற்கொப்பமுடிந்ததென்க. இதன்விரிவகையை எம்மையொத்த வல்லார்வாய் கேட்டறிக.

9. அயிலுறை செழுங்கரத்தப்துல்லாவெனும்
பெயரியகளிறுக் கோர்பிடியும் போலவ
ருயிரென விருந்தசைந் தொசிந்த பூங்கொடி
மயிலெனு மாமினுவென்னு மங்கையே.

இச்செய்யுளில் ஆசிரியர், செழுங்கரத்து அப்துல்லா எனும் பெயரிய களிறு எனத் தெளிவா யமைத்திருப்ப, திலகக்காரர் அதனை அறியாது மயங்கி "கரத்தினையும் பெயரினையு முடையகளிறு என" உம்மைகளை வாளாவிரித்து இடர்ப்படுவதைக் காண்க.

அதாஅன்று, பிடியும்போல ஆவியும்போல விருந்து, அசைந்து ஒசிந்த பூங்கொடி எனத்தெளிவாகவுரைத்த ஆசிரியர்க்கு மாறாய், இருந்தென்னும் வினையெச்சத்தை இருந்தவெனப் பெயரெச்சமாகக்கொண்டு, அதன் அகரம் விகாரவகையாற்றொக்கி இருந்து என நின்றதெனக்கூறி மருள்கின்றார். எச்சங்களையும், அவற்றின் முடிபிலக்கணங்களையும் அறியார்போலும் பேதையர்.

அதாஅன்று, "ஓர் என்பதை எண்ணுப்பெயராய்க்கொள்வர் முதலுரையார்; ஆமினுவை அப்துல்லாவுக் குயிரென்றமையானும் பிறவாற்றானும் அது ஆசிரியர்க்குடன்பாடாகாவென மறுக்க" என்கின்றார்.

உயிரும்போல வென்றமையான், ஒரு பிடியும்போலவென ஒரு எண்குறித்தே நிற்பதோர்ந்துணர்க. பிடியென்பது பெண்யானை யாமெனச் சிறுவரு மறியக்கிடக்க, அதனை அவர் ஒருபாரமாக நினைத்து "பிடியென்பெண்பெயர் யானைமேற்றே" என்னுஞ்சூத்திரத்தைவாளாவரைந்தார். "நானுந் தொல்காப்பியம்பார்த்திருக்கிறேன்" என நாலுபேரறிய அறிவிக்குங் கருத்துப்போலும்.



அதாஅன்று, "பூங்கொடிஎன்பது உவமைசிலேக்கணத்துப் பிறந்த அன்மொழித்தொகை" என்கின்றார்.

பூங்கொடிபோலும் ஆமினுவென நிற்கும் உவமவாகுபெயரை அன்மொழித்தொகையென்றுகூறப் போதித்த அவரதிலக்கணாசிரியர், அடுத்தசெய்யுளில் பொற்கொடியென்பதையும் அன்மொழித்தொகையென்னாது ஆகுபெயரென்றுகூறப் போதித்தகாரணம் யாதோ! பூங்கொடிக்கும் பொற்கொடிக்கும், ஒன்று அன்மொழித்தொகையாகவும் ஒன்று ஆகுபெயராகவும் நேரிட்டபேதம் என்னேயோ! அப்பேதம் பூ பொன்என்பதில் உண்டுபோலும்! பூங்கொடி அன்மொழித்தொகையாயின் பூப்போலுங்கொடியினையுடையாளென விரியுமன்றி, "அழகியகொடிபோலுமிடையினையுடையா" ளெனவிரிதல் விபரீதமாமே. துடியிடைஎன்றாற்போல உடையாளென்பதுமாத்திரந்தொக்குத் தொகையாய்நிற்குமன்றி, இடையென்பதுங் கூடச்சேர்ந்தாதொக்குநிற்கும்? ஒருக்கால் இது ஆறுவதிலக்கணம்போலும்! இனி, அன்மொழித்தொகையையும் ஆகுபெயரையும் பற்றி அவர்பின்னுங்கூறுகின்றார்; யாம் ஆண்டுவிவரிக்குதும்.

அதாஅன்று, அவருயிரெனவென்புழி, அவரது யிர்போலவுமென வுரைகூறினவர், அதற்கு விருத்திகூறப்புகுந்து, தான்புக்கவுடம்பையன்றிப் பிறிதோருடம்

பை வேண்டாதமானிடவுயிர்க்குத் தான்விரும்பியவு டம்பிற்புக் கியங்கும் அக்கரவுயிரை உவமைகாட்டிப் ப லகடாவிடைகளும்பரப்பித் தம்மைப்பருப்பிக்கின்றார். இதனைக் கற்றோர்கவனிக்க.

அதாஅன்று, "இச்செய்யுளான், 'அதுவே தானே அவளே' என்றவிதிபற்றிவந்த காந்தருவமணமி னைத்தென்பது கூறினாராகலி னறிந்தடங்குக" என்று வற்புறுத்துகின்றார்.

அவர்கூறும் அகப்பொருட்சூத்திரம் "* அன்பி னைந்திணைக்களவெனப்படுவ—தந்தண ரருமறைமன்ற லெட்டினுள்—கந்தருவவழக்கமென்மனார்புலவர்" என் னுஞ்சூத்திரத்தை அதுவேயெனச் சுட்டிநிற்கின்றது. இச்சூத்திரம் காந்தருவமணமானது ஒருவனுமொருத் தியுங் களவிற்கூடிப்புணர்தலேயாம் என்பதையுணர்த் துவதாகலின், அவர்கூறுமாறு காந்தருவமணமென்பது களவிற்புணர்தலாம். அப்துல்லாவும் ஆமினாவும் மார்க் கவிதிப்பிரகாரம் பலரறியவிவாகஞ்செய்து ஒத்துவாழ்ந் திருப்பதைக் கூறுஞ்செய்யுளால், களவுப்புணர்ச்சியாகி ய காந்தருவமணமினைத்தென்று ஆசிரியர்கூறுவதாகச் சொல்லப்புகுந்தது யாதுபற்றியோ! அப்துல்லாவும்ஆ மினாவும் காந்தருவவிவாசம் பண்ணிக்கொண்டதாக அ வர்கற்ற பாரக்கிதாபுகளிற் கண்டார்போலும்! இங்கு மாத்திரமன்று; பின்னும் இதைப்பற்றிச்சொல்லுகின் றார். யாம் அங்கும்விவரிக்குதும்.

10. இற்புகுந்தெழுமதி யிலங்குமாமணி
விற்புருவக்கடை மின்கணுயகம்

* இறையனாரகப்பொருள், முதலாவதுசூத்திரம்.



பொற்பெலாம்பொதிந்தபொற் கொடிநற்பூவையர்
கற்பெலாந்திரண்டுருக் கொண்டகன்னியே.

இச்செய்யுளில் திலகக்காரர், எழும் என்னும்பெய ரெச்சத்தை உதயமாகியென வினையெச்சமாகப் பொ ருள்கூறினதுமன்றி, மாமணி யென்பதன்கண் கிடந்த அடைமொழியாகிய இலங்குமென்பதைக்கெடுத்து மதி யென்பதன்கண்கூட்டி யிடர்ப்படுத்துகின்றார். இல்பு குந்து எழும் மதி இலங்கும் மாமணியென ஆசிரியா நிறுத்தமுறையாற்பொருள்கொள்ளுதல் இழுக்கென்று ணர்ந்தார்போலும் பேதையர்.

அதா அன்று, மேகத்தின்கண் புகுந்தெழுஞ்சந்தி ரனைப்போல, மனையாகிய மேகத்தின்கண புகுந்தெழும் ஆமினாவாகிய சந்திரனென அச்சந்திரனோடொற்றுமை தோன்றக்கூறினாராசிரியர் என்னும் எங்கூற்றை விளங் கிக்கொள்ளுந்திறனின்றி,

"அக்கூற்றில் ஒற்றுமைதெற்றெனப் படாமை யாற் பொருந்தாதென்க" என்கின்றார்.

அவரறிவிற்குப் புலப்படாதவையனைத்தும் உல கத்திற்குப் பொருந்தாதனபோலும்!

அதா அன்று, வில்லைப்போலும் புருவக்கடையை யுடைய வெனத் தெளிவாகக்கூறிய எங் கூற்றைம றுத்து,

"கடையென்பது பொருளின்றிக் கடைப்படுவ தான் அதூஉம் பொருள்வியப் பின்றென மறுக்க'

என்று மறுத்துவிட்டு, வில்லினைக் கடைசெய்யும் புருவம் எனப்பொருள்கூறுகின்றார். கடைக்கண் கட்க புருவம் எனப்பொருள்கூறுகின்றார். கடைக்கண் கட்க டையெனநிற்குமாறு, கடைப்புருவம் புருவக்கடை யெனநிற்பதை அவருக்குணர்த்துவாரில்லைபோலும்!

அதா அன்று, பூவைபோல்வாரைப் பூவையரென உவமவாகுபெயராற்கூறி, அங்ஙனம்பொதுப்படுத்தா து கற்புடையாரைப் பிரித்தற்பொருட்டு நல் என அடைகொடுத்து இவ்வுலகப்பெண்களையே விளக்கிய ஆசிரியர் கருத்திற்கேற்ப யாம் பொருள்கூறியதனைமறுத்து, பூவையரை அரம்பையரென்கின்றார். ஒப்பில்லாத அரம்பயரைப் பூவையரெனக்கூறுதல் ஒருவாற்றானும் பொருந்தாதென்க.

அதாஅன்று, "என்றுங் கற்புடையமகத்துவம் அரம்பையர்க்கே யுடையவாகலின்" என்கின்றார்.

ஆயின், மானிடப்பெண்கள் சிலகாலம் கற்புடையராயிருந்து, பின் அச்சுற்பு அழிவுறுவர்போலும்! அவர் கூற்று மானிடப்பெண்கட்கு என்றுங் கற்புடையமகத்துவமில்லையென்பதை நன்குவிளக்குகின்றதாகலின், மானிடப்பெண்கள் பத்தினியல்லரோ! இதென்ன விபரீதம்? இதனைக்கற்றோர் கவனிக்க.

11. அறத்தினுக்கில்லிட மருட்கோர்தாயகம் [ங்
பொறுத்திடும்பொறுமையிற் பூமிக்கெண்மட
குறைப்பெருங்குலத்தினுக் கொப்பிலாமணி
சிறப்பினுக்குவமை யில்லாதசெல்வியே.



இச்செய்யுளில் ஆசிரியர், பொறுத்திடும் பொறுமையிற் பூமிக்குஎண்மடங்கு என்றதற்கேற்ப, அதிகமானவர் என்பதனை அவாய்நிலையான்வருவித்து, பொறுக்கத்தக்க பொறுமையிற் பூமிக்கு எட்டுப்பங்கதிகமானவரென யாம் பொருள்கூறியதனைத் திலகக்காரர் மறுத்து "பொறுமையில் பூமிக்கு எண்மடங்கு பொறுத்திடும் உறை" எனச்சொற்களைமாற்றி, உறையென்பதனை இடமென்று இடருழப்பதுமன்றி, யாம் எமது அறியாமையை விளக்குவதாக இகழ்கின்றார். கற்றோர் ஆராய்க.

அதா அன்று, "பொறுக்கத்தக்க பொறுமையாலென்புழிப் பொறுக்கத் தகாதபொறுமையுமுள என்பது அருத்தாபத்தியாற்பெறுதலின்" என்கின்றார்.

அவர் கற்றவைகளுள் அருத்தாபத்தி யென்பதும் ஒரு பிரதானகல்வியே. இவ்வித அருத்தாபத்தியைப் பின்னும் பலவிடத்தும் எமக்குக்கற்பிக்கின்றாராகலின், அதற்கு அங்கங்கு நிராகரணங்காட்டுதும். ஆனல்,பொறுமையின் றன்மையை விளக்குவான் வேண்டிப் பொறுத்திடும் பொறுமை என்றாராசிரியர். தொனித்திடுந் தொனி, நாறிடுநாற்றம், அடித்திடுமடி, இனித்திடு மினிப்பு என்னுந்தொடர்க்கத்தனவாய இவற்றையறியாது அவர் இடர்ப்படுவது பரிதாபம்!

12. குணிப்பருங்குறைசியங் குலமென்றோங்கிய
மணிப்பெருங்கடலிடைவளருஞ்செல்வமே
தணிப்பிலாதெடுத்தெறி தரங்கமேனடு
பணிப்படாதெழுந்தசெம் பவளக்கொம்பனார்.

இச்செய்யுளில், ஆசிரியர்கருத்திற்கேற்ப, மதிக்கரிய குறைஷிக்குலமென்றுயர்ந்த முத்துக்களையுடைய பெரியகடலின்கண்வளர்கின்ற செல்வத்தைத் தணிவின்றி யெடுத்துவீசும் அலைக்கண்ணடுவே தாழ்வடையாது முளைத்தெழுந்த செம்பவளக்கொம்புபோன்றவர் என்று யாம் பொருள்கூறினதுமன்றி, செல்வமென்பதனை உபசாரத்தால் ஆமினாவெனக்கொண்டு குறைஷிக்குலமென்றுயர்ந்த பெரியகடலின்கண்வளருஞ் செல்வமானவர் என முடிப்பினுமமையுமென்றுங் கூறியிருப்ப, திலகக்காரர் இவைக்குமாறாகச செய்யுளைச்சிதைத்து, தரங்கமேல் நடுவென்புழி நடுவென்பது பூமியென்றும், தரங்கமென்பது, கடலென்றும் மணியென்பது நன்மையென்றும் மயங்கிக்கூறுவதுமன்றி,

“இச்செய்யுளை ‘அகன்றுபொருள்கிடப்பினும்’ என்றவிலக்கணவிதியாற் பொருள்கொள்ளாது யாற்றுநீரொழுக்குப்பொருள்கோளதாய்க்கொண்டு வாளாகூறுவர் முதலுரையார்” என்றுங்கூறுகின்றார்.

யாம் கொண்டுகூட்டாப்பொருள்கொள்ளாது யாற்றுநீரொழுக்காப்பொருள்கொள்ளும் அறியாமையைப்பற்றி முன்னுஞ்சொலில், இங்குஞ்சொல்லி, பின்னுஞ் சொல்லுகின்றார். கொண்டு கூட்டினாலன்றி எவ்வாற்றானும் பொருள்புலப்படாது சொற்களகன்றுகிடக்கும் செய்யுளையே ஏற்கும்வண்ணம் கொண்டுகூட்டிப்பொருள் கூறுதல் முறைமையன்றி, சொற்றொடர்பொருட்டொடர் பிளவுபடாது கதலீபாக இன்பமமைந்து நேரே பொருள்பயர்துநிற்குஞ் செய்யுட்களையெல்லாம்



பொருள்செல்லும்வழியிற் செல்லாது சீரழித்து முரணாய்க்கொண்டுகூட்டி, ஒருவாற்றானும் பொருந்தாவண்ணம் சொற்களைக்கலைத்து அங்கொன்றிங்கொன்றாகச்சேர்த்துப் பார்ப்பவர் நகைக்கப்பொருண்முடித்துக் காட்டுதலே முறைமையென்று அவர்கடைப்பிடித்தார். ஆகலின், நன்னூலிற் கூறப்பட்டுள்ள எண்வகைப்பொருள் கோட்களின் நாமமாத்திரமுணர்ந்தாரன்றி, அவற்றின் இயல்புணரார்போலும்! சீறாபாடிய ஆசிரியர் தம் செய்யுட்களைப் படிப்போர் முட்டுப்பாடுறக் கொண்டுகூட்டிவைத்திலர். அவசியவிடந்தவிர மற்றிடமெங்குமுள்ள எல்லாச்செய்யுட்களையு, வைதருப்பம் கௌடம் என்னும் இருநெறிகளுள் செறிவாதி பதின்குணங்களடங்கிய வைதருப்பநெறியால் தெளிவென்னுங்குணம்பற்றியே யமைத்திருக்கின்றன ரென்பதை அவருக்கு இலக்கணம் போதித்தவருமறிந்திலர்போலும்! அவர் இச்செய்யுளைச் சிதைத்ததோர் புதுமையன்று; பின்னும் பலசெய்யுட்களைக் கெடுத்திருப்பதைக் கற்றோர்க்கு அங்கங்கே காட்டுதும்.

**13.** இத்தகைக்குலமயிலாமினா வெனு
முத்தவெண்ணகைக் கனிமொழியுமோகனச்
சித்திரவப்துல்லா வென்னுஞ்செம்மலு
மொத்தினிதமுதமுண்டுறையுநாளினில்.

இச்செய்யுளில், திலகக்காரர் தமக்கேற்றவாறு புரட்டிப்பொருள்கூறுதலை யாதுகாரணத்தாலோ கைவிட்டு, எம்முரைக்கொப்பககூறினார். அங்ஙனங்கூறினோர் அம்மட்டோடடங்காமல்,

"இத்தகை என்புழி இ என்னுஞ்சுட்டுப் பொது வாய்ப் பன்னிருசெய்யுட்களையுங்குறித்து அப்துல்லா ஆமினு விருபாலருக்கும் பொதுவாய்நின்றது, இக்கருத் தறியாமுதலுரையார் இத்தகை என்பதை ஆமினுவுக் கே யுரித்தாக்குவர்" என்கின்றார்.

யாம், இக்கூறிய தகுதிகளையுடைய ஆமினுவும் அப்துல்லாவு மென அத்தகுதிகள் இருவர்க்கு முரித் தாமாறு தொடர்பாகப்பொருள்கூறி யுள்ளேமன்றி, அத் தகுதிகளை ஆமினுவுக்குரித்தாக வமைத்து, அப்துல் லாவுக்குரித்தாகாவண்ணம் பிளவுபடுத்திலேம். இதனை எம்முரையை நோக்குவார் நன்கறிவர். சிறந்த தலைவ னுந்தலைவியும் எனக்கூறுமிடத்து அச்சிறப்பு இருவர்க் கும்பொதுவாய் நிற்குமன்றி, தலைவற்கல்லாது தலைவிக் கேயுரித்தாய் நிற்குமென்னுந் துணிபு அவருக்கு எங் கிருந்து பிறந்ததோ! ஆச்சரியம்!!

அதாஅன்று, ஆசிரியர் ஈண்டு "ஒத்து" என்ற தனிமித்தம்,

"காந்தர்வமண மினைத்தென்றவா றென்றறிக. அதன்விதி முன்னர்க்கூறினும்" என்கின்றார்.

ஈண்டுக் காந்தருவமணத்தைக் கூறவேண்டியது நியாயமாமா? அப்துல்லா ஆமினு இருவர் மணமும் காந்தருவ மணந்தானென்பது அவர்கருத்துப்போலும்! நபிபெருமானார் தம் திருவாய்மலர்ந்து "நான் இசு லாம் மார்க்கப் பிரகாரம் முடிந்த விவாகத்திற் பிறந் தேனன்றி, விபசாரத்திற் பிறந்திலேன்" என்றுசொன்



னது, மதிகேடுள்ள இழிஞர் நபிபெருமானாருக்குமுன் நேர்வழியின்றி விக்கிரகாராதனைசெய்யுங் காலமாகலின், அக்காலத்தாராகிய அப்துல்லாவுக்கும் ஆமினுவுக்கும் பண்ணப்பட்ட விவாகம் நேர்வழியி லல்லாததாயிருக்கு மே. அவ்வித விவாகத்திற்றானே நபிபெருமானார் பிறந் தனர் என்று கருதுவரென்பதை அறிந்தன்றோ! இங் ஙனங்கருதல் பெரும்பாவமாம். இனி, ஆமினு புத்தை வணங்கினரெனக் கூறுவதும் இதனாலும் மறுக்கப்படு வது காண்க.

அதாஅன்று, இனி இச்செய்யுளூஉம் ஆற்றுநீர்ப் பொருட்கோளென மயங்கிப் பொருட்கொண்டிடர்ப்படு வர் முதலுரையார். அன்றியும்— எனவாளாப் பொருள் கூறுவர், அவரது அறியாமையை யாண்டாண்டு விரித் துக் காட்டுமேல்மிகப்பல்குமாகலின் சிற்சில விடங்களி லிவ்வாறு தொகைபடக்காட்டுவாம்; உய்த்துணர்க." என்று மனம்போனபடிச் சொல்லுகின்றார்.

நிந்திக்கும் இவ்வித நிந்தனைக்கு வதில்செய்யாமல், அவர்விரித்துக்காட்டுவரைக் கண்குளிரப் பார்த்துக் களிகூர்வதே எமக்குத் திருப்தியாம். ஆகலின் நிறுத் துகின்றேம்.

14. வீசுதெண்டிரைக் கடன்மலை யடங்கவெண்குடை
மாசிலாத சிங்காசனத்திருந்த சிக்கந்தர் [க்கீ
காசினிக்கரசியற்றுதல் கறுனையின்கால
மாசிலாக்கணக்கெட்டுநூற்றெண்பத்தோர்வருடம்.

இச்செய்யுளில் ஆசிரியர், சிக்கந்தர் என்பவர் மகா சக்கரவர்த்தி என்பதுதோன்ற, வாளா சிங்காசனத்தி

ருந்த சிக்கந்தரென்றது, வெண்குடைக்கீழ் கடல் மலை யடங்க ஆசிலாத சிங்காசனத்திருந்த சிக்கந்தர் எனவிதந்தும், அவர் அரசியற்றத் தொடங்கியகால முதற்கொண் டென்பதுதோன்ற, காசினிக்கு அரசியற்று காலம் எனப்பிரித்தும் தெளிவுற வமைத்திருப்பதற்கேற்ப யாம் பொருள்கூறியவைகளைத் திலகக்காரர் மறுத்து,

"வாளாக்கூறுமுதலுரை. என்னை? கடன்மலை யடங்க வாசனமிருந்த சிக்கந்தரென்றோதி, யாங்கேமறந்து 'பூமிக்கரசியற்றுங் காலத்தின்கணக்கு' என்றமையாலாசனம்வீற்றிருந்தகாலத்தி லரசியற்றல் ஒழிவுற்றிருந்தாற்போலே கிடந்து தெற்றனப் பொருட் படாமையானும் அரசு செய்யுங்காலத்தின் கணக்கு எனமுக்காலத்திற்கும் பொதுவாய்ப் பாட்டாற் கிளத்தலின் வருடமெண்ணற்கு முதற்கால மிஃதெனத் தோற்றாமையானும் அக்கூற்றுப் பாலர் கூற்றாமாகலி னிடர்ப்படுமென்க" என்கின்றார்.

அவர்கூறும் இக் கூற்றுக்களனைத்தும் ஆபாசமென்பதை எங்கூற்றானறிக.

அதா அன்று, அரசியற்றுகாலம் என வினைத்தொகையாகக் கூறிய ஆசிரியர்க்குமாறாய்,

"இயற்றவென்னும் வினையெச்சத்தின் ஈற்று அகரவுயிர் உகரமாய்த் திரிந்து நின்றது" என்கின்றார்.

அவர் இயற்று என்பதை இயற்றவெனத் திரித்து, அரசியற்றசிங்காசனத்திருந்த என்பதால் அரசியற்று



து வேறுக்கரும மியற்றவும் சிங்காசனத்திருத்தல் உண்டுபோலும்!

அதாஅன்று, ஆசிரியர் எட்டுநூற்று எண்பத்தோர்வருடம் என அமைத்தவாறே, யாம் எட்டுநூற்று எண்பத்தோராம் வருடமெனப் பொருள்கூறினேம். அவர் இதனை மறுத்து,

"வருடங்கள் எட்டுநூற்று எண்பத்து ஓர்" என முடித்துக்காட்டுகின்றார்.

ஒன்று என்னும் எண்ணின் விகாரமாகிய ஓர் என்பது "ஓர் வருடம்" "ஓர் மனிதன்" எனப் பெயரைத் தொடராது "வருடம் ஓர்" "மனிதன் ஓர்" எனத் தடுமாறி முடியுமென்பது ஆறாவதிலக்கணம் போலும்.

அதாஅன்று, காசினிக்கு என்புழி அதற்குவினையுடைமையான்வந்த நான்காவதை ஏழாவதாகக்கொண்டார்; அது பொருந்தாமைகாண்க,

15. கனைத்தமின்றெளித் தெழுத்தெனச்சிறக்குமக்காவி
னிரைத்தகார்க்குலந்திரண்டெனக்களிறுகணெருங்கி
யிரைத்தடர்ந்துமும் மதங்களைவாரிநின்றிறைத்து
வரைக்குலங்கள்போல் வந்ததற்கொருமுதல்வருடம்.

இச்செய்யுளில், திலகக்காரர் ஆசிரியர் கொள்கைக்கு மாறாகச் சொற்களை மாற்றி வாளாபொருள்கூறினது மன்றி,

"களைத்தமின் என்புழிக் களைக்கப்பட்டமின் எனப்பொருள்கூறி மயங்குவர் முதலுரையார் அங்ஙனமா மயக்கமென்னையோ? வெனின், வனைந்தகுடம் என்புழி வனைதற்றொழிலா லாயபயன் குடமாதல்போல மின்களைத்தற் றொழிலா லாயபயனன்று; ஆகவே யஃதோர் முதற்காரணப்பொருளாதலி னவருரை மயக்கமென்க" என்கின்றார்.

களைத்தமின் என்பது "பறித்தபூ" என்றாற்போலக் கருமக்காரகமாய் நிற்பதன்றி, வனைதற்றொழிலா லாயபயன் குடமானாற்போல மண்ணாகிய முதற்காரணத்தோடு நிற்பதன்றாம். மண்ணாகிய முதற்காரணத்தாற் குடம்காரியமானாற்போல ஒருகாரியம் ஆகாமையால், மின் முதற்காரணப்பொருளு மன்றாம். ஆகவே, அது கருமக்காரக மென்பதனை "* மேதகு நற்றொழில்" "† இரண்டாவதனுருபையே" "‡ கருத்துண்டாதல்" என்னும் விதிகளானறிக. ஆகலின், களைத்தற்றொழிலா லாங்காரியம் இனைத்தென்ப தோர்ந்துணர்க.

அதாஅன்று, "இதாஉம் பிரசாசத்தை எழுத்தென்னுங் காரியத்திற்குக் களைத்தற்றொழிலாலாஞ் சாயமென்னும் காரணம்போற்கொண்டு அஃதானெழுதிய சித்திரமென்னும் பொருட்படக் கூறுதல் வேண்டுமாயின் 'களைத்தமின்றெளித்தெழுத் தெனச் சிறக்கும்' என்றிருத்தற் பொருந்தாது. என்னை? களைத்தமின்

* வீரசோழியம், உபகாரகப்படலம், க—வது, காரிகை
† நன்னூல், பெயரியல், ௧அ—வது, சூத்திரம்.
‡ இலக்கணக்கொத்து, வேற்றுமையியல், ௰௯—வது, சூத்திரம்.



என்புழி மின்னின தியற்கைக்களைக்கப்பட்டதா யிருத்தல் வேண்டும்; அப்படி யஃதோர் களைக்கப்பட்டவஸ்துவன்று. களைக்கப்பட்டதென்றால் அதற்கோர் முதற்காரணமாயவஸ்து அவசியமாம். ஆகலின் அங்ஙன முதற்காரண மிஃதெனப் படாமையா னவருரை போலியா மென்க" என்கிறார்.

இனி, எழுத்தென்னுங் காரியத்திற்குச் சாயங்காரணமானாற்போலச் சித்திரங் காரியமா மிடத்து மின்னை காரணமாக ஆசிரியர் அமைத்தாராயினும், அதற்குக் களைத்தமின் றெளித்தெழுத்தெனச்சிறக்கும் என்றிருத்தலே பொருந்தும். என்னை, மின் களைக்கப்பட்டவஸ்துவன்றாயினும், இவ்வுவமம் "B கூடாவுவமம்" ஆகலின். இதனைவிட்ட இலக்கணையென்றும், சமாதியென்றுங் கூறுப. ஆகவே, முன்னர்க்கூறியவாறு கருமக்காரகமாய் நிற்கும் களைத்தமின் என்பதற்கு ஓர் முதற்காரணம் அவசியமன்றாம். என்னை? "ஆறுந்தருவது வினையே" என்ற நன்னூற் சூத்திரத்தில் சங்கரநமச்சிவாயப் புலவர் விரித்தனர்; ஆண்டுக்காண்க.

அதாஅன்று, தெளித்து எழுத்தென என்பதற்குத் தெளியச்செய்து எழுதிய சித்திரம்போலும் என யாம் பொருள்கூறினதுமன்றி, தெளித்து என்பது தெளித்தவென்னும் இறந்தகாலத்துப் பெயரெச்சத் தகரவொற்றின் மேனின்ற அகரவுயிர் உகரவுயிராய்த் திரிந்து "புகழ்ப்புரிந் தில்லில்லோர்க்கில்லை" என நின்றாற்போல நின்றதெனக்கொண்டு, தெளிந்தவத்தெளிவா

B தண்டியலங்காரம், பொருளணியியல், ௫-சூத்திரம்.

னெழுதியவெனக் கூறினுமமையும் எனவுங் கூறியிருப்ப, இதனால் அவர்,

" வாளாப்போவர் இவ்வாறு கூறலினு மவர்க்கு இவ்விலக்கண மியாமறிந்தவற்றுளில்லை எங்குள்ளதோ வென்றையுற்றடங்குதல் எளிதாமெனக்கூறி யவ் விலக்கணமுந்தவறென மறுகக " என்கின்றார்.

யாமறிந்தவற்று ளில்லாது ஆறுவதிலக்கணத்திலுள்ள அவரறிந்த விதியை வழக்கம்போலக்காட்டி யன்றோ இதைத் தவறெனத் தீர்த்தல் முறைமை. அங்ஙனமின்றி, இத்தனையும் வாளாவரைந்தமை பேதைமையன்றோ.

அதாஅன்று, யானைக்கலக நிகழ்ந்த ஐம்பத்தோராந்தினம் நபி நாயகமவர்கள் பிறந்ததான், அவர்கள் கருவாய்த்தரித்தது அக்கலகத்திற்கு ஒருவருடத்திற்கு முந்தி யாகலின், ஒருமுதல்வருடம் என்பதற்கு ஒருவருடத்திற்கு முந்தியென்பதே கருத்தென்றும், முதலுதல் ஆதியாதலாகலான் அவ்வருடத்தையே யானைக்கலகத்திற்கு முதல்வருடமென்று கொண்டு இங்ஙனமுரை கூறினுமென்றும் மிகத்தெளிவுறக் கூறும் எங்கூற்றை விளங்கிக்கொள்ளுந் திறனின்றி, யாம் " மறப்பெனுங் கள்வன்வாரிக் கொண்டனன் " என்பதுபோல மறந்து, எமக்கே உடன்பாடு மின்றி, போலிக்கூற்றாகக் கூறினமென்று பழிக்கின்றார். அவர் இங்ஙனம் பழிக்குமிடத்துக்காட்டும் நிராதரா நியாயங்களே அவரைப்பழிக்குமென்று யாம் ஒழிகின்றேம்.



அதாஅன்று, ஒரு என்பதும், முதல் என்பதும் ஒரே பொருள வென்கின்றார். இதனைக்கற்றோர் கவனிக்க.

16 திங்களாமிறஜபு முதற்றெய்திவெள்ளியிராத்
துங்கவார்கழன் முகம்மது பேரொளிதுலங்கி
யெங்கணாயக ரப்துல்லா நுதலிடத்திருந்து
மங்கையாமினா வயிற்றினிற் றரித்ததுவன்றே.

இச்செய்யுளில், முகம்மது பேரொளி அப்துல்லா நுதலிடத் திருந்து ஆமினாவயிற்றினில் தரித்தது என, இருந்து என்பதனை அவதிக்காரகத்தில்வரும் ஐந்தாவதன் பொருட்டாய், ஊரிடத்திருந்து நீங்கினான் என்றாற்போல் அமைத்த ஆசிரியர்க்கேற்ப, நபிபெருமானாரது பேரொளியானது றஜபுமாதம் முதற்றிகதி வெள்ளியிரவு அப்துல்லா நுதலிடத்திருந்து ஆமினாவயிற்றிற் றரித்தது என்று யாம் பொருள்கூறியிருப்ப, திலகக்காரர் இருந்து என்பதனை இருந்தவெனக்கொண்டு, அப்துல்லாநுதலிடத்திருந்த பேரொளி ஆமினாவயிற்றினிற் றரித்தது என்று பொருள்கூறுகின்றார். இது பொருந்தாமை காண்க.

அதாஅன்று, தரித்தனவன்றே என்றிருந்ததனை, " * ஒருமைசுட்டிய " என்னும் இலக்கணவிதியால், பேரொளி என்னும் ஒருமையெழுவாய்த்தரித்தன என்று பன்மைப் பயனிலையாய் முடியாதெனத் தரித்தது என்று திருத்தி, அதற்கு நியாயமும் யாம்காட்டியிருப்ப,

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல் ௪௫-வது, சூத்திரம்.

"அவ்வொளி யொன்றேயாயினும் பயனாற் பலவா
மாகலானும் ஞான திருட்டியானோக்கும் ஞானிகட்கு
நோக்கநோக்கப் புதிதாய் அவரவர் தகைமைப்படி
வரையாது காணப்படுமாகலானும் 'தரித்தனவன்றே'
எனப் பன்மையாற் கூறினார். அது, "எதிலார்போலப்
பொதுநோக்குநோக்குதல் காதலர் கண்ணேயுள' என்
றவள்ளுவரில் நோக்குதற்றொழி லொன்றேயாயினும்
இருவர்கண்ணுநிகழுதலானும் ஒருவர்கட்டானும் குறிப்
பு வேறுபாட்டாற் பலவா மாகலானும உளவெனப்பன்
மையாற் கூறப்பட்டதுபோலும் என்க" என்கின்றார்.

ஒன்றேயாகிய அவ்வொளி திரிவுவேறுபாட்டாற்
பலவகைதோற்றப்படுமன்றிப் பலவாகாது. என்போல
வெனின், பலவன்னப்பளிங்குத்தூண் பலநாட்டியவொ
ருமண்டபத்துள் ஒருவன் புகுந்தக்கால் அவனுரு ஒவ்
வொருதூணிலும்பிம்பித்துப் பலநிறத்துப் பலவாய்த்
தோற்றப்படுமாறென்க. அதுபற்றி அம்மண்டபத்துப்
புக்கானொருவன் பலரெனப்படான். அங்ஙனமே அவ்
வொளிவுமொன்றேயன்றிப் பலவாகாது. இன்னும், பி
ராணனெனப்படுவது சரீரத்தி னகத்துச் சஞ்சரிக்
கும் வாயுவாம். அது ஒன்றேயாயினும் உபாதிவேறு
பாட்டால், பிராணன், அபானன்முதலிய பலவேறு
பெயர்பெறும். அதனால், ஒருவன் சரீரத்தினகத்துச்
சஞ்சரிக்கும் பிராணனைப்பலவென்றல் பொருந்தாது.
இதற்குத் திருட்டாந்தம் பலவுள; விரிப்பிற்பல்குமாக



வின் நிறுத்துகின்றாம். அன்றியும், "எதிலார்போலப்
பொதுநோக்குநோக்குதல் காதலர்கண்ணேயுள" என்
புழிநோக்குதல் பால்பகாது நிற்றலின் காதலர்என்னும்
தலைவன் தலைவி இருவரிடத்தும் இரண்டாய், உளவெ
னப்பன்மை முடிபெற்றது ஒரு வினைநிகழ்ச்சி ஒருவரி
டத்துளதேல் ஒன்றாய், பலரிடத்துளதேல் பலவாய்வ
ரும். என்போலவெனின், வெட்டுதல் என்பது தொழி
லொன்றேயாயினும் பலர்வெட்டுங்கால் அவ்வெட்டுப்ப
லவாதற்போலவென்க. ஆகலின் அவ்வொளிவுக்கு
இது திருட்டாந்த மாகாதெனமறுக்க. இவ்விதிகளைக்கற்
றுத்தெளியாது அவர்பின்னும் எம்மைப்பற்றி,

"இக்கருத்தறியாமுதலுரையார், நூலாசிரியர் ஒ
ருமைபன்மை யறியாதாரெனக் குற்றங்கூறித் தரித்த
னவன்றே என இருவாற்றானும் இன்புறக்கிடந்தசெய்யு
ளைத் தரித்ததுவன்றேஎனக் கைப்புறக்கலைத்துவரைந்
து தமது சிற்றறிவிற்கேற்ப 'பேரொளியென்னும் ஒரு
மைக்கிளவி தரித்தனவென்னும் பன்மையொடு முடித
லியலாமையான் தரித்ததுவன்றே எனச் செய்யுளைத்தி
ருத்தி இடும், எனக்காரணங்கூறியும் போந்தார். இப்
போலியறிவினர் இவ்விலக்கணமெங்குள்ளதோ! யாம
றிந்தவற்றுளில்லை யென்றடங்காது தம்மதமே பெரிதெ
னப் போதலிழுக்காமென்க. அதுவேயுமன்றிப் பேரொ
ளியென்பதனை உம்மைத்தொகையாக்கிப் பேரும் ஒளி
யும் தரித்தனவென முடித்தாலோவெனத் தமக்கியைந்
தவாறு கடாநிகழ்த்திப் பேரொளியென்பதற்குப் பெரி
ய ஒளி என்பதேபொருளாகலானும் வகுத்தபேரொளி
யென முன்னுங்கூறினமையானும் ஆசிரியர்க்கு கருத்

தன்மென்க வென்றும் கூறியவர் ஒருமையைப்பன்மையாற்கூறலும் ஆசிரியர்க்குக்கருத்தாகாதென விளங்குந் தமது நுண்ணறிவை 'மறவியினைய' என்றற்கிலக்காய் மறார்தார்போலும்" என்றும், இன்னும் பலவும் பிதற்றுகின்றார்.

எம்மறிவைச் சிற்றறிவென்றும், எம்மைப் போலியறிவினரென்றும், பேரறிவினராகிய அவர்இகழ யாம் மேற்காட்டிய நியாயங்களாற் சிறிதும் நிமித்தமில்லை. ஆகவே, ஆசிரியர் ஒருமை பன்மையறியாதரெனக் கூறினதாக அபவாதஞ்சுமத்தி எம்மைநிந்திக்கும் இதற்கு இங்கு யாம்சமாதானமாக எடுத்துக்காட்டும் நியாயங்கள் தக்கவாறுபுத்திபோதிக்குமென்று நம்புகின்றோம். ஐந்திலக்கணங்களையும் ஐயந்திரிபறக்கற்றுத் தேறிய யாம் ஒருமைபன்மை முடிபைப்பற்றி, இவ்விதி எங்குளதோ! யாமறிந்தவற்றுளில்லை யென்றடங்க நிமித்தமில்லை. அவர்கற்று வெளிவந்த ஆறுவதிலக்கணமுமொன்றுண்டு என எமக்கொருவர் முன்னமே தெரிவித்திருந்தாலன்றோ, ஒருக்கால் இவ்விதி அவ்விலக்கணத்திலிருக்குமென்றடங்கியிருப்போம் ? இனி, ஐந்திலக்கணங்களுள்ளுங்கண்டறியாவிதிகளை அவர்க்குச் சொந்தமான ஆறுவதிலக்கணத்தி லுள்ளவையென்றே அடங்கியிருப்பேமென்பதை இதனால் அனைவர்க்குமறிவிக்கின்றோம். கல்வித்திறத்தினாலும், பேரறிவினாலும், பெருந்தன்மையாலும் அவர் கூறுவனவற்றிற்கு, யாம் பரிகாரஞ்செய்வது மகாகடினமென்றே இம்மட்டில் விடுகின்றோம். கற்றோர்கவனிக்க.



17. திருத்தும்பொன்னகரமரரேதிரண்டவானவரே
கருத்தினுண்மகிழ்ந் தெவ்வையுமலங்கரித்திடுமின்
வருத்தமென்றிலா முகம்மதையாமினாவயிற்றி [ன்.
லிருத்தினேனெனவுரைத்தனனியாவர்க்குமிறையோ

இச்செய்யுளில், எவ்வையுமலங்கரித்திடுமின் என்புழி எவ்வையுமென்பதனை அலங்கரிக்கத்தக்க சிறந்த தானங்களெவையுமென யாம் விளக்கிக்கூறியதனைத் திலசக்காரர்மறுத்து, எவ்வையும் என்பதற்கு நரகமுதலிய யாவற்றினையும் என்றும், வருத்தமென்றிலாமுகம்மதை என்புழி வருத்தமென்பதென்றுமில்லாத முகம்மது நபியை யெனப்பொருள்கூறாது, நரகமுதலிய யாவற்றினையும் வருத்தமென்று சொல்லப்படுவதில்லாது அலங்கரித்திடுமின் என்றும், ஆமினாவயிற்றிலிருத்தினேன் என்புழி இருத்தினேன் என்பதற்குப் பிரயாணப்படுத்திவைத்தேனென்றும் தமக்கேற்றவாறு பொருள்கூறினதுமன்றி, பின்னும் கடாவிடைபரப்பிப்பலவாறுகூறி எம்முரையைப் பொருந்தாதுஎன்கின்றார். நபிபெருமானாரதுகருப்பிரவேசக்கொண்டாட்டத்திற்கு அலங்கரிக்கத்தக்கதானங்கள் அறுசு, குறுசி, சுவர்க்கம், பைத்துல் மகுமூறு, முதலியவேயன்றி நரகங்களுமன்று. இதுபற்றியன்றோ அடுத்தசெய்யுளில் "நரகங்களேழும் விரைந்தவித்தடத்திடுகவென்றனன்" என வேறுபிரித்தது. ஆகவே, நரகமுதலியயாவற்றினையுமலங்கரிக்கச்சொன்னானெனப் பொருள்கூறுதல் எவ்வளவு பேதைமை! அலங்கரிக்கக்குறித்த தானங்களுள் சுவர்க்கமுதலிய யாவற்றினையுமென்றுகொள்ளாது நரகமுதலியவென்று கொண்டமையால் நரகமே முதன்மையானது

போலும் ! அல்லதூஉம், நரகமுதலிய யாவற்றையு மலங்கரிக்கச்சொன்ன இறைவன், பின் நரகங்களையடைக்கச்சொன்னது யாதுபற்றியோ ! இன்னும் நரகமுதலிய யாவற்றினையும் வருத்தமென்றிலா தலங்கரிக்கச்சொன்னா னென்பதால் அலங்கரிக்கப்படும் சுவர்க்கங்களும் நரகம்போல வருத்தமுடையனபோலும் ! அவர் ஈண்டுக் கூறுவனவற்றைப்பின்னும் கற்றோர் கவனிக்க.

அதா அன்று "வருத்தமென்றிலா என்பதை முகம்மதோடுபடுத்தி வருத்தமென்பதென்றுமில்லாத முகம்மதுஎனக்கூறுவர் முதலுரையார். அதுபொருந்தாது, என்னை ? படைப்பாதிகள் துன்புறுதுகாத்தலும் துன்புற் வழிப்பிழைப்பித்தலுமாகிய கருணைகூர்ந்து இப்பூமண்டலத்தின்கண் வராநின்றபிரானவர்களை யிவ்வாறுசிறப்பித்தல் பொருத்தமுடைத்தன்று, வருத்தங்களுக்கேதுவாய படைப்பாதிகளிலொன்றைப் பிரித்து வருத்தமென்றிலாமன்னன்' எனக்கூறுதலான் வருத்தத்திற் கேதுவாயவம்மன்னன் அதினின்றும் பிழைத்தானென்றக்கால் அம்மன்னனுக்குச் சிறப்பேயாம் பிரானவர்களுககு அங்ஙனஞ் சிறப்பாகாவென்க" என்கின்றார்.

ஆ ! ஆ !! திருட்டாந்தம் வெகுநேர்த்தி. வருத்தத்தையும் சௌக்கியத்தையும் அநுபவித்தல் நரருக்கு இயற்கை. நபிபெருமானாரும் நரராகலால் அவர்களும் அவ்வருத்தம் சௌக்கியம் இரண்டனையும் அநுபவிப்பார்களென்பது பெறப்படுதல்பற்றி, ஏனையநரரைப்போல வருத்தத்தையநுபவிக்காது சௌக்கியத்தையே யநுப



விப்பவர்என நரர்களில் பிரித்து உயர்த்தும்பொருட்டு "வருத்தமென்றிலாமுகம்மது" என இறைவன்கூறினன். ஆகலின், அதற்கு யாங்கூறியதே ஆசிரியர்க்கும் ஏனையர்க்கும் உடன்பாடென்பதறிக.

திலகக்காரர் ஈண்டுப் படைப்பாதிகள் என்கின்றாரே, அதென்ன ? மலையாதிகள் என்றால் மலைமுதலான மற்றவையுமென்று பொருள்படுமாறு, படைப்பாதிகள் என்றால் படைப்புமுதலான மற்றவைகளுமென்றன்றோ பொருள்படும் ? அங்ஙனமாய்ப் படைப்புமுதல் படைப்பில்லாதனவாகிய மற்றவையாவை? இதைப்பற்றி கற்றோர் அவரைககடாவுவார்களாக.

18\. பரந்தவாய்க்கொடும் பாந்தளும்விடங்கொள்பஞ்ச
ரமுங், கரிந்துபொங்கியகுழிகளுங் கனற்பொறிகதுவ
வெரிந்துசெங்நெருப் பொழுகியநரகங்களேழும் [ன்.
விரைந்தவித்தடைத் திடுகவென்றனன்முதல்வேந்த

இச்செய்யுளில் திலகக்காரர், விடமென்பதனைத் தேள்களென்றும், கதுவவென்பதனை வெளிப்படுத்தாதென்றும், ஒழுகியவென்பதனை உயர்ந்திராநின்றவென்றும், அடைத்தென்பதனைக் கொடுமைகளைத்தடுத்தென்றும், அவித்திடுகவென்பதனைக் கெடுத்துவிடுவீர்களாகவென்றும் தாமோர்புதிய இலக்கியங்கற்றுத்தேறினதற்கேற்பப்பொருட் படுத்தினதுமன்றி,

" இச்செய்யுள் ' திருத்தும் பொன்னகர் ' என்ற செய்யுளின்கண் கிடந்தனவற்றையே கூறுதலின் கூறியதுகூற லென்னுங்குற்றமாமெனின் அற்றன்று, 'சிறப்

பினும்—உயிர்க்கு ' என்றவர்தாமே, அறத்தினூஉங்
காக்கமுமில்லை, எனமேலேகூறினவற்றையே பின்னுங்
கூறினாற்போல இச்செய்யுள் செய்வதனன், அதுள
இத்தலென்க " என்கின்றார்.

இச்செய்யுட்குமுன்னுள்ள பதினேழாவது " தி
ருத்தும் பொன்னகர் " என்ற செய்யுள் பதினெட்டா
வது " பரந்தவாய்க்கொடும் " என்னும் இச்செய்யுளிற்
கூறப்படும் நரகலக்ஷணங்களைத்தான கூறிகின்றது?
இது ஆச்சரியம் ! அவர்க்கு இது எதனுல் விளங்கிற்
றோ ! அச்செய்யுளில் எவ்வையும் என்றதற்குள் நரக
முமிருக்கின்றதென்று வைத்துக்கொண்டார் போலும்
பேதையர் !

அதாஅன்று, " நரகத்தீ கருநிறத்ததாதலின் செந்
நெருப்பெனல் பொருந்தாதென் பாருமுளர். நரகப்ப
யன்படுவார் கருநிறத்தராதல்பற்றி நரகத்தீகரு நிறத்த
தென்பர் சிலரல்லது அத்தீகரு நிறத்த தன்றென்க.
முதலுரையாரு மத்தீ கருநிறத்தென்றேகொண்டு வா
ளாமயங்குவர் " என்கின்றார்.

அத்தீகரு நிறத்ததெனச் சிலர் சொன்னமை பற்
றியே யாமுஞ் சொன்னே மன்றி, யாம் மயங்கவில்லை
யென்க. சிலர் சொல்லும் அசசொல்லை நிராகரிக்க இவ
ருமோர் சமயகுரவர்போலும்!

அதாஅன்று, " திருத்தும் பொன்னகரென்ற செய்
யுளைச் சுவர்க்கத் தோடுபகுத்தி இச்செய்யுளை நரகத்
திற்கே புரித்தாய்க் சொள்வர் முதலுரையார்; அது
பொருந்தாமை யாங்கூறிய வாற்றானறிக " என்கின்றார்.



இறைவன் " திருத்தும் பொன்னகரமரரே " என
விளித்ததுதானே பொன்னகரங்களையலங்கரிக்கச்சொன்
னதனையும், பின்னர் " திரண்ட வானவரே " எனவிளித்
ததுதானே நரகங்களை யடைத்திடச் சொன்னதனையும்
நன்குவிளக்கி, முந்திய செய்யுள் சுவர்க்கத்திற்கும், பிந்
திய செய்யுள் நரகத்திற்கும் பொருடந்து, ஒன்றன்பொ
ருள் மற்றொன்றிற் சிறிதுங் கலவாது தனித்து நிற்பதை
அச்செய்யுட்களைப் படித்துப் பார்க்கும் பாலருமறிவர்;
அங்ஙனமாக அப்பேதையர் இங்ஙனம் ஏதுவின்றித் தடு
மாறுவதைப்பற்றி ஆச்சரியப் படுகின்றேம். கற்றோர்
கவனிக்க.

19. விற்கெழுமறுசொடு குறுசந்தரம் விளங்கச்
சொற்கவாயிலுந்திறந் தலங்கரித்தனர் துன்ப
வற்கவாரிபாழ் நரகங்களடைத்தனர் வானோர்
கற்குமாமறை முதலவன்விதித்த கட்டளைக்கே.

இச்செய்யுளில் ஆசிரியர், மேலைச்செய்யுட்களில்
" அலங்கரித்திடுமின் " " அவித்தடைத்திடுக " எனக்
கூறிப்போந்த முறையே " சொற்கவாயில் திறந்தலங்
கரித்தனர் " " நரகங்களடைத்தனர் " எனப் பிரித்துக்
கூறியிருப்ப, திலகக்காரர் இதற்குமாறாகச் சொற்கவா
யிலுந் திறந்தும், நரகங்களினது துன்பத்துக்கேதுவாய
வஸ்துக்களையெல்லாந் தடைபடுத்தியும் அலங்கரித்தனர்
எனக் கூட்டி, முன் நரகமுதலிய யாவற்றையு மலங்கரிக்
கச் சொன்னனென்று தாம் கூறியதற்கு மாறுபடாமல்
பொருள்கூறினார். சொற்கவாயில் திறந்தலங்கரித்தனர்,

நரகங்களடைத்தனர் என முறையே முற்றுப்பெற்றிருக்கும் அடைத்தனர் என்பதனைத் தடைபடுத்தி யெனக்கொண்டு இங்ஙனந் தடுமாறிக்கூற அவருக்கு என்ன நிர்ப்பந்தமுண்டாயிற்றோ! ஆச்சரியம். அல்லதூஉம், அறுசு குறுசிகளையொப்ப நரகங்களையும் சுவர்க்கங்களையும் அலங்கரித்தனர் என முடிக்கின்றார் பேதையர். இது யாதுபற்றியோ! இதனைக் கற்றோர்கவனிக்க.

அதா அன்று, இங்ஙனந் தலைதடுமாற்றமுற்ற பேதையர் அம்மட்டிலடங்காது,

"இனி முதலுடையாரும் மற்றும் அவர்போல்வனச் சிலரும் இங்ஙனம் மிக்கமலைவர். அம்மலைவுகளெல்லாம் இனைத்தென விரித்துக் கூறிற் பல்குமென விரித்திலேம். உய்த்துணர்க" என்கின்றார்.

யாமும் எம்மனோரும் மிக்கமலையும் மலைவுகளெல்லாம்கற்றோர் அறிந்தவையேயாம். அவையிருக்கட்டும். பாடசாலையிற் பாலபாடங் கற்கும் ஒருகுழந்தை மாணாக்கனும் எழுதுமிடத்து அவன்போல்வான், அவள் போல்வாள், அவர்போல்வார், அது போல்வது, அவை போல்வன என்று பால்வழுவுறாது எழுதி, பேசுமிடத்தும் பேசுவன். பாரிய இலக்கணங்களையெல்லாங் கற்றுக்கரைகண்டு விட்டதாகக் காட்டிக்கொண்டு எமக்குக் குற்றங்காட்ட வந்த அவர், முதலுடையாரும் அவர்போல்வார் சிலரும் என்று எழுதக் கற்றுக்கொள்ளாமல், "முதலுடையாரும் அவர் போல்வனச் சிலரும்" என்று எழுதக் கற்றுக்கொண்டு வெளிவந்து, அச்சமின்றி இலக்கணத்தில் தலையிட்டு எம்மையும் அடிக்கடி இகழ்



வது "பைத்தியம் தீர்ந்தது; உலக்கை யெடடா கோவணங்கட்ட" என்றவன் சீலமன்றோ? ஆ! பரிதாபமே!! அவர் கல்வி இவ்வளவுதானென்பதை அவர்தாமே உலகறியக்காட்டுகின்றாராகலின், யாமும் காட்டப்புகுவது, பட்டப்பகற்கு விளக்கேற்றிவைப்ப தொக்குமென்று விடுகின்றேம்

20. அந்தண்பொன்னக ரடங்கலு மலங்கரித் ததுவும்
வெந்தபாழ்நரகங்களை யடைத்தபல விதமுஞ்
சந்ததிண்புய முகம்மதுநபி தரித்ததுவு
மிந்தவாறுக ளனைத்தையுமறிந் திபுலீசு.

இச்செய்யுளில், ஆசிரியர், முகம்மதுநபி தரித்ததுவும், பொன்னகரடங்கலும் அலங்கரித்ததுவும், நரகங்களடைத்தபல்விதமுமாகிய இந்தவாறுகளனைத்தையும் இபுலீசு அறிந்து என மிகத் தெள்ளிதாக வமைத்திருப்ப, திலகக்காரர் இதனைப் புரட்டி, முகம்மதுநபி அந்தண்பொன்னகர் தரித்ததும், நரகங்களடைத்தபல்விதமும், அடங்கலு மலங்கரித்ததும் என்று விபரீதார்த்தம் பண்ணுவதுமன்றி,

"நபிபெருமானார் அமைவுற்ற இடம் சுவர்க்கத்தினுஞ் சிறந்த தென்பான் வயிற்றை அந்தண்பொன்னகர் என்றார். அது ஆகுபெயராய் வயிற்றைக்குறித்து நின்றது 'அடங்கலும்' என்றது ஈண்டுவானத்தினும் பூமியினும் அலங்கரித்தற்கேதுவாய வஸ்துக்கள் தலங்களன்றி, மலையும், பாலையும், கானமும், பிறவு மன்றென்றறிக" என்கின்றார்.

இறைவன் அமரரை விளித்து "முகம்மதை ஆமினு வயிற்றி லிருத்தினேன். அதற்காக நீவிர் அலங்கரிக்கத்தகும் எவையும் அலங்கரித்திடுமின்; நரகங்களேழும் விரைந்தவித்திடுக" என்றுனென்றும், அதுபோலவே அமரர்கள் சொற்கவாயில் திறந்தலங்கரித்தனர்; நரகங்களடைத்தனர் என்றும், நிகழ்ந்த இஃவிஷயங்களாகிய முகம்மதுநபி தரித்ததும், பொன்னகரடங்கலு மலங்கரித்ததும், நரகங்களடைத்த பல்விதமும் இபுலீசு அறிந்து என்றும் ஆசிரியர் விளக்கி வெள்ளிடை மலைபோல வைத்திருப்பதை அறியத் திறனின்றித் தடுமாறுவது விபரீதமன்றோ! ஆமினுவின் வயிறு சுவர்க்கத்தினுஞ் சிறந்ததேயாகுக; ஆசிரியர் சொல்லும் கருத்தும் அங்ஙனமன்றே! செய்யுட்பொருட்கிடக்கை காணாது பொன்னகரென்பதை ஆமினுவின் வயிறுதானென்று எதனாற் கண்டுகொண்டாரோ பேதையர்!! பின் அதை ஆகுபெயரென்கின்றார். என்ன ஆகுபெயரோ!!! அலங்கரிக்குந்தானங்கள் சுவர்க்கமும், அறுசு குறுசி பைத்துல் மகுமூறுமுதலியனவு மென்பான் வேண்டி "பொன்னகர் அடங்கலும்" என்றார். அடங்கலும் என்பதை அவர்வேறுக்கி, வானத்திலும் பூமியிலும் அலங்கரித்தற்கேதுவாய வஸ்துக்கள் தலங்களென்பது, நபிபெருமானார் தரித்ததற்காக வானத்திலன்றி, பூமியில் ஒருவஸ்துவாவது தலமாவது அமரரால் அலங்கரிக்கப்பட்டதாக ஐதிகமில்லையாகலின், தவறுமென்று கொள்க.

அதாஅன்று, இந்தவாறுகளனைத்தையும் இபுலீசு அறிந்தானென்பது தோன்றவே அறிந்துஎன ஆசிரியர்



கூறியிருப்ப, அவர் அறிந்து என்பதற்குக் கண்டு என்று பொருள்கூறினது மன்றி,

"அறிந்திபுலீசு என்பதில் அறிந்து என்னும் பொதுமையால் காட்சியானே செவியானே அறியலாயினன் இபுலீசு? என்னுங் கடா நிகழுமென்பான் 'இந்தவாறுகளனைத்தையு' மெனச்சுட்டிக்கூறினர். ஆகலின், அக்கடா நிகழாமைக்குச், கண்டு எனப் பொருள் கூறினும்" என்று சமாதானமுஞ் சொல்கின்றார்.

கண்டு என்றால், கட்புலனால். கேட்டு என்றால் செவிப்புலனும். இவ்விரண்டுமல்லாத மனப்புலனாகிய அறிந்து என்பதற்குக் கண்டு எனக் கட்புலனை யமைக்கும் பேதையனன்றோ அவர் கூறுமாறு கடா நிகழ்த்துவன்! அக் கடா "கறக்கிற எருமை பாலோ? சினையோ?" என்பதுபோல வழுவன்றோ? இங்ஙனமாகவே அவரும் அபிப்பிராயப்பட்டது யாதுபற்றியோ! இபுலீசு சுவர்க்கங்களை யலங்கரித்ததையும், நரகங்களையடைத்ததையும் கண்டானாயினும், நபிபெருமானார் கருத்தரித்ததைக் காணக்கூடாதே. அதற்காகவன்றோ ஆசிரியர் அறிந்தென்றார். ஆகலின், அறிந்தென்பதற்குக் கண்டெனப் பொருள் கூறற் பொருந்தாமையறிக.

21. நடுங்கிவாயினீர் வறந்திட நாவுலர்ந்துடல [ந்து
மொடுங்கியைம்பொறி மயக்குறநெஞ்செலாமுடை
புடங்கொள்வங்கமதாய் நினைவுருகினன் புலம்பத்
துடங்கினனடிக்கடி பெருமூச்சொடு சுழன்றே.

இச்செய்யுளில், திலகக்காரர் தமக்கேற்றபடியெல்லா மெழுதி முழக்குவதோ டொழியாது,

“இனி மெய், வாய், கண், மூக்கு, செவி, என வளாமுறைபடுத்துவாருமுளர். இம்முறையே முதலுரையார்க்கு முடன்பாடு. ‘ஒன்றறிவதுவே—’ என்றவிதியறிந்திலர்போலும்” என்கின்றார்.

குதிரையைக் குர்ரம் என்றநிமித்தம் மாட்டை மர்ரம் என்றும், ஆட்டை அர்ரம் என்றும், நாயை நர்ரம் என்றும் வைத்துக்கொண்ட பேதைபோல, ஒன்றுமுதல் ஐந்துவரையும் ஒன்றும், இரண்டும், மூன்றும், நான்கும், ஐந்துமாகிய புலனறிவைக்கொள்ளும் பொறிகளை எண்ணுமுறைநோக்கி மெய், வாய், மூக்கு கண், செவி என நிறுத்திச் சூத்திரஞ்செய்த தொல்காப்பியர் போலவே எவரும் சொல்லவேண்டுமென்று வைத்துக்கொண்டாரே! குறளாதி நூற்களில் யாம் கூறுமாறு வருவதைக் கண்டிரார்போலும்!

22. கரைவனேங்குவன் மலங்குவன் கலங்குவன் சதறி,
யிரைவன்கன்னத்திற்கையைவைத் திருந்தெழுந்தி
ருப்பன், றரையின்மேல்விழுந்தெனக்கிலே யினிச்
சிங்காசனமென், றுரைமறந்திடக் கிடந்தனனிருக
ணீரொழுக.

இச்செய்யுளில், திலகக்காரர் தம் மனம்போலப் பொருள்கூறிப் போந்ததோடொழியாமல்,

“இனி கதறி என்புழியாரையென்னும் அவாவால் சுற்றத்தாரையென்றும், தரையின்மேல் என்புழிப்பூமியின்மேல் என்றும், இருந்து எழுந்திருப்பன் என்புழி உட்கார்ந்திருந்து தரிப்பின்றி எழும்புவன் என்றும் கூ

0465



றுவர் முதலுரையார். அவையெல்லாம் பயனில் கூற்றுமென்க” என்றுகூறி, நியாயமுங் காட்டுகின்றார்.

கதறியென்பதற்குத் தன் மக்களைக் கூப்பிட்டொலிப்பானென்று யாம் பொருள்கூறியுள்ளேமன்றி, சுற்றத்தாரையென்று ஓரிடத்துங்கூறிலேம். சுற்றத்தாரையென யாங்கூறினதாக அவர் கூறுவது அபவாதமென்றும், அவர் பொய்யரென்றும் எம்முரையானறிக. இபுலீசுக்குத் தரிபபிடம் இஃதெனப்படாது யாண்டாயினும், நபிபெருமானாரின் கருப்பிரவேச மறிந்தபோது அவலம்பட்டு விழுந்தவிடம் தரையேயென்பது தோன்ற, ஆசிரியர் கருத்தின்படித் தரையைப் பூமியென்றேம். தரையென்பதுதான் பின்னையாதோ! இருப்பான் எழும்புவான் என்பதுதோன்றவே இருந்து எழுந்திருப்பன் என்றாராசிரியர். ஆகலின் யாங்கூறியதே சரியான முடிபென்பதோர்ந்துணர்க.

23. அறிவழிந்தமன்னவன்றனை மக்கள்வந்தடைந்து
குறியுந்துன்பமும் வந்தவாறேதெனக்கூறி
நிறையுமக்களோடுறும் வரலாறெலாநிகழ்த்தி
யுறையுமில்லிடமிவணிலே நமக்கெனவுரைத்தான்.

இச்செய்யுளில், திலகக்காரர் தமக் கேற்கும்வண்ணம் பொருள்வரைந்து போந்ததுமன்றி,

“இபுலீசு மூன்றுகாலங்களினிகழ்வனவெல்லாம் வானத்திற்செல்லுகையாலறிந்து மாக்கள்பால் நிகழ்த்திப்பேறுபெற்றிருந்து பிற்றையவ்வாறு செல்லுதற்கமையாது கடைபட்டமையான் ‘உறையுமில்லிடம் இவ

ணிலை என்புழி' இவண் எனுஞ்சுட்டுவானத்தை யுணர்த்திநின்றதென்றறிக இனி இவணென்னுஞ் சுட்டுப் பூமியைக்குறித்து நின்றதென்பர் முதலுரையார். அவர்க்கு இபுலீசு இப்பொழுது வானத்திலிருக்கின்றானென்பதே யுடன்பாடுபோலும் அது வேதவிரோதமென்பது பின்னர்க்கூறுதும்" என்கின்றார்.

இபுலீசு வானத்திலும் பூமியினுஞ்சஞ்சரிப்பானுவன். நபிபெருமானார் அவதாரமானபின் வானத்திற் செல்லுதல் தடுக்கப்பட்டு, அங்குச்சஞ்சரித்தலொழிந்தது. ஆகலின், அவன் பூமியில் மனிதவடிவெடுத்து மாக்கள்பால் பிரத்தியட்சமாய்வந்து தன் காரியங்களை நடத்திவந்தமை நபிபெருமானார் கருப்பிரவேசமானபோது வாய்க்காததையறிந்து, இனி இங்கு நாம் என்றும்போலவந்து சஞ்சரிக்க இடமில்லையென்பது தோன்றவே "உறையுமில்லிடமிவணிலை" என்றான். அதனால், இவண் என்னுஞ்சுட்டுப்பூமியையேகுறித்துநிற்பதறிக. அல்லதூஉம், இவண் என்னுஞ்சுட்டு வானத்தைக் குறித்ததாயின், நபிபெருமானாரது அவதாரம் பூமியின்கண்ணதாகலின், அவன் பூமியினின்று முற்றிலும் விலக்கப்படானாயினும் முன்போலப்பிரத்தியட்சமாய்வருதலொழிந்தமையானும், முன்னர் என்றும் வானத்திலேயேதரிபட்டிராமையானும், முன்னமே கடவுளால் முனியப்பட்டு வானத்தில் தரிபட்டிருந்ததொழிந்தமையானும், இவணென்பதற்கு யாம் கூறியதே சரியானமுடிபென்றுணர்க.

அதா அன்று, " இச்செய்யுளில் முதலுரையார்



முழுதும் வாளாப்போயினர்; அவருரையானேகாண்க" என்கின்றார்.

யாம் முழுதும், அல்லது சிறிதும் வாளாபோயினமை கற்றோர்க்கு நன்குபுலப்படும். ஆகலின், அச்சற்றோர் எம்முரைகொண்டேகண்டு எம்மையிகழ்ந்து, காரியு முமிழ்வாராக.

24. இந்தவாசகங்கேட்டலுமக்களெல்லோருந்
தந்தையேயிதற் கென்செய்வோமெனத்தடுமாறிப்
புந்திநொந்துநொந்தவரவர்திசைதிசைபுகுந்தார்
சிந்தைநொந்திபுலீசுவுந் திகைத்திருந்திடைந்தான்.

இச்செய்யுளில், திலகக்காரர் சொற்களைப்புரட்டித் தமக்கு ஏற்றபடி வைத்துக்கொண்டதுமன்றி, மக்களெல்லோரும் இந்தவாசகங்கேட்டலும் தடுமாறிநொந்து அவரவர் திசைதிசை புகுந்தார் என்பதற்கு உரைகூறினவர், மக்களெல்லோரும் என்றமையாது பின்னும் மக்களிலொவ்வொருவரும் என அவரவரென்புழியும் மக்களென்பதை வருவித்து, ஆசிரியர்மீது இரட்டுறமொழிதலென்னும் குற்றம்பட முடிக்கின்றார். இதனைக் கற்றோர்கவனிக்க.

25 தரிக்கிடுமுதற் றிங்களிற்றரைபுகழாத
முறைப்பராமினைக்கனவினிலுன்றிருவுதரத்
திருக்குஞ்சந்ததிவலிமையையுடையதிவ்வுலகத்
தருக்கனெப்பலனு மமுசம்மதென்றறைந்தார்.

இச்செய்யுளில், திலசக்காரர் தமக்கியைந்தபடிப் பொருளமைத்துக்கொண்டதோடுமுடிக்காமல், பின்னும்

பேசுவான்புகுந்து, ஆமினாக்கனவில் என ஆமினாவினது கனவிலென்னும் பொருடந்துநிற்பதனை விளிவேற்றுமையென்றும், திருவுதரத்திருக்குஞ்சந்ததி என்புழி உதரத்து என்னும் அத்துச்சாரியையைவேறுபிரித்து அருக்கன் என்புழிக்கொண்டுபோய்வைத்து அத்தருக்கன் என்றுகூட்டியும், அவ்வத்தென்பது செம்மையெனப் பொருளமைத்தும், அவ்வருக்கனைச்சந்ததியுடன்கூட்டி அருக்கன்போலுஞ் சந்ததியென்ப துவமத்தொகையாய் அருக்கன்சந்ததியென நிற்கின்றதென்றும் பலவுங்கூறுகின்றார். நபிபெருமானாருக் குவமை கூறாத ஆசிரியர் அருக்கன்போலுஞ் சந்ததியெனக்கூறாராகலானும், செய்யுளு மவ்வாறு பொருடந்துநின்றிலதாகலானும், அவர் கொண்டுகூட்டுவது மதிகேடாகலானும் பொருந்தாமை காண்க.

அதாஅன்று, சந்ததிவலிமையையுடையது என்புழிக்கிடக்கும் வலிமையென்பது கடவுளென்றும், அது பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகையென்றுங் கூறுகின்றார். வலிமையென்பது கடவுட்கு எவ்விதப்பெயரினு மொருபெயராயினுமாகுக அது அன்மொழித் தொகையாவதெங்ஙனமாம்? இருமொழிதொக்குத் தொக்க இருமொழியு மல்லாதபிறமொழிப்பொருளைத்தரும் அன்மொழித்தொகை, வலிமை என்னும் ஒருமொழியாய்நிற்குமென்பது ஆருவதிலக்கணம்போலும்! அவருக் கிவ்விதமாகப் போதித்த ஆசிரியர் யாரோ!

அதாஅன்று, இச்செய்யுளினாசிரியர் கருத்தறியா



து மயங்கி வாளாவுரைகூறுவாருஞ் சிலரென்றும் அத்துணையாரில் யாமுமடங்கி அருக்கன் என்னுமுயர்திணைச்சொல் ஒப்பலவென அஃறிணைப்பலவின்பாலாய்முடிதற்பொருந்தாதெனத் தவறுளம்பற்றித் திருத்தினேமென்றும், “இருதிணைச் சொற்குமோரன்னவுரிமையின்” என்னும் தொல்காப்பியச் சூத்திரப்படி, வழக்குப்பற்றி அருக்கன் என்பது அஃறிணைப்பெயராமென்னும் பிறவும் கூறுகின்றார்.

அவர் எடுத்துக்காட்டிய சூத்திரத்தின்பொருள், இருதிணைச் சொல்லாதற்கு மொத்தவுரிமையவாகலின் உயர்திணைக்கட்சென்றுழி யுயர்திணைப்பெயராயும் அஃறிணைக்கட்சென்றுழி யஃறிணைப்பெயராயும் வேறுபடும் விரவுப்பெயரெல்லாம் ஆராயுங்கால் தத்தமரபின் வினையோடியைந்தல்லது திணைவிளங்க நில்லா என்பதாம். இச்சூத்திரம் சாத்தன்வந்தான்; சாத்தன்வந்தது. என விரவுப்பெயருக்கிலக்கணமமைக்கவந்த தாகலின், அருக்கனுக்கு எடுத்துக்காட்டாகாது * காலமுலக முயிரே யுடம்பே” என்பதை எடுத்துக்காட்ட அறிந்திலர் போலும்! இச்சூத்திரமன்றோ உயர்திணைச் சொல்லாயினும் உயர்திணைக் கட்பால்பிரிந்திசையா அஃறிணைப்பாலா யிசைக்கும் என்பதை விதிக்கவந்தது. அவர் இச்சூத்திரத்தையே யெடுத்துக்காட்டினதாக வைத்துக்கொள்வோம். ஆயினும், இவ்விதிப்படி அருக்கன் ஒப்பன்று என அஃறிணை யொன்றன்பாலா யிருத்தன் முறையன்றி, ஒப்பலவெனப் பலவின்பாலாயிருத்தற்கு

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம் ௫௭-வது சூத்திரம்.

நியாயமென்ன? இதுபற்றி யாந்திருத்தியது தவறாகாதென்றுகொள்க.

அதா அன்று, ஆசிரியர் பின் ௪௯-வது செய்யுளிலும் புவியினிற்பெயர் முகம்மது என தாவூது நபியுஞ் சொன்னாரெனக் கூறுமாறு, இவ்வுலகத்து நாமம் முகம்மது என்றதற்கேற்ப, இவ்வுலகத்தில் நாமம் முகம்மதாம்; வேறுலகத்தில் வேறுநாமமாம் என்பதுதோன்ற யாம் கூறியதனைப் பலவாறெழுதி மறுக்கின்றார். நபிபெருமானார் திருநாமம் எவ்வுலகத்தும் எக்காலத்தும் முகம்மதென்பதே யாமாயினும், பிறநாமங்களிலும் சில வானிலும் பாதாளத்திலும் வழங்குதற்பற்றி வேதாகமாசிரியர் சிலர் கூறியதனைப் பற்றுக்கோடாகக் கொண்டே யாங் கூறினோம். அகுமது என்பது வானத்திற் பிரபலமான நாமமாகலின், அவர்மறுப்பு அவ்வேதாகமாசிரியர்க்கன்றி, எமக்கன்றென்க.

26. கருப்பந்திங்களிரண்டினிலாமினாக்கனவின்
மருப்புகுங்குழல்வல்லிநின்வயிற்றினின்மதலை
யருப்பும்வீறுடையவர்பெயர்முகம்மதென்றதிக
விருப்பமாயிதுரீசுநன்னபிவிளம்பினரே.

இச்செய்யுளில், நறுநாற்றம்புகுங் கூந்தலையுடைய வல்லிக்கொடியாகிய ஆமினா என்பது பொருந்திப் போதர "மருப்புகுங்குழல்வல்லி" என ஆசிரியர் கூறியதனைத் திலகக்காரரறியாது, வல்லியென்பதைப் பூமியென்கின்றார். வல்லியென்பது காமர் வல்லிக்கொடியென்றும், அது உவமவாகுபெயராய்ப் பெண்கட்குப் பெயராயிற்று என்றும் அவர் கற்றிலர் போலும்!



அதா அன்று, "நபி என்பது எவற்றினும் யாண்டுஞ் சிறந்துள்ளபட்டமாகலின் அப்பயன் பெறுதலரிதென்பான் நல் என்ற அடைகொடுத்து இது நீசு நன்னபி என்றார். இவ்வாறு வருவனவெல்லா மிங்ஙனமே கொள்க: இனி நன்னபி என்புழி நல்ல நபி என்பர் முதலுரையார் அது பொருந்தாது. என்னை? நபி என்பதனானே கெடுதலனைத்தையும் விலக்கி நல்லவர் எனப்பொருட் படுமாகலின் நல்ல நபியென விதந்துங் கூறல் முறையன்மையானும் அருத்தாபத்தியான் கெட்ட நபியுமுளர் எனும் பொருட்படுவதானும் என்க" என்கின்றார்.

"* பொருண்முதலாறு மடைசேர்மொழி" என்னும் விதியானே ஒருபெயருக் கடைகொடுக்குமிடத்து, அவ்வடைமொழி இனமுள்ளதும் இனமில்லதுமாயன்றோ நிற்கும்? அங்ஙனம் இனமில்லதாய் நிற்கும் வெண்டிங்கள், செஞ்ஞாயிறு என்பனவற்றை இனமுள்ளனவாகக்கொண்டு கருந்திங்களும், பசுஞாயிறுமுளவென அருத்தாபத்தியாற் கொள்வாருமுளர் போலும்! வெண்டிங்கள் என்றால், கருந்திங்களுமுண்டென்னும் பேதையனன்றோ நன்னபியென்றால் கெட்டநபியுமுளரென்று மல்லுக்கு வருவன்! தொல்காப்பியர் கூறிய "† இனச்சுட்டிலாப் பண்புகொள்" என்ற விதியா

* நன்னூல், பொதுவியல், ௫௰-வது சூத்திரம்.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம் ௰௮-வது சூத்திரம்.

ன் வெண் முத்து, தீங்கரும்பு, செஞ்ஞாயிறு, தண்ணிலா என்பனவும் பிறவும் செய்யுளாறாய் வருவதனை அவர் கற்றிலர்போலும்! ஒருக்கால் அருத்தாபத்தியான் அவர் மேற்குறித் தவற்றைக் கருமுத்து, புளிங்கரும்பு, மஞ்சண்ஞாயிறு, சுடுநிலா என்பனவுமுளவென்று மறுப்பினு மறுப்பர் பேதையர்! இது ஆச்சரியம்.

அதாஅன்று, குறளில் "நற்றாடொழா அரெனின்" என்பதை எடுத்துக்காட்டி, நற்றாளெனின் கெட்டதாளு முளதோவெனத் தாமாகக்கடா நிகழ்த்தி, கடவுளின்தாள் தொழத்தக்க நல்லதென்றும், மற்றவர்தாள் தொழத்தகாத கெட்டதென்றும் விடையுங் கூறி மகிழ்கின்றார். கடவுட்குத் தாட்களுண்டென்னும் வள்ளுவருக்குள்ள சொள்கை அவருக்கு முண்டுபோலும்! "நவூது பில்லாஹி மின்ஹா"

27. இக்கெனுமொழியா மினைக்கினிதுறத்திங்கள்
புக்குமூன்றினினாகு நன்னபிமனப்பொலிவாய்
மிக்கவுண்மையும் விளங்கியவெற்றியுமுடையோர்
தக்கபேர்முகம்மதுவெனச் சாற்றிவிட்டகன்றார்.

இச்செய்யுளில், ஆமினைக்கு இனி துறப்புக்குந்திங்கள் மூன்றினில் என்புழி, புக்கும் என்னும் செய்யுமென்வாய்பாட்டுப் பெயரெச்சத்தைத் திங்களொடு கூட்டிப் புக்குந்திங்கள் மூன்றினில் என ஆசிரியர் கருத்திற்கிணங்க யாம் பொருள்கூறியிருப்ப, திலகக்காரர் அதனைமறுத்து, புக்கும் என்பதற்குச் சம்பவிக்குங் கனவில் எனப்பொருள் கூறினார். கனவில் வந்தென்பது அதிகாரப்பட்டுக் கிடப்பதோர்ந்து எற்புழி வருவித்துக் கூற வறியாமையால், இங்ஙன மிடர்ப்பட்டாரென்றறிக. புக்கும் என்பது சம்பவிக்குங் கனவில் எனப்பொருடந்து நிற்றல் எந்தவிதிபற்றியோ! ஆசசரியம்!! பிறவும் கற்றோர் நன்குணர்க.



28. திங்கணான்கினி லாமினைக்கனவினிற்றெளிவா
யிங்கிதத்திபுறாகீ நன்னபியியம்பினராற் |ம்
சங்கையாய்மிகு வரிசையும்பெருங்கொலுத்தனையு
பொங்குவாழ்வினர் பெயர்முகம்மதுவெனப்போந்
தே.

இச்செய்யுளில், இங்கிதத்து இபுறாகீம் நன்னபி என்புழி, இனிமையாகிய இங்கிதத்தினுடைய இபுறாகீம் நபியெனப் பொருள்கொள்ள வறியாது திலகக்காரர் மதிமருண்டு, நபியென்னு மதிஷ்டத்தையும் இங்கிதத்தினையும் இபுறாகீம் என்ற பெயரினையுமுடையவர்கள் என்றும் சங்கையாய் மிகுவரிசையும் பெருங்கொலுத்தனையும் பொங்குவாழ்வினர் என்புழி, வரிசையும் கொலுத்தனையும் பொங்காநிற்கும் வாழ்வினரெனப் பொருள்கூறு மாற்றல்கெட்டு, வரிசையையும் கொலுத்தனையையும் வாழ்வினையுமுடையவர் என விதிக்குமாறாக உருபைவிரித்தும் பொருள்கூறிப் போந்ததுமன்றி, இங்கிதமென்பது விருத்தசேதனத்தை யுணர்த்தி நின்றதென்றும், இங்கிதமென்புழி இனிமையென்பார் முதலுனையார். அது பொருள்வியப் பின்மைபற்றிப் பயனில்கூற்றாமென்சவென்றுங் கூறுகின்றார்.

இங்கிதமென்பதற்குப் பொருள் அடையாளமென அசராதிப் புத்தகத்தில் அவர் பார்த்ததுண்டு. அவ்வ

டையாளமே விருத்தசேதன மாயினும், இபுருகீம் நபிக்கு முன்னர்த்தோற்றிய நபிகட்கும் விருத்தசேதன முளவாம். ஆகலின், இபுருகீம் நபிக்கே யுரித்தாகக்குறித்துக் கூறுதற் பொருந்தாது. அற்றன்று, அவ்வடையாளமாகிய விருத்தசேதனத்தை அவர் மார்க்கத்தாரெவருஞ் செய்துகொள்ள முதம்கண் அவரே பெற்றாராகலின் ஆசியர் அங்ஙனங் கூறினரெனின், அதற்கு, முதலில் இங்கிதத்தினை யுடைத்தாக்கொண்ட இபுருகீம் நபியெனப்பொருள் பயப்ப விரித்துக்கூறாது, இங்கிதத்து இபுருகீம் நபி யென்று மாத்திரமிருத்தற் பொருந்தாதென்பதை யுய்த்துணர்க.

அதா அன்று, கொலுவின்காலவளவு யுகமுடியும்வரையும் நீண்டுவருகையான், சொலுத்தனையும் பொங்கும் என்றாசிரியர் என்னும் எம் கூற்றை, பெருமானாரது கொலுயுகமுடிந்த பிற்றையுமிருத்தலின் அவ்வுரைபோலியாமெனமறுக்க வென்கின்றார்.

நம் பெருமானாரது கொலு யுகமுடிந்த பின்னரும் என்றைக்கும் நிலைத்திருக்குமென்பதை யறியாதார் நம்மில் எவருமிலர்; எல்லாருமறிவரே. ஆயினும், ஆசிரியர் கூறியதாக யாங் கூறுங்கொலு இம்மையின் அரசியலாமென்பதை யறிவாராக. அது முஸ்லீமான அரசர்வசமாய்ப் பாரம்பரியமாய் வருவது.

29. அம்பொற்கும்பத்தி னருவிநீர்மஞ்சனமாடிச் [ப்
செம்பொற்பட்டுடுத் தெறிகதிரணியிழைதிருத்தி
பம்புமேகலைதரித்து மென்கரவளைபரித்துக்
கம்பலைச்சிலம்பணிந் தனர்பதங்கவின்பெறவே.



இச்செய்யுளில், யாமெழுதியவாறே யுரையெழுதி இதனடுத்த செய்யுளிற் கிடக்கும் ஆமினாவென்னுமெழுவாயை எம்மைப்போலவே யீண்டெடுத்தாண்டு மௌனஞ்சாதிக்கும் திலகக்காரர் அம்மட்டிலமையாமல், ஆசிரியர் மஞ்சனமாடி, பட்டுடுத்து, அணியிழை திருத்தி, மேகலைதரித்து, கரவளைபரித்து, சிலம்பணிந்து என முறையேயமைத்திருப்பதனை இடைக்கண் வாளாகெடுத்து, அணியிழையையும் மேகலையையும் திருத்தித் தரித்து என உம்மைகொடுத்து முறித்தார். அவர் ஆசிரியரினும் அதிகங் கற்றவர்போலும்!

30 நெறித்தவார்குழலிறுக்கி மென்மலர்பலநிறைத்து
குறித்தவேலிணைக் கண்களிலஞ்சனஞ்சோட்டிச் [க்
செறித்தமான்மதஞ் சந்தனக்கலவையுந்திமிர்ந்தே
யெறித்தநன்கதிர் விளக்கெனவாமினா வெழுந்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் தமக்கேற்றபடி யுரைகூறினோர் அம்மட்டோடொழியாது, தெய்வத்தால் தொழப்படுவான் வேண்டித் தெய்வம்தொழல்வேண்டுமென்னும் ஆநந்தக்களிப்பு அந் நான்காமாதத்தில் ஆமினாவுக்கு நிகழ்ந்ததென்றும், ஈண்டுத் தெய்வமென்பது அக்காலத்தவர்கள் பூசித்துவந்த விக்கிரகங்களையென்றும், அது பிறவருஞ் செய்யுட்களானு மறிகவென்றும், இங்ஙனம் வேதநூலோதார் பயன்பயவார், அதுபற்றி எம்மை யிகழற்க வென்றும் கூறுகின்றார்.

கருபாவிலுள்ள விக்கிரகங்கள் அவற்றைப் பூசித்துவந்த காபிர்கட்கே தெய்வமெனப்படுமன்றி, ஏனையர்க்குத் தெய்வமெனப்படா. இது சிறுவருமறிந்தது. அ

தடற்றியே ஆசிரியருமயுப்புலவர் அவற்றை ஓரிடத்திலேனும் தெய்வமென்னாது புத்தென்றும், சிலையென்றுமபலவாறு கூறுவாராயினார். அதனைக் கேட்டேனுமறியாத அவர் தெய்வமென்றுகொண்டதை யஞ்சுகின்றேம். அவனையொத்த வேதநூலோதிய மகான்களனைவரும் விக்கிரகத்தைத் தெய்வமென்றே கொள்வர்போலும்! ஆ!! விபரீதமே!!!

அதாஅன்று "இக்கருத்தறியாது முத்லுவையார் எழுந்தார் என்புழி ஒருகாரிய நிமித்தமெழுந்தாரெனப் பயனில் கூற்றாய் ஈழுகவிடுவர்; அஃது உமோரரிய வித்துவத்துவமோ" என்கின்றார்.

ஆமினா விக்கிரகத்தை வணங்க வெழுந்தாரென்னும் கருத்தை யாமறியாமற்போனதற்காக, அல்லாவுக்குத் துதிசெலுத்துகின்றேம். இது அவர்க்குப் பழிப்பாய்த்தோன்றினது போலும்! ஆசிரியர் கூறியவாறு எழுந்தாரென்று மாத்திரம் யாங்கூறாது ஒருகாரிய நிமித்தமெழுந்தாரெனக்கூறி, அடுத்த செய்யுளால் கருபாவிற்போய்வணங்கவே யெழுந்தாரென உய்த்துணரவைத்தவாறு விளக்கினேம். அவரைப்போல ஆமினா புத்தைவணங்கவெழுந்தாரென வாய்கூசாதுசொல்லிக் கைகூசா தெழுதத்துணியாமையான், எமது வித்துவத்துவம் ஒரு பொருட்டன்றேயாம். இதைப்பற்றிப் பின்னும் கவனிக்க.

31. இனத்துளாரெனுஞ்செழு மலர்க்கொடிநடுவிடை
கனத்தமாமணிக்கொம்பென நடந்துகருபாவின்[யே



மனத்திருக்கறவலஞ்செய்து வாயிலில்வந்து [தே.
நினைத்திடும்பொருடருகெனப் போற்றினர்நிறைந்

இச்செய்யுளில், ஆமினா கருபாவில் மனத்திருக்கறவலஞ் செய்து வாயிலில்வந்து போற்றினார் என்றார் ஆசிரியர். மனத்திருக்கறவலஞ்செய்து போற்றினமையான், மெய்க்கடவுளாகிய தெய்வத்தையே வணங்கினரென அவர்கருத்திற் கேற்பத் தெய்வத்தை வருவித்து, அத்தெய்வத்தை வணங்கினரென யாம் உரைகூறினேம். சழுந்துமதியுள்ள திலகக்காரர் எங்கூற்றைமறுத்துத்தள்ளி, ஆமினா கற்களை வணங்கினாரென்று சிறிதும் அஞ்சாது கூறுகின்றாரே! ஆ!! ஆ!!!

அதாஅன்று "தெய்வமென்று சார்த்திவைத்துள்ள கற்களை என்பது அவாய் நிலையான் வருவித்துரைக்கப்பட்டது" என்கின்றார்.

கற்களை அவாய் நிலையான் வருவித்து, அவற்றை ஆமினா வணங்கினரென்பதினும், மெய்க்கடவுளாகிய தெய்வத்தை அங்ஙனம் வருவித்து அதனை வணங்கினரென்பதில் வருங்கேடு என்னேயோ! தெய்வத்தைப் போற்றினாரென்பதுதோன்றவன்றோ ஆசிரியர் மனத்திருக்கற என்றார். இதனை யோர்ந்தறியாது கற்களை வணங்கினரென்பது கேடுதருமன்றோ! அல்லதூஉம், காவல் என்னும் அர்த்தமுள்ள "அமான்" என்னும் அறபுபாடை தாதுவிலிருந்து பிறந்த ஆமினா என்னும் திருநாமத்தை யுடைய அன்னையார் விக்கிரகத்தை வணங்கினரென்பது மதிகேடன்றோ! ஆமினா என்பதற்குப் பொருள் காக்கப்பட்டவரென்பதாம். அல்லதூ

உம், அல்லாகுத்தஆலா சத்தியவேதமாகிய குறுஆனில்
நபிபெருமானாரை விளித்து "சுஜூதுசெய்கிறவர்களின்
முதுகினின்று உம்மைக்கொண்டுவந்தோம்" என்று
சொல்லியிருக்கின்றான் அன்றியும், நபிபெருமானார் தி
ருவாய் மலர்ந்து "குபிர் ஷிறுக்கைவிட்டு நீங்கித் துப்
புரவானவர்களின் முதுகிலிருந்து, துப்புரவானவர்க
ளின் கருக்குழியில் நான் தரிபாடாய் வந்தேன்" என்
று சொல்லியிருக்கின்றார்கள். இத்திருஷ்டாந்தங்களால்
நபிபெருமானாரது பிதாமாதாக்கள் பரிசுத்தவான்களே.
அவர்கள் கற்களை வணங்கினரெனின் மார்க்கவிரோத
மா மன்றோ! இச்சொல் அப்பிதாமாதாக்களை வருத்
தினதற்கு ஒப்பாகுமென்றும், நபிபெருமானாரது பி
தாமாதாக்களை வருத்துதல் நபிபெருமானாரையே வ
ருத்தினதாகுமென்றும், நபிபெருமானாரை வருத்து
தல் குபிராகுமென்றும் "தில்மஸானி" "அசுபாகுநி
லாயிறு" "ஷறகுஹம்ஜீய்யா" "முவாகிபல்லதுன்
னியா" "சிறத்துல்ஹலபிய்யா" "சிறத்துத்தகுலான்"
"ஜவாஜிறு" றத்துல்முக்த்தார்" "றாகுல் பயான்"
என்னும் இந்த அரிய கிரந்தங்களனைத்தும் முறையிடு
கின்றன. அன்றியும், ஆமினா நிரியாணவேளையில் தம
து புத்திரரை நோக்கி, நீர் இசுலாம்மார்க்கத்திற்கு ந
பியாவீரென்றும், நபிஇபுருசீம் அலைகிஸ்ஸலாமவர்கள
து மார்க்கமே பிரதானமென்றும், புத்துகளை வணங்
கக் கூடாதென்றும், இன்னும்பல நல்லறிவுதோன்ற
வும் கவிதைசொன்னாரென்று "தலாயிலுன்னுபுவ்வா"
என்னும் கிரந்தம் சொல்கின்றது. இன்னும், சிலவரு
டங்கட்கு முன்னர் கொழும்பு நகரத்தில் இவ்விஷயத்



தைக்குறித்து "மூமீன்—முஷ்றிக்கு" என்னும் வி
வாதம் நேரிட்டுத் தீர்மானமானது இன்னதென உல
கறிந்ததாயிருக்கின்றது. காரியாம் இங்ஙனமாக, ஆமினா
கற்களை வணங்கினாரென ஓரிடம்போலப் பலவிடமுங்
காபித்தெழுதும் மதிகேட்டைப் பற்றி முஸ்லீம்கள் க
வனிப்பார்களாக.

அதாஅன்று, "இனி போற்றினரென்புழிப் பிரதக்
கணஞ்செய்த கருபாவையே வணங்கினர் எனப் பொரு
ள்கூறுவாருமுளர். அக்காலத்தார் விக்கிரகங்களையே
தெய்வமென்று ஆராதனை செய்து வந்தாரென்பது
வெளி; ஆகலின் ஆமினா அங்ஙனஞ் செய்திலர் கருபா
வையே வணங்கினர் என்பது பொருந்தாது அதுபற்
றி அவர்கூற்றும் பயனில் கூற்றாமென்க" என்கின்றார்.

கோயிலில் வைக்கப்படும் பொருளையே தெய்வ
மெனக் கொண்டு வணங்கும் பலவிதச் சமயத்தாருள
ரன்றி, கோயிலை வணங்கும் சமயமொன்று எக்காலத்
தும் எங்குமின்றாம் ஆகலின், அவர் கூறுமாறு கரு
பாவை வணங்கினரெனப் பொருள் கூறுவார் எவரு
மிலர். அவர் இதனைத் தாமாக வைத்துக்கொண்டார்
போலும்! ஆமினா கருபாவையும் வணங்கிலர்; கருபா
விலுள்ள விக்கிரகத்தையும் வணங்கிலர். கருபாவில்
அல்லாவையே வணங்கினரென்பதே சரியான முடி
பென்றுணர்க.

32. வண்டுவாழ்குழன் மடந்தையர்திரண்டுவாழ்த்தெடு
கண்டுமென்கொடி யாமினாத்தாமரைக்காலின் [ப்பக்

முண்டகச்செழுமலர் சொரிதலைமுகங்கவிழத்
தெண்டனிட்டது புத்தெனவுறைந்ததேவதையே.

இச்செய்யுளில் புத்தென்பதற்குத் திலசக்காரர் நரகமென்று பொருள் கூறினதுமன்றி,

“ கற்களை வணங்கு நீர்மையரெல்லாம் சாருமிடம் நரகமாகலின் அக்கற்களைப் ‘புத்து’ என்றார்,, என்கின்றார்.

இது என்னவிதியோ! கற்களை வணங்கு நீர்மையரெல்லாம் சாருமிடம் நரகமென்றவர், ஆமினாவும் அக்கற்களை வணங்கினரென்கின்றாராகலின், ஆமினா சாருமிடமும் நரகந்தான்போலும்!!! நஊது பில்லாஹி மின்ஹா”

அதாஅனறு, சாலில் தெண்டனிட்டதென்பதற்கு யாங் கூறிய அருங்கருத்தைத் தாமுந்தெரிந்துள்ளார் போல நடித்துக் கூறப் புக்கவர், பின்னும் எங்கூற்றை மயக்கக் கூற்றென்றும், அக்காலத்தவரெல்லாம் விக்கிரகாரா தனையரென்பது வெளி. ஆகவே ஆமினா எங்ஙன மெய்க்கடவுளை வணங்குவர்? விக்கிரகங்களையே வணங்கினரென்றும், அதுபற்றியே பொய்க்கடவுளாகிய என்னை மெய்க்கடவுளாகிய பெருமானவர்கள் உன்னிடத்தவதாரமாய பிற்றை நீவணங்கற்க: யான் மெய்க்கடவுளாகிய வுன் மகனை உன்பதத்தின்கண் வணங்குவன் என்னும் பொருடோன்ற அத்தேவதை தெண்டனிட்ட தென்பதே ஆசிரியர்க் குடன்பாடாசலானும் ஆமினாவினது வணக்கத்தைப் புத்துகள் தமக்கெனக்



கருதி ஆமினாவினது பதத்தில் தெண்டனிட்ட தெனின் ஆமினாவினது வணக்கத்திற்குப் பதிலாய் வணங்கிற்றென்னும் பொருட்டாய் அவ்வாமினாவையே சாருமல்லது நபிபெருமானாரைச் சாராதாகலானும் எங்கூற்று மயக்கமென்றுங் கூறுகின்றார்.

ஆமினா விக்கிரகத்தை வணங்கிலர். வணங்கினரெனக்கூறுதல் தவறுமென்பதை மேற்கூறிப்போர்தாம். நபிபெருமானார் அப்தும், றசூலுமாயினாரன்றி மெய்க்கடவுளாகாராகலின், புத்து அங்ஙனங்கருதிற்றென்பது ஆசிரியர்க்கு எவ்வளவு முடன்பாடாசாது. ஆமினாவினது வணக்கத்தை புத்துகள் தமக்கென்றே கருதி, அவர் பாதத்தில் அவர் மகனாராகிய நபி பெருமானாரைத் தெண்டனிட்டதாகலின், ஆமினாவின் வணக்கம் அப்புத்துகளுக்கு அன்றாமதனால் அத் தெண்டன் அதற்கு வதிலாகாது; நபி பெருமானாரையே சாருமென்பதுணர்க. ஆகவே எங் கூற்றுச் சிறிதும் மயக்கமின்றித் தெளிவாய் நிற்பதறிக.

அதாஅன்று, பின்னும் “ ஆமினா மெய்க்கடவுளை வணங்கில ரென்பது அறிக” என்கின்றார். ஆ! மதியீனமே!!

33 அஞ்சலித்தது புத்தெனமனத் ததிசயித்து
மஞ்சுவார்குழலாமினா பயந்துமெய்வருந்திக்
கஞ்சமின்னனார் கணத்துடன்வாயலைக்கடந்தே [ர்.
யின்சொனன்குலக் கிளியெனமனையில்வந்திருந்தா

இச்செய்யுளில் திலகக்காரர் புத்தென்பது தெய்வமென்கின்றார். முந்தின செய்யுளில் புத்தென்பது நரகமென்றார். யாம் புத்தென்பது விக்கிரகமென்று போதித்திருந்தும் அவர்க்கு விளங்கவில்லைப்போலும்! ஒருக்கால், புத்தென்றால் தெய்வமென்பது ஆமினாவுக்குடன்பாடும், நரகமென்பது தமக்குடன்பாடுமாய்க் கொண்டார்போலும்! தெய்வமென்பது ஆமினாவுக்குடன்பாடேயன்று. பாரிஸ் பாஷையில் புத்து என்பது விக்கிரகமாகலின், அவருடன் பாடும் பழுதாம்.

அதா அன்று "இனி புத்து என்புழி விக்கிரகமெனப் பொருள்கூறுவர் முதலுரையார். அங்ஙனம் விக்கிரகம் எனுங் கருத்து ஆமினாவுக்குளதேல் அது அஞ்சலித்தது எனும் வியர்ப்பும் பயமும் மெய்யயர்வுந் தோன்றாது. ஆகவே தெய்வமென்பதே அவர்க்குக் கருத்தாதல் பற்றி மனத்திசயித்துப் பயந்து மெய்வருந்தி என்றார். ஆகலின் அவர் கூற்றுப்போலியாமென்க" என்கின்றார் பேதையர்.

விக்கிரகம் எனுங் கருத்து ஆமினாவுக்குளதாயின் அது அஞ்சலித்ததென்னும் வியப்பும் பயமும் மெய்யயர்வும் என் தோன்றாவாம்! இயக்கமின்றிக் கிடந்தபடிக் கிடக்கும் சிலாரூபம் இயங்கிவந்து வணங்கின தன்மைதானே வியப்பையும் பயத்தையும் அயர்வையுந் தருமென்பது எவர்க்கும் விளங்குமே. ஆகலின், இயங்கி வணங்கக்கூடாத புத்து இயங்கிவந்து வணங்கினதற்காகவே ஆமினா மனத் ததிசயித்துப் பயந்து மெய்வருந்தினாரென்பதே ஆசிரியர் கருத்தென்றுணர்க.



34 தெரியுந்திங்களைந் தினிலிசுமாயிலசெப்பினரா
லுரியமென்மயிலே நினதுதரத்திலுறைந்தோர்
தரியலர்க்கிடியா யடுத்தவர்க்கொருதருவாய்
வரிசையுற்றவர்பெயர் முகம்மதுவெனவகுத்தே.

இச்செய்யுளில் ஆசிரியர் திங்களுக்கடையாக முதற்கணமைத்த தெரியுமென்பதனைத் திலகக்காரர் பெயர்த்தெடுத்துச் சுமந்துகொண்டுபோய் நான்காமடிக் கணிருக்கும் வரிசையென்பதற் கடையாக்கியும், உரியமென் மயிலே என்புழியுள்ள உரியவென்பதனை நினது உரிய உதரமெனக் கூட்டியும் பொருள்கூறியிருப்பதுமன்றி, யாம் செய்யுட்கிடந்தவாறே கொண்டு முடித்தமையான், அது பொருள்வியப்பின்றிப்போலியாயிற்று என்கின்றார்.

கல்விமான்கள் கண்டுங் கேட்டும் வியப்புக்கொண்டு குடர்புரளச் சிரிக்கும்வண்ணம் செய்யுட்கிடக்கைக்கு மாறாகச் சொற்களைப்பிரித்து நேர்ந்தபடிக் கொண்டுகூட்டாது, செவ்வனே பொருடருஞ் செய்யுளைநேராக்கொண்டு பொருள்கூறும் எங்கூற்றில் மேற்கூறிய வாறுவியப்புப் பிறக்குமா! எங்ஙனம் பிறக்கும்!! பிறக்காதே!!

35. ஆறுதிங்களில்வந்து மூசாநபியழகாக்
கூறுமென்கரும்பே நின்றன்வயிற்றுறுகுழந்தை
வீறுபெற்றிடுந் தலைமையும்பெரும்பதவியையு
மாறிலாதவர் பெயரிடுமுகம்மதென்றுரைத்தார்.

இச்செய்யுளில் ஆசிரியர், நின்வயிற் றுறுகுழந்தை தலைமையையும் பதவியையும் மாறுதலில்லாதவர். அவர்க்கு பெயர் முகம்மது என்று இடு எனச் சொன்னாரெனத் தெளிவோடமைத்திருப்ப, திலகக்காரர் அதனைச் சிதைத்து,

நின்வயிற் றுறுகுழந்தை தலைமையையும் பதவியையும் மாறிலாது பெற்றிடுமெனத் தடுமாறுவதைக் கற்றோர் கவனிக்க ஏனைய கூற்றுக்களையும் ஆராய்க.

36. சினவுவேற்கரத் தப்துல்லாவெனுமொருசிங்க
மனைவியாகிய வாமினாவெனுங்குலமடமா
னினமுமாயமும் வாழ்த்திடக்கருப்பமுமிலங்கக்
கனவுகண்டக மகிழ்ந்தினிதிருக்குமக்காலம்.

இச்செய்யுளில், சினவுவே லென்பதற்கு, வேல் பொருநற் றொழிற்கே யமைக்கப்பட்டதாகலின், பொருதுகின்றவே லெனின் சிறப்பாகாதெனக்கருதி, பகைமேற் கோபிக்கின்றவேலென யாம் பொருள்கூறி, பொருதுகின்றவேலெனினு மமையுமென்று முரைத்தாம்.

திலகக்காரர் “ இனி சினவுவேல் என்புழிக் கோபிக்கின்ற வேல் என்பர் முதலுரையார். வேல் எங்ஙனங் கோபித்து யாதுசெய்யும் என்னுங்கடா நிகழுமாகலின் அது பொருந்தாதென்க” என்கின்றார்.

வேல் பகைஞரைக்கண்டக்கால் சினந்து முனைந்து அவர்களுடலை யூடுருவிப்போ யுயிரைப்போக்கு மென்பதை அவரறியார் போலும்! * “ செருமிகு சினவேற் செம்பியன்” என்பதற்குப் போரின்மிக்க கோபத்தையுடையவேல் என அடியார்க்கு நல்லார் உரைகூறுகின்றார். அவரையு மிகழ்வார்போலும்!

* சிலப்பதிகாரம், புகார்காண்டம், மங்கலவாழ்த்து.



அதாஅன்று, இனமும் ஆயமும் என்புழி, இனமென்பது மக்கத்தாரென்றும், ஆயமென்பது தாயென்றுங்கூறி, ஆமினாவைப்போல மக்கத்தாரும் மானிடராகையால் அவர்களை ஆமினாவுக்கு இனமென்றாராசிரியர் என்று ஆசிரியர் மீதும் மடமையேற்றுகின்றார். இதனைக் கற்றோர் கவனிக்க. மக்காவல்லாத மற்றவூராரும் மானிடராகையால் ஆமினாவுக்கு இனம்போலும்! அல்லது மற்றவூரார் ஆமினாவைப்போல மானிடரல்லரோ!

அதாஅன்று, அக்காலம் என்பது ஆறுமாதங்களையு முணர்த்தி நின்றதென யாங்கூறியிருப்ப, அவர் அதனை மறுத்து, “ நபிபெருமானார் கருத்தரித்த வாறுமாதத்திலே அப்துல்லா அவர்கள் தமது தகப்பனாரவர்களால் வியாபார நிமித்தம் தூண்டப்பட்டுப் பிரயாணித்தாரென்பதூஉம் அப்பிரயாணத்திலேயே பரமண்டலகெதி யடைந்தாரென்பதூஉங் கூறுவான் றொடங்கிக் கூறிவருமவதாரச் சரிதையை யொருவாறு நிறுத்தம்பாக இச்செய்யுள் கூறப்பட்டமையான் ‘அக்காலம்’ என்பது அவ் வாறுமாதத்தை யுணர்த்திநின்றது. இனி அது ஆறுமாதங்களையு முணர்த்துமென்பர் முதலுரையார். அங்ஙனங்கூறுமேல் அப்துல்லா பிரதிமாதங்களிலும் வியாபார நிமித்தம் ஏவப்பட்டும் பிரயாணப்பட்டும் பரகதியடையப்பட்டு மிருத்தல்வேண்டுமாதலினவர்கூற்றுப் பயனில் கூற்றாமென்க” என்கின்றார்.

அப்துல்லா அவ்வாறுமாதத்திலேயே பிரயாணமாய்ப்பரகதியடைந்திருப்பாராயின் ஆசிரியர் அதனைவலியுறுத்துவான் வேண்டி "கனவுகண்டகமகிழ்ந்தினிதிருக்குமக்காலம்" என்னாது, "கனவுகண்டகமகிழ்ந்தினிதிருக்குமம்மாதம்" என்பர். கனவுகண்டு இருக்குங்காலம் என்றமையான், காலமென்பது கனவுகண்ட ஆறுமாதங்களையுமே யுணர்த்தும். ஆறுவதாகிய ஒரே மாதத்தையுணர்த்துமாயின், கனவுகண்டகமகிழ்ந்திருந்தது அவ்வொரேமாதத்திலாய், முந்திய ஐந்துமாதங்களிலுங் கனவுகண்டிலரென்பது பெறப்படும். ஆகவே, நிகழ்ந்த ஆறுமாதங்களுள் இரண்டாம் மூன்றும் நான்காம் ஐந்தாம் ஆறும் மாதமாகிய எந்தமாதத்திலோ, அல்லது எத்தனை மாதத்திலோ பிரயாணமானதும், வியாபாரஞ்செய்ததும் பரகதியடைந்ததும் நிகழ்ந்திருக்கவேண்டுமென்னுந் துணிபின்மையானன்றே; அக்காலம் என்றார். இதற்குத் திருஷ்டாந்தமாக நபி பெருமானார் கருவிற்றரித்த இரண்டாமாதம் அப்துல்லா வியாபாரமாநிமித்தம் தந்தையாலேவப்பட்டு மதீனாவிற்குப் போய் மீண்டுவருங்கால் மரணமடைந்தாரென்று "மதாலிபுல்லசுரூறு" என்னுங்கிரந்தஞ் சொல்லுகின்றது.

அல்லதூஉம், அப்துல்லா ஆறுமாதமாகிய ஒரேமாதத்தில் மக்காவினின்று புறப்பட்டு மதீனாவிற்போயிருந்து வியாபாரஞ்செய்து மீண்டு அபுவாவில்வந்து சரீராசௌக்கியமுற்று மரணமடைந்தாரென்றக்கால், மக்காவினின்று மதீனாவுக்குப்போகும் பிரயாணத்தூரம் ஒரு வாரத்திற்குக் குறையாது. ஆகலின், போகவும் வரவும் இரண்டுவாரங்களும், அங்குப் போயிருந்து சரக்



குகள் கொள்ளவும் விற்கவும் கூடியவினைவாயினும் இரண்டுவாரங்களும், அதன்பின் "கானாட்சிலவிருந்து" என்றமையான் இளைப்பாறியிருக்க ஒருவாரமும், பின் அங்கிருந்து புறப்பட்டு அபுவாவில்வந்து, சுகவீனமுற்று, மரணமடைந்து, அடக்கப்பட ஒருவாரமும் வேண்டுமாகலின், ஆகக்கூடி அப்துல்லா மக்காவினின்று புறப்பட்ட நாண்முதல் அவரின் நிரியாணச்செய்தி வரும்வரையுங் குறைந்த தொகையாய் ஆறுவாரங்கள் சென்றிருத்தல் அவசியமாம். ஆகலின், ஆறுவதாகிய ஒரே மாதத்து முப்பதுநாட்களும் போதா. இதனானும் எங்கூற்றே சரியான முடிபென்றுணர்க.

அதாஅன்று, "இனமுமாயமும் வாழ்த்திடக் கருப்பமுமிலங்கக் கனவுகண்டகமகிழ்ந்தினி திருக்குமக்காலம்" என்பதற்கு, யாம் தமது பந்துக்களும் பாங்கிகளும் வாழ்த்தும்படிக்கும் சூல்விளங்கும்படிக்கும் மேற்கூறியபடிச் சொப்பனங்களைக்கண்டு மனமகிழ்ந்து இனிதாயிருக்கும் அக்காலத்தில் எனப்பொருள்கூறியதனை உய்த்துணராது, "இனமும் ஆயமும் வாழ்த்தும் படிக்கும் சூல்விளங்கும்படிக்கும் கனவுகண்டார் எனின் பொருள் சுவைபடாது அருத்தாபத்தியான் வாழ்த்தப்படவும் சூல்விளங்கப்படவுமே கனவுகண்டாரென்பது தோன்றி இழவுபடுமாகலானும் ஆமினாமீது பந்துக்கள் உவப்பின்மையான் அவர்களால் வாழ்த்தலையடையார் ஆகலானும்" யாங் கூறியது வாளாகூறியது என்கின்றார்.

யாம் அவர்தாமாக வைத்துக்கொண்டபடி இனமும் ஆயமும் வாழ்த்திடக் கனவுகண்டாரென்று முடித்

நிலம், வாழ்த்திட இலங்க என்னும் வினையெச்சங்கள் இருக்கும் என்னும் வினைமுற்றையடுத்துக் காலமென்னும் பெயரான்முடிந்த வாறேகொண்டு, கனவுகண்டு அகமகிழ்ந்து இனமும் ஆயமும் வாழ்த்திட இனிதிருக்குமக்காலம் எனமுடித்திருப்பதைக் கற்றோர் கவனித்து, அவர் எம்மை வாளாதூற்றுவதை நிதானிப்பார்களாக.

37 மக்கநன்னகரப்துல் முத்தலிபெனுமன்ன
ரக்கமன்னமன்னப்துல்லாத் தனையழைத்திருத்தித்
தக்கபுத்தியுமுறைமையுந் தொழிலையுஞ்சாற்றி
யொக்கல் கூட்டுறப் புறநகர்ச்செழுகவென் றுரைத்
தார்.

இச்செய்யுளில், மன்னன் என்னும் எழுவாய் உரைத்தார் என்னும் பயனிலைபெற்று நிற்பது வழுவாமெனக்கொண்டு மன்னரென யாந் திருத்திப்போதர, திலகக்காரர் "மன்னவன் என்புழி உயர் திணை ஆடூஉ ஒருமைகுறித்த அன்விகுதி அப்துல் முத்தலிபினது ஒப்பறுதலைக்குறித்து நின்றது. இங்ஙனமறியாதார் மன்னர் எனத்திருத்திமயங்குவர். இக்கூற்றுறில் முதலுரையாரு மடங்குவர்" என்கின்றார்.

மன்னவன் என்பானொருவனை உயர்த்திக் கூற வேண்டுமாயின் அன் என்னும் ஒருமை விகுதியைப் பன்மையாகிய அர்விகுதியாக்கி மன்னவர் எனக்கூற வேண்டும். இவ்விதியையே ஆசிரியர் தொல்காப்பியர் * "ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியும்" என்னுஞ் சூத்திரத்தாலமைத்தார். இஃதறியாத அவர் கற்ற ஆறுதிஇலக்கணப்படி அன் விகுதி ஒப்பறுதலைச்குறித்து

* தொல்காப்பியம், கிளவியாக்கம், ௨௭-வது சூத்திரம்.



நிற்பதாகவே கொள்ளினும், மன்னவனாகிய எழுவாய் பயனிலை பெற்று முடியுமிட்டது அவ்வன் விகுதிக்கேற்ப உரைத்தான் என்றன்றோ முடிதல்வேண்டும். அங்ஙனமின்றி, மன்னவன் உரைத்தார் என வழுவாய் முடிதல் வியப்பன்றோ! அன்விகுதி ஒப்பறுதலை யுணர்த்து மிடத்து ஆன்விகுதி ஒப்பறுதலை யுணர்த்தாது போலும்! இவ்விதியானே அவர், தச்சன்செய்தார். கொற்றர்கட்டினான், மனிதர் வந்தான், மனிதன்வந்தார் எனக்கூறி, இலக்கணமும் உண்டு பண்ணுவர்போலும்! அவர் இதுபோல் வனவற்றிற் கூறுவன வனைத்திற்கும் இதுவே முடிபாகக் கொள்க.

38. தந்தைகூறிட வப்துல் லாமனந்தறுகாமன்
மந்திரவாளெடுத் தினிதுறவிசித்தனர் மருங்கி
லிந்திரவில்லென வில்லெடுத்தொருகையிலேந்திச்
சந்துகங்கொணர்சென்று கட்டுரைத்தனர்கடிதின்.

இச்செய்யுளில், திலகக்காரர் தமதறிவிற்குப் புலப்பட்டவாறு பொருள்கூறினவர், அம்மட்டிலடங்காது.

இனி மந்திரவாள் என்புழி அந்தரங்கவாளென்னும் அப்துல்லா பட்டத்திற்குரியரல்ல ராகலின் பட்டத்துவாளெனற் பொருந்தாதென்றும் கூறுவர் முதலுரையார். இவர் மக்கநன்னகர் அப்துல்முத்தலிபு என்ற செய்யுளின் அக்கமன்னமன் என்புழி மன்னவராகிய அப்துல்லா எனப்பொருள்கூறியுள்ளர்; ஆகலின் அப்துல்லாவை எந்தப்பட்டத்தில் வீற்றிருந்த காரணம் பற்றி மன்னவர் என்றாரோ? யாமறியேம். முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட் கிறையென்று

வைக்கப்படும்' என்றவள்ளுவரான் முறைசெய்யு நீதியுடைமைபற்றி இறையிற் பிறராகிய மாக்களையு மிறையென்றாற்போல அரசத்தன்மைக்குரிய தகையுடைமைபற்றி அப்துல்லாவை மன்னரென்றும் என்பாரேல், அதுபற்றியும் பட்டத்திற்குரியவாள் அவருக்குக் கிடைத்தல் எளிதேயா மாகலின் அவர் கூற்றுத் தவறென்க" என்கின்றார்.

பட்டத்திற்குரிய மன்னவனையே மன்னவனெனக் கூறுவதுமன்றி, அல்லாத பிறரையும் புலவன்பாடுமிடத்து மன்னவனெனப்பாடுதல் மரபாம். இவ்விதியானே ஆசிரியர் அப்துல்லாவை மன்னவ ரென்றாரன்றி, அவர் பட்டவர்த்தனரென்பது கருத்தன்று. திலகத்திற்குச் சிறப்புப்பாயிரஞ் செய்தாருளொருவர் திலகக்காரரை "நிதிப்பொருளுங் கதிப்பொருளுங் கொண்ட வேந்தன்" என்கின்றாரே. அவர் எந்தப்பட்டந்தரித்து என்னவாசனத்தில் வீற்றிருந்தகாரணம்பற்றி வேந்தன் என்றாரோ! அதை யாமறியேம்.

"முறைசெய்து காப்பாற்றுமன்னவன்" என்னுங் குறள் சாமானிய மனிதனைக்குறித்ததன்று. இறைமாட்சி என்னும் அதிகாரத்ததாய், ஒருமன்னவன் முறைசெய்து காப்பாற்றுவானாயின் அவன் கடவுளென்று வைக்கப்படுவான் எனக்கூறுவதாகலின், அக்குறள் இதற்கு எடுத்துக்காட்டாகாது.

அரசத்தன்மைக்குரியதகை யுடைமைபற்றி அப்துல்லாவை மன்னவரென்றுமென்பதை அவர் தாமாக



ஒப்புக்கொண்டு, அதுபற்றியும் பட்டத்திற்குரியவாள் அவருக்குக்கிடைத்தல் எளிதேயாமென்கின்றாராகலின், மன்னவனெனப்பாடப்படும் சாமானியன் எவனுக்கும் பட்டத்திற்குரிய வாள்முதலியன கிடைத்தல் எளிதுபோலும்' அவர் வேந்தரெனப் பாடப்பட்டிருப்பதால், அவருக்கும் பட்டத்துவாள் முதலியன கிடைப்பது மிகவுமெளிதாமே!

39 பாடலத்தின்மேற்சொன் டுறுதமிழ்ப்பரிவாரங்
கூடுகோளரித்திரளெனவர நெறிகுறுகிக்
காடுங்கானமுங்கடந்து செந்தேம்பொழிற்சனிசூழ்
நாடடைந்துபோய்ப் புகுந்தனர் மதீனமாநகரில்.

இச்செய்யுளில், ஆசிரியர் பரிவாரம் கூடுகோளரித்திரளெனவர என்று கூடென்பதனைக் கோளரியுடனமைத்துச் செய்யுட்செய்திருப்ப, திலகக்காரர் பரிவாரம் கோளரித்திரளெனக் கூடுவர என்றுமாற்றியும், பொழிலென்பதற்குப் பெருமை தங்கியவெனப் பொருள் கூறியும் சித்தசமாதான மின்றித் தடுமாறுவதுமன்றி, தனிற்பரிவாரமென்ற முன்பாடம் புகுந்தாரென்னும் பன்மையோடு முடியாதெனத் தமிற்பரிவாரமெனப் பன்மைப்பாலாகத் திருத்தியவெம்மை மறுத்து,

'சினவுவேல் கரத்து அப்துல்முத்தலிபு' என்ற செய்யுண்முதல் ஆதிகற்பனை ஊழ்விதிப்பயனும், என்ற செய்யுளிறுவாய் அப்துல்லாவினது தேகவியோகாகமம் கூறுதலொன்றேபற்றித் தமிலுறு பரிவாரமென்னது தனிலுறு பரிவாரம் என ஒருமையாற் கூறினர்.

இக்கருத்தையாத முதலுரையார் தமிலுறுபரிவார மெனத்திருத்திக் கூறுவர்” என்கின்றார்.

அப்துல்லாவின் ஏகவியோகாகமமொன்றைமாத்திரங் கூறுமேதுவால் அவரைப் பன்மையாற் கூறாது ஒருமையாற்றான் கூறவேண்டும்போலும்! இது என்ன விதியோ! அங்ஙனமாயின், தனிற்பரிவாரமென்பதற் கேற்பப் போய்ப்புகுந்தனனென ஆசிரியர் ஏனமைத்திலரோ!!! ஆ!! விபரீதம்!!!

40\. மதீனத்தின்னுறை ரசவருக்கங்களுமதீனப்
பதிபடித்தவூர்ச் சரக்கையுங்கொண்டுபெய்ந்தனமாக்
கதிர்கொண்மாடத்திற் கட்டிவைத்தவரவ்கரத்தி
புதியவாணிபத் தலைவிலைக்கீந்தனர்பொருளை. |ற்

இச்செய்யுளில், யாம் ஆசிரியர்கருத்திற் கிணங்க, பொருளைப் புதியவாணிபத் தலைவிலைக் கீந்தனர் என்பதற்கு, சரக்குகளைப் புதிதாகிய செட்டையுடைய முதல் விலைக்கு விற்றார் என பொருள்கூறியிருப்ப, திலகக்காரர் புதிய தலைவிலைக்கு வாணிபமீந்தனர் என மாற்றிக் கூறிவிட்டு,

“இனி புதியவாணிபம் தலைவிலைக்கு என்புழிப் புதிதாகிய செட்டையுடைய முதல்விலைக்கு எனப்பொருள் கூறுவர் முதலுரையார். இக்கூற்றில் பொருள்வியப் பின்மையானும் ‘கொண்டுபெய்ந்தனமாக் கதிர்கொண் மாடத்திற் கட்டிவைத்து என்றமையான் கடைவிலக்கு விற்றாரென்பதே கருத்தாமாகலானும் அவ்வுரை யாசிரியர்க்குடன்பாடாகா வென்க” என்கின்றார்.



புதியவாணிபம் என்பது புதுச்செட்டென்று தம், லைவிலை என்பது முந்தின விலையென்றும் இலச்கியங்கூறுவதுமன்றி, வியாபாரிகள் தஞ் சரக்குக்களை முந்தின விலைக்குவிற்பதே முறைமையாகலான், எம்முறையே ஆசிரியர்க் குடன்பாடாமென்ப தறிக.

41 வாணிபத்தொழிலனைத்தையுமுடித்துமன்னவருங்
காணுநாட்சிலவிருந்து தம்பதிவரச்சருதிப்
பூணணிந்தழகுறு மிளையவர்புடைசூழச்
சேணடைந்தபுவாவெனுந்தலத்திடைச்சேர்ந்தார்.

இச்செய்யுளில், ஆசிரியர் வாணிபத்தொழில் அனைத்தையும் முடித்து என்றதற்சேற்ப, யாம் செட்டையுடைய தொழிலனைத்தையு முடியச்செய்து எனப் பொருள்கூறினேம் திலகக்காரர் அதனைத் தொழில் அனைத்தையும் வாணிபம்முடித்து எனமாற்றிக் கூறுவது மன்றி,

தம்பதிவரக்கருதிச் சேண் அடைந்து அபுவாவெனுந்தலத்தினைச்சேர்ந்தார் என்பதற்கு, தமது மக்காநகரத்திற்கு வரநினைத்து மதீனாவினின்று வெகுதூரத்தையடைந்து அபுவாவென்னுந் தலத்தினைச்சேர்ந்தார் என்னும் எங்கூற்றை மறுத்துத்தள்ளி, சேணடைந்து என்பதற்கு விசாலம்பொருந்திய எனப்பொருளமைத்துக்கொண்டு, அபுவாவென்பது மதீனாவிலுள்ள ஓர் தானத்தின்பெயரென்றும், அப்துல்லாவும் மற்றவர்களும் அந்தத்தானமாகிய அபுவாவிற்றான் இறங்கியிருந்து வியாபாரஞ் செய்தார்களென்றும், சேணடைந்து அபுவாவெனுந் தலத்தினைச்சேர்ந்தார் என்பதற்கு

மக்கத்திற்குத் திரும்ப நினைத்து விசாலம் பொருந்திய அந்த அபுவாவென்னுந் தானத்தில் ஒன்றுகூடினார்களென்பது பொருளென்றும், இதுகளையறியாது யாம்பொருள்கூறி யிடர்ப்பட்டேமென்றுங் கண்டபடிப் பிதற்றுகின்றார்.

அபுவாவென்பது மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள ஒருசிற்றூரென்பது, ஆசிரியர் தம்பதிவரக் கருதிச் சென் அடைந்து அபுவாவெனுந்தலத்தினைச்சேர்ந்தார் எனத் தெள்ளிதிற்கூறி யிருப்பதானும், பின்னும் "பாடிவூரபுவா" என்பதானும் நன்கு விளங்குகின்றது. அன்றியும், அபுவாவென்பது மக்காமதீனா இருநகரங்களுக்கு மிடையிலுள்ள சிற்றூரென்று "சிறந்துத்தகுலான்" என்னும் கிரந்தஞ் சொல்லுகின்றது. இவைமாத்திரமல்ல; இன்னும், நபிபெருமானாரது மாதாவாகிய ஆமினாவும் அந்த அபுவாவிற்றான் கிரியாணமாயினாரென்பதை யுணர்த்தும் புனல்விளையாட்டுப் படலத்தில், ௩௩ - "இனத்துளார்—மக்கமாநகர்க்கநுப்பினார்" ௩௪ - "ஆமினாகட்டழககுமரை நடத்தி—வனசவாவியும் சுழைக்காடு நீங்கினார்" ௩௫ - "அடவிவிட்டகன்று அபுவாவிலாயினர்" ௩௬ - "சிறுகுடியெனு மபுவாவிற் சேர்ந்தவர்" அ௰- "அபுவாவிலுள்ளவர் மக்காவை நாடி, பாசுரம்வரைந்திட்டார்" என்னுஞ்செய்யுட்களானும் அபுவாவென்பது மதீனாவிலுள்ள வோர் தலமன்றென்பதும், மதீனாவுக்கு அயலில் தூரத்திலுள்ள சிற்றூரென்பதும் தாபிக்கப்படும் - அவர் மதீனாவிற்குப் பலதரம்போய் வந்தோர்போலக் கூறுவது அறியாமை யென்பதறிக.



42. ஆதிகற்பனையூழ்விதிப்பயனும்வந்தடைந்து
போதுநாட்களுநாழிகைக்கணக்கையும்போக்கி
நீதிமன்னவரப்துல்லாதமையறிவினைவாய்ச் [ர்.
சோதிமென்முகமிலங்கிடத்துயில்வபோன்றிறந்தா

இச்செய்யுளில், ஆசிரியர்கருத்திற்கேற்ப, ஆதிகற்பனையூழ்விதி என்பதற்கு ஆதியாகியகடவுளதுகற்பனையான பழவினையாகிய நியமிப்புஎன்றும், செய்யுட்கூறுமாறே அப்துல்லாவுக்கு நீதிமன்னவர் என்னும் விசேஷ அடைகொடுத்தும் யாம் பொருள்கூறியிருப்பதனைத் திலகக்காரர் மறுத்து, நீதிமன்னவனது ஆதிகற்பனையென்றும் ஊழ்விதிப்பயன் என்பதற்கு முறைமையானகாலத்தின்பிரயோஜனம் என்றும், ஊழ்விதிப்பயன் வந்தடைந்து நாட்களையும்நாழிகைக்கணக்கையும்போக்கி அப்துல்லா இறந்தார் எனக் "கோழிகூவிப்பொழுது விடிந்தது" என்றாற்போல நிற்பதனையறியாது, ஊழ்விதிப்பயனானது, நாட்களையும் நாழிகைக்கணக்கையும் போக்கிவிட்டு அப்துல்லா இடத்தில்வந்து அடைந்தபோது இறந்தார் என்றும் பலவாறு பிறர்நகைக்கப்பொருள்கூறியிருப்பதுமன்றி,

"இச்செய்யுளில் ஆசிரியர்கருத்தறியாது முதலுரையார் தமது சிற்றறிவிற்கேற்றபடி செய்யுளைத்திருத்தி வாளாக்கூறும் பொருள்வேறுபாடுகளை யவருரையானேயறிக" என்றும் உளறுகின்றார்.

நீதிமன்னவன், தனையறி என்னும் ஒருமைகள் இருந்தாரென்பதனோடுமுடியாவாறுபற்றி நீதிமன்னவர், த

மையெனத்திருத்தியதும், செய்யுளைக்கம்போல எவருமொப்புக்கொள்ளு மாறுபொருள்கூறியதுமாகிய எம்மறிவு சிற்றறிவெனின், இலக்கிய இலக்கணங்களுக்கு முழுவிரோதமும், ஆசிரியர்க்கும் ஏனையர்க்கும் பொருந்தாவிதமும், இன்னும் பலவிபரீதமும்படச்செய்யுட்களைக்கெடுத்து மூளைகலங்கப்பாடுபட்டுப்பொருள்வரைந்துவைத்த அவரறிவுபேரறிவுதானே? ஆம்! பேரறிவுதான்!! இவ்விதப்பேரறிவு அவருக்கு இன்னும்விர்த்தியாமாறு கடவுளை யாம்பிரார்த்திக்குதும்.

அதாஅன்று "நாள் என்பது உலகம் அருக்கனா லொருமுறைச் சுற்றப்படுவதை" என்றும் வேறுபலவும் பிதற்றுகின்றார்.

அவர் தாம்கற்றதாக மனோரதியஞ்செய்துகொண்டிருக்கும் இலக்கிய இலக்கணங்களே அவரைச்சந்தியினின்று நந்தளிக்கக்கொணர்ந்துவிட்டிருக்க, பின் வானசாத்திரத்திலும் வாய்வைத்துக்கொண்டது பரிதாபம்! பரிதாபம்!! பரிதாபம்!!! ஏனெனின்; அவர்கூறுமாறு உலகம் அருக்கனாற் சுற்றப்படவில்லை. அல்லது, அருக்கனும் உலகத்தாற் சுற்றப்படவில்லை. பின்னையெவ்வாறெனின்; பூமியானது ஜலத்தின்மீதுவிரித்தபடி அசைவற்றிருக்கின்றது. நான்காம்வானத்தில் உயர்ந்துநிற்கும் பலக்கு என்னும்யந்திரம் கிழக்கினின்றுமேற்காகக் கீழ்மேலாய் அங்கேயே சுற்றிக்கொண்டுநிற்கின்றது. அந்தபலக்கின் தட்டுகளுள் ஒருதட்டில் சூரியனிருக்கின்றது. சூரியன் படைக்கப்பட்ட நாண்முதல் அது இருக்குந்தட்டிலேயே ஒரேபடியாய் மேற்கினின்று கிழக்குநோக்கி நடந்துகொண்டேயிருக்கின்றது. அந்



டை தாமதநடையானதால் மனிதர்க்குத்தோற்றாமல், பலக்கு சுற்றும்விரைவானசுற்றினால் சூரியன் கிழக்கினின்றுமேற்கேபோகிறதாகத்தெரிகின்றது. இனி கியாமத்தடுத்தபோது பலக்குசுற்றுவதுநிற்கும். அப்போது சூரியன்கிழக்கினின்று மேற்குப்போவதாகக்காணப்படுவது நின்று, தானிருக்குந்தட்டில் மேற்கினின்றுகிழக்காக என்றும் நடந்துகொண்டிருக்கும் சுபாவநடை காணப்படும். அதைத்தான் கியாமத்துநாளானபோது சூரியன் மேற்கினின்று கிழக்கேபோகும் என்பதாகச் சொல்கிறார்கள். பலக்கு சுற்றுகையில் சூரியனிருக்குந்தட்டுக் கீழ்ப்புறமானால் நமக்குப்பகற்காலமும், மேற்புறமானால் சூரியன்மறைந்து இராக்காலமுமாகின்றன. நாட்கணக்கும், நாழிகைக்கணக்கும், பிறவும், பலக்கின் நடைகொண்டன்றி மற்றவகை யாலுண்டாகா. இதனை விளங்கிக்கொள்ளும் திராணி அவருக்கின்மையான், விரிவகைகூறாது நிறுத்துகின்றாம்.

43 கூடிச்சூழ்ந்தவர் விதிப்பயனெனக்குலைகுலைந்து
வாடிமன்னனா யெழில்பெறமணத்துடனடக்கிப்
பாடியூரபு வாவைவிட்டகன்றுபோய்ப்பதியை
நாடிவந்தவ ராமினைக்கிவையெலாநவின்றார்,

இச்செய்யுளில், ஆசிரியர் "கூடிச்சூழ்ந்தவர்" "பாடியூ ரபுவாவைவிட்டு அகன்றுபோய்ப் பதியைநாடிவந்து" "அவர் ஆமினைக்கு இவையெலாம் நவின்றார்" எனமிகத் தெளிவுறக்கூறியிருப்ப, திலகக்காரர் அதனைச் சின்னபின்னமாக்கி இடர்ப்படுத்தி, அபுவாவைவிட்டகன்று பாடியூர் பதியை நாடிவந்து என விப

ரீதப்பட "பாடியூர் - நகரமாகிய, பதியை-மக்காவை" என்று பொருள்கூறுகின்றார்.

பதியென்பதுதானே குறிப்பினுன்மக்காவாகிய நகரமெனப் பொருடர்துநிற்ப, பாடியூர் என்பதனையும் அஃதுடன்கூட்டப் பாடியூர்பதி என்றாகுமன்றோ! அங்ஙனமாங்கால் அதற்குப்பொருள் நகரமாகிய நகரமாகிய மக்காவெனப் படுமன்றோ? அன்றேல், பதியென்பது மக்காவுக்கு ஓர் பரியாய நாமமாயிருப்பினன்றோ பாடியூர்பதியென்பது பொருந்தும்? இதனைக் கற்றோர் ஆராய்க.

அதாஅன்று "பாடியூர் என்புழிச்சிற்றூர் என்பர் முதலுரையார். அது பொருந்தாமை முன்னர்க்கூறிய வாற்றானறிக" என்கின்றார்.

பாடியூர் என்பது அவர் கூறுமாறன்றி, யாங் கூறுமாற்றான் எங்கூற்றே பொருத்தமுடைத்தாமென்பது முன்னர்க்கூறிய நியாயங்களாற் காண்க.

44. மாற்றங்கேட்டலு மடமயின் மனமுடைந்தலறித்
தோற்றுமாமழை சொரிந்தெனக்கண்ணினீர்சொறியப்,
போற்றுங்காழகிற் புகைக்குழனிலம்புரண் டசையக்,
சோற்றொடிக்கரக் காந்தடாமலாமுகங் குழைக்க.

இச்செய்யுளில், திலகக்காரர் தம் மனஞ்சென்றபடியே உரையும் விசேடமுங்கூறி, கோல் என்பதற்குப் புள்ளியென்று அர்த்தமெழுதிக்கொண்டு,



"இனி கோல் என்பதை வளைவு எனப்பொருள் கொள்ளுவாருமுளர். அஃதே முதலுரையார்க்கு முடன்பாடு. வளையலை வளைந்தவளையலென்பது அத்துணைப் பொருள் சிறப்பன்றாகலின் பயனில் கூற்றென்க" என்கின்றார்.

*"தொடிவளைத் தோளிதுயர் தீர்த்தேனென" என்புழித் தொடிவளையென்பதற்கு வளைந்தவளையல் என அடியார்க்கு நல்லார் பொருள் கூறுகின்றார். இவர் கூற்றையும் பயனில்கூற்று என்பர்போலும்! இன்னும் பல சங்கச்செய்யுட்களிலும் இங்ஙனம் பயின்றுவருதல் கற்றோர்வாய் கேட்டறிக.

45. வருந்திதொந்தமு தாமினுவிடைதலும்வளைந்து
திருந்திழைக்கொடி மடவியரிரங்குதறிரண்முத்
திருந்தசூல்வலம் புரியினைச்சூழ்ந்தசங்கினங்க
ணிரைந்திரங்குவ போன்றதுவெங்கணுநிறைந்தே

இச்செய்யுளில், யாம் போன்றனவென்றிருந்த பன்மையை ஒருமையாகப் போன்றது எனத்திருத்தியதற்கும், மேலைச்செய்யுளோடு இச்செய்யுள் குளகமாய் ஒரே எழுவாயை யுடையனவாய் நிற்பதான், மேலைச் செய்யுளிற் கிடந்தமடமயிலையும், இச்செய்யுளிற்கிடந்த ஆமினுவையும் வேறுபிரிக்காமல் மடமயிலாமினுவெனக் கூட்டியதற்கும் திலகக்காரர் குற்றங்கூறப்புக்கு,

"இன்னிசைபயின்ற மென்குரல்மடவியர் துயராற்றாது பல் வகைப்பயிற்றி யொலித்தகுரல் பலவாயின என்பான் 'இரங்குவபோன்றன' வென்றார்." இக்க

* சிலப்பதிகாரம், புகார்காண்டம், நாடுகாண்காதை.

ருத்தறியாதார்;- போன்றது எனச் செய்யுளைத்திருத்திக்கொள்வர். இஃதே முதலுரையார்க்கு முடன்பாடு" என்கின்றார்.

ஆசிரியர் கூறுமுவமம் குரலுக்காயினன்றே அக்குரலென்னும் பால்பகா அஃறிணைப்பெயர் போன்றனவெனப் பன்மைமுடிபெய்துநிற்கும்? அங்ஙனமின்றி, அவ்வுவமம் இரங்குதல் என்னும் இசையையுணர்த்தும் ஒருமைத்தொழிற்பெயர்க்காய் நிற்றலின், அவ்விரங்குதலாகிய ஒருமை போன்றனவெனப் பன்மையாய் முடிவதெங்ஙனம்? இதனைக்கற்றோர் கவனிக்க.

அதா அன்று "இதூஉமன்றி இச்செய்யுட்குப் பொருண்முடியுமாறறியாது மனஞ்சென்றவழியேசென்று செய்யப்படுபொருளாகிய ஆமினாவை எழுவாயெனமயங்கி மாற்றங்கேட்டலும் என்றசெய்யுள் இச்செய்யுளோடு முடிதலின் ஈரிடத்தும் எழுவாய்வருதன் மிகையாமெனாந் தவறுளம்பற்றி அச்செய்யுளிற் கிடந்த மடமயில் என்பதனோடு ஆமினாவைப்படுத்தி இளமயிலாகிய ஆமினா என நுதலிப்போந்தார். இக்கொள்கை ஆசிரியர்க் குடன்பாடாகா வென்க" என்கின்றார்.

மாற்றங்கேட்டலுமென்ற செய்யுளில் மடமயிலெனக்கிடக்கும் எழுவாயே மணமுடைந்து அலறி, நீர் சொரிய, அசைய, குழைக்க எனநின்று, பின் அடுத்த செய்யுளையவாய், வருந்தி, நொந்து, அழுது, இடைதலும் என வினைமுடித்து நிற்ப, வருந்திநொந்தழுதாமினாவிடைதலும் என நிற்கும் ஆமினாவை இங்குமெழுவாயாக்குதல் பொருந்தாதென்றே மடமயிலாமினா



எனக்கூட்டினும். அவர் மடமயில் அலறி, சொரிய, அசைய, குழைக்க, வருந்தி, நொந்து, அழுது, இடைதலும் என மடமயிலை எழுவாயாகவும், ஆமினாவளைந்து எனக்கொண்டு ஆமினாவைச் செயப்படுபொருளாகவு முரைகூறி மாழ்கின்றார்.

அவர்கூறுமாறு ஆமினா செயப்படுபொருளாயின், மடமயிலாகிய ஆமினா வருந்திநொந்து அழுது இடைதலும் அவளை வளைந்திருந்து என்பதே பொருந்துமன்றி, ஆமினா வருந்திநொந்தழுது இடைதலும் ஆமினாவை வளைந்து என ஆமினாவை ஈரிடத்துங்கூறுதல் மிகையாமென்பதை அறியார்போலும் பேதையர்!

அதா அன்று, இரங்குதல் முத்திருந்தவலம்புரியினைச் சூழ்ந்த சங்கினங்கள் இரங்குவபோன்றது என ஆசிரியர் சூழ்ந்தவென்னும் பெயரெச்சத்தைச் சங்கினங்களோடு முடித்திருப்ப, அவர் சூழ்ந்த இரங்குவ போன்றனவெனக் கூட்டி, சூழ்ந்த வென்பதற்குச் சூழ்ந்து எனப்பொருந்தாமையாப் பொருள் கூறினார். இதுவுமோர் புதுமையே!

இன்னுமவர், ஒத்திருந்தனவென எழுதவறியாது ஒற்றிருந்தனவெனப் பலவிடத்து மெழுதுகின்றார். அவர்கற்ற இலக்கணம் வியக்கற்பாலதே!

46. சலித்துவிம்மிய மயிலினைக்கண்டுமெய்தளர, வலி
த்ததோபகை விதிகொலோ மகப்பெறும்பலனோ, பலி
த்ததேதெனவறிகிலோமெனப்பதைபதைத்தே, யொ
லித்தையோவென விரங்கினரூரினிலுளரே.

இச்செய்யுளில், ஆசிரியர் சலித்துவிம்மிய மயிலினைக்கண்டு என்புழிச் சலித்துவிம்மிய மயிலாகிய ஆமினாவைக்கண்டு எனப் பொருட்பயப்பித்திருப்ப, திலகக்காரர் மயிலினையென்னும் இரண்டாவதை ஆறாவதாகமருண்டு, கண்டு என்புழித் தன்மையைக்கண்டு என விபரீதார்த்தம் பண்ணுகிறார். இது வியக்கற்பாலதே.

அதாஅன்று, வலித்ததோ, விதிகொலோ, பலனோ என்ற ஓகாரங்கள் மூன்றும் ஐயப்பொருளில்வந்தனவென்றும், வினாப்பொருளில்வந்தன வென்றுங் கூறுவர் எதனவறிகிலோம் என்றமையான் தெரிநிலைப்பொருளில் வந்தன என்று யாங் கூறியதனையுணராது, அவ்விருகூற்றும் முதலுரையார்க் குடன்பாடேயென அபவாதங்கூறி, வினாவுமன்று, ஐயமுமன்று. வியசனங் குறித்து நின்றன என்கின்றார்.

ஓசாரம் இத்தனைப்பொருளில் வருமெனவரையறுத் திலக்கணஞ்செய்த தொல்காப்பியர் முதலாயினோர் கூறாத வியசனப்பொருளில் வரும் ஓகாரமு முண்டென அவர் ஆறாவ திலக்கணத்திற் கண்டார்போலும்!

47. உடுத்தபூழியிற் புதைமணியெனவுடலொடுங்கி
வடித்தகண்ணினீ ரொழுகிடவிருந்தபொன்மயிலை
யடுத்துவந்திருந்தன் புடனப்துல்முத்தலிபு
தொடுத்ததுன்பங்க ளகற்றிநல்வழிபலசொன்னார்.

இச்செய்யுளில், ஆசிரியர் உடலொடுங்கிக் கண்ணினீரொழுகிட இருந்த பொன்மயிலை அப்துல்முத்தலிபு அடுத்து வந்திருந்து துன்பங்களகற்றி அன்புடன் நல்வழி பலசொன்னார் எனத்தெற்றெனப் பொருண்முடித்திருப்ப,



திலகக்காரர் வந்திருந்த அப்துல் முத்தலிபு கண்ணினீரொழுகிட உடலொடுங்கிப் பூழியிற் புதைமணியென இருந்தபொ உடுத்தமயிலை அடுத்துத் துன்பங்களாற்றி நல்வழிபல சொன்னார் என மாற்றிக்கூறி, பல விசேஷவுரையும் வரைந்து, வந்திருந்து என்புழி இருந்தவென்பது “புகழ்புரிந் தில்லிலோர்க்கில்லை” என்றாற்போல நின்றதென இலக்கணங்கூறுகின்றார்.

வந்திருந்த அப்துல்முத்தலீபு என அவர் முன்னமே கூட்டிக்கொள்வதான், அப்துல்முத்தலிபு அப்துல்லாவின் நிரியாணச்செய்திவருமுன்னமே அங்குவந்திருந்தார்போலும்! அவர் இங்கன்றி இன்னும்பலவிடத்தும் வரும்பெயரெச்சங்களையெல்லாம் வினையெச்சமாக மாற்றி, யாம் எம்முறையில் “தெளித்தமின்” என்ற செய்யுளுரையிலெடுத்துக்காட்டிய “புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை” என்ற குறளொன்றையே மேற்கோள் காட்டுகின்றார். அக்குறளே அவர்க்கு இங்ஙனமயங்க வழிகாட்டிற்றுப்போலும்.

அதாஅன்று இக்கருத்தெல்லாம் ஒருங்கேகெட நூலாசிரியரினு மிகக்கற்றோர்போன்று ஆற்றியென்பதை அகற்றி எனச்செய்யுளைத் திருத்திப்போந்தார் முதலுரையார்” என்கின்றார்.

ஆற்றியென்பதே சிறப்புடைத்தாய்ப் பொருளினிதுதந்து பொருந்திநிற்ப, அதனை அகற்றியென வாளாமாற்ற எமக்கு நிமித்தமில்லை. எம்முறையில் அகற்

றியென்றிருக்கின்றதே யெனின்; யாம் உரையெழுதுங் கால் பார்த்துக்கொண்ட புத்தகப்பிரதியில் அகற்றி யென்றிருத்தல்வேண்டும். யாம் அதைத் திருத்தினே மல்லேம். அங்ஙனந்திருத்தியுள்ளேமாயின், எம்முரை யில் ஆற்றியென்பது முன்பாடமெனக்குறித்து, திருத் தியதற்கு நிமித்தமுங் கூறியிருப்பேம். அங்ஙனம் ஆற் றியென்பதனை அகற்றியெனமாற்றினும், செய்யுட்கருத் தெல்லாம் ஒருங்கேகெடுதலெங்ஙனமாமோ!

48. இனத்துளார்சொலுநல்வழிக்குருகிநெஞ்சிடைந்து
நினைத்தபற்பலதுன்பமு மகற்றிநீணிலத்தி
லனைத்தையும்விதித்தவன் செயலினையுமுற்றறிந்து
மனத்தினிற்றெளிவாகினர் குலக்கொடிமயிலே.

இச்செய்யுளில், யாமெழுதிய வுரைக்கு ஒருவா றொப்பக்கூறிய திலக்காரர், பின் தாமாகமருண்டு "இச் செய்யுட்கு முதலுரையார் கூறுவனவெல்லாம் ஒருவாற் றானும் பொருந்தாதென மறுக்க" என்றுகூறி, இதற் குத்திருட்டாந்தமாக 'நீணிலத்திலனைத்தையும்விதித்த வன் செயலினையு முற்றறிந்து என்பதற்கு" நீண்ட இவ்வுலகின்கண்ணடைபெறும் எல்லாவற்றையு முண் டாக்கின கடவுளினது செயலையு முடியவறிந்து எனப் பொருள் கூறிய பேதைமையானறிக" என்கின்றார்.

நீணிலத்தில் அனைத்தையும் விதித்தவன் செயலி னையுமுற்றறிந்து என்பதற்கு யாங்கூறியதற்கு மாறாக, "நீண்ட இப்பூமண்டலத்தில் வழங்கும் எல்லாக்காரி யங்களையும், கடவுளதுசெயலினையும் கவனித்தாராய்ந் து" எனத்தமது அறியாமையாற் குளறுவதே அறிவெ



ன நினைத்தார்போலும்! அங்ஙனமாயின், நீண்ட இப் பூமண்டலத்தில் வழங்கும் எல்லாக்காரியங்களும் வே று; கடவுளதுசெயல் வேறாய் முடிவதை யறியார் போ லும் பேதையர்.

இன்னும் இவையெல்லாம் விரித்துக்காட்டிற்பல் குமென்றஞ்சி நிறுத்தினாராம்! ஆம்! விரிக்க விரிக்க ஊழற்பல்குந்தான்! அதனால் மானபங்கந்தா!! அதற்கு அஞ்சவேண்டியது புத்திதான்!!!

49. தவிசிருந்துகன்னெறி முறைநடத்துதாவூது
நபியுந்திங்களோரேழினிற் கனவினினவின்று
ரவியுங்காலமன்றூட்டத்துக்குரியவரானோர் [தே.
புவியினிற்பெயர் முகம்மதென்றிடுமெனப்போந்

இச்செய்யுளில், ஆசிரியரமைத்த திங்களோரேழி னில் என்புழிக்கிடக்கும் ஏழென்னுமெண்ணுக்கடையா கிய ஓரென்பதனைத் திலகக்காரர் வாளாபிரித்துத்தவி சென்பதனோடுகூட்டியும், கழிந்த ஆறுமாதங்களிலும் வந்த ஆ நபிமார்களைப்போல தாவூதுநபியும்வந்தா ரென்பான்கொடுத்த உண்மையையறியாது, நபியுமென்ப தனை நபியாயும் எனக்கொண்டு தவிசிருந்தென்புழி அர சாயெனவாளா இருசொல்வருவித்து அதற்கோருண்மை கொடுத்து அரசாயுமிருந்தென வமைத்துக்கொண்டும், செம்பொருள்பயக்குஞ் செய்யுளைச் சீரழித்து, அவியுங் காலமென்பதற்கு உயிர்கள்வருந்துங்காலமென்றும், பெ யர்முகம்மதென்றிடுமென நவின்றார் என்புழித் தமது பெயரை முகம்மதென்று கொடுப்பாரென்று சொன்னா ரெனப்பொருளைக்கெடுத்தும் உளறுவதுமன்றி, அவியுங்

காலமென்பதற்கு கூறாதுங்காலத்தை யாங்குறிப்பானுணர்த்தியதை மறுத்து எமக்கு அறிவின்மைகற்பித்து இடுகெனத்திருத்திப் போந்ததையுமறுக்கின்றார். அவர் கூறுவனவனைத்தையும் கற்றோர் கவனித்து ஆராய்க.

அதாஅன்று, கனவினிற்போந்து என்புழிப்போந்துஎன்பதற்குக் கல்விமான்களே வந்து எனப்பொருள்கொள்வாரன்றி, ஏனைய பேதையர்புகுந்து என்றேபொருள்கொள்வர். தாவூது நபி கனவினுள் எப்படிப்புகுந்தாரோ ! ஆச்சரியம் !!

50. நலங்கொடிங்களோ ரெட்டினில்சுலையுமானபிவங்
கிலங்குபூணணிமயிலனாய் நின்வயிற்றிருந்தோர்
பெலங்கொளு மதுனன்கிளைப்பேரொளிநபியாய்த்
துலங்கவந்தவர்பெயர் முகம்மதுவெனச்சொன்னார்

இச்செய்யுளில், எமக்குமாறாகவுரைகூறப்புக்க திலகக்காரர் நலங்கொள் திங்கள் ஓரெட்டினில் என்பதை மறுத்துமாற்றித்திங்கள் எட்டினில் என்றுமாத்திரமெடுத்துக்கொண்டு, நலங்கொள் ஓர் என்பனவற்றைப்பிரித்துக்கொண்டுபோய்ப் பூண் அணி ஓர் நலங்கொள்மயிலனாய் எனக்கூட்டித்தடுமாறுவதுமன்றி, யாம் நலங்கொள் திங்களோர் எட்டு எனச் செய்யுட்கிடந்தவாறே கொண்டு நன்மைகொள்ளுமோர் எட்டாமாதமெனப் பொருள்கூறிய எமது மடமையைவிளக்கி, எட்டாமாதம் நன்மைகொள்ளுமாயின் மற்றமாதங்கள் நன்மைகொள்ளாதனவென்றும், ஓரெட்டாமாதமென்றால் ஈரெட்டாமாதமும் மூவெட்டாமாதமு முளவென்றும் தமது நுண்ணறிவாற்கிண்டியெடுத்துக் காட்டுகின்றார். இவற்றையும் கற்றோர் கவனமாராய்க.



அதாஅன்று, சுலையுமானபிவந்து என ஆசிரியர் ஒருபெயராயமைத்திருப்ப, அவர் நபி சுலையுமான்வந்து எனமாற்றி, அதற்கு நபியாகிய சுலையுமானென இருபெயரொட்டாகப் பொருள்கொள்ளாமல், நபிகளில் சுலையுமான்வந்து என மகிமைகுன்றக் கூறுகின்றார். இதனையும் கல்விமான்கள் கவனிக்க.

அதாஅன்று, இன்புறக்கிடக்குஞ் செய்யுட்களைக் கைப்புறக்கலைக்குஞ் சிற்றறிவு எமக்கே யுரித்தென்று ஸாபித்த அவர், இச்செய்யுளில் மயிலனீர் எனக்கிடந்ததை மயிலனாய் எனத்திருத்தியது யாதுபற்றியோ! அது கைப்புறக்கிடந்ததுபோலும்!

51. மாதமொன்பதி லாமினாக்கனவினின்மதித்தே
வேதநான்மறை நேர்வழிக்குரியவர்விளங்கக்
கோதையேபெறின் முகம்மதுவெனப்பெயர்கூறென்
றாதிநாயகன் வரிசையீசாநபியறைந்தார்,

இச்செய்யுளில், ஆசிரியர் ஆதிநாயகனது வரிசைபெற்ற ஈசாநபி யென்பான்வேண்டி "ஆதிநாயகன் வரிசையீசாநபி" என்றார். அவ்வாறே பொருள்கூறின்வருங் கேடுபெரிதாமெனத் திலகக்காரர்கருதி,

"ஆதிநாயகன் மறைவரிசை வேதம்நால்" எனமாற்றிக்கொண்டு கண்டபடிப் பொருள்கூறுகின்றதுமன்றி, யாம் வரிசையீசா நபியென வரிசையை ஈசாநபிக்குக் கூட்டியிடர்ப்படுவதாகவும், நபிகட்கெல்லாம் பொதுவாகச் சார்த்தப்படும் வரிசையென்பதைத் தனித்தனி நபிகளைக் கூறுமிடத்துச் சிலர்க்குச் சார்த்தி

யும் சிலர்க்குச்சார்த்தாமலும் போதல் ஆசிரியர்க்கு உடன்பாடாகாதென்றுங் கூறுகின்றார்.

நபிமார் பலரை ஒவ்வொருவராக ஒவ்வொருசெய்யுளி லமைக்குமிடத்துச் செய்யுட்கேற்றபடி அடைகொடுத்தும் கொடாமலும் செய்யுளேச்சம்போல முடித்துவைப்பது நூலாசிரியர் கருத்தேயன்றி நியமமன்று. அங்ஙனமே நூலாசிரியராகிய உமறுப்புலவர் இப்படலத்தின்கண் ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வொரு நபியையு மமைக்குமிடத்து "தரைபுகழாதம்" "இதுரீசுநன்னபி" "நூகுநன்னபி" "இங்கிதத்து இபுறுகீம் நன்னபி" "மூசாநபி" "தவிசிருந்து நன்னெறிமுறை நடத்துதாவூதுநபி" "சுலைமானபி" எனப்பலவாறு கூறினர். இவைபோலவே "ஆதி நாயகன்வரிசை யீசாநபி" என்றார். ஒருவர்க் கோரடைகொடுத்து, ஒருவர்க்குக் கொடாதுவிட்டால், அவர் அவ்வடையாகிய பண்பிற்கு அருகரல்லரோ! அங்ஙனங் கொடாதொழிந்ததற்கு அந்நபி ஆசிரியர்மீது குறைகூறுவரோ! ஆதிநாயகனது வரிசைபெற்றவரென ஈசா நபியைமாத்திரங் கூறினால் ஏனையநபிகட்கு மனஸ்தாபமுண்டாமென்று போலிக்கருத்துக்கொள்வது, "ஆதிநாயகன் வரிசை" என்பது "றூகுல்லா" என்பதை யுணர்த்துவதென அறியும் அறிவின்மையாலென்க.

52. ஈதலாலிமை யவர்தினமிடைவிடுத்திலராய்ப்
போதுசேர்குழ லாமினைச்சனவிற்போந்தே
யாதிதூதுவர் முகம்மதுபெயரெனவதிக
நீதியாணமா ராயமேபெறநிகழ்த்தினரால்.



இச்செயுளில், ஆதிதூதுவர் என்பதற்குத் திலகக்காரர் முதன்மையாகிய தூதர் எனப்பொருள் கூறி,

"இக்கருத்தறியாத முதலுரையார் கடவுளினது தூதுவரெனப் போலியுரை கூறுவர்" என்கின்றார்.

ஆதியென்பது உயிரீற்றஃறிணைப் பெயராயின் வன்கணத்தோடு புணருமிடத்து "ஆதித்தந்தை" என்பதுபோல ஆதித்தூதர் என வல்லெழுத்துமிக்கு முடிதல்வேண்டும். அங்ஙனமின்றி, ஆதியென்பது உயிரீற்றுயர்திணைப்பெயராய் நிற்பதாகலின் * "உயிரீறாகிய வுயர்திணைப்பெயரும் - எல்லாவழியு மியல்பென மொழிப" என்றவிதி யான் ஆதிதூதுவர் என இயல்பாய் நிற்கின்றது. அதனால் அது ஆதியினது தூதுவரென்றே பொருள்படுமென்க.

53. என்றும்வானவ ரிசைத்திடுங்கனவெலாமெடுத்தும்
வென்றிநன்னபி மார்சொலுங்கனவெலாம்விரித்து
மன்றலங்குழ லாமினைபடிப்படிவகையா [ம்
நன்றிதேர்ந்தசொற் றுயர்க்குத்தினர்தொறுநவின்
றார்.

இச்செய்யுளில், திலகக்காரர் எம்மை மறுத்து ஒன்றுங் கூறிலர். ஆயினும், அவர் ஆசிரியரமைத்த வானவர்கனவெலாம் எடுத்தும் நபிமார் கனவெலாம் விரித்தும் நவின்றார் என் பதனைக்கெடுத்து, வானவர்கனவெலாம் நபிமார்கனவெலாம் எடுத்தும் விரித்தும் எனக்கொண்டு, எடுத்துமென்பதற்குச் சீர்தூக்கி நீக்குவன நீக்கியுமென்றும், விரித்துமென்பதற்கு விரிக்கவேண்டுவன விரித்துமென்றும் விபரீதார்த்தம் பண்ணுகின்றார். பிறவும் கவனிக்க.

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு, ௰௯ வது சூ.

54. பெற்றதாயாருங் கனவினின்பெற்றியைப்பிரித்தே
யுற்றபேரொடு மனத்தொடுங்தெளிந்தறிங் தோர்ந்து
சொற்றதம்மகட் குறிப்பெலாங்காண்குறத் துணிந்து
குற்றமின்றிய முகம்மதேபெயரெனக்குறித்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் தம் மியற்கைவழக்கம் போலச் சிரழித்து, பெற்றதாயார் எனத் தாயென்பதோடு பொருந்திக் கிடந்த பெற்றவென்னும் பெயரெச்சத்தைப் பிரித்துக்கொண்டுபோய்க் கனவினின் பெற்றியை யென்புழிக் கனவின் பெற்ற இன்பெற்றியை யென வைத்தமைத்துப் பொருள் கூறுவது மன்றி,

"பெற்றவென்னும் பெயரெச்சம் பெற்றியென்பதனோடு முடிந்தது. இனி அதை தாயார் என்பதனோடு முடிப்பர் முதலுரையார். அது பொருந்தாது; என்னை? பெற்றதாயரும் எனின் செவிலியுமுளவாகத் தோன்று மாகலானும் அவ்வாறுற்றதாய் நாயகி அவர்கட்கில்லெனபது வெளியாதல்பற்றித் தாயார்க்குத் தினந்தின நவின்றார் என முன்னருங் கூறியமையானும் ஆசிரியர்க்கதுடன் பாடாகாமை பற்றி என்க" என்கின்றார்.

கனவின்பெற்ற இன்பெற்றியை என ஆசிரியரமைத்தபெற்றவென்பதை யாம் வாளாபிய்த்துச் சும்மா கிடந்ததாயென்பதோடு சேர்த்துவைத்திலேம். முந்திய செய்யுளில் தாயர்க்குத் தினந்தொறு நவின்றார் எனப் பொதுப்படக் கூறியதான், உயர்குலப்பெண்மக்கட்கு நற்றாய் செவிலித்தாயென இருதாய்மாரிருத்தல் மரபாகலின், அத்தாயரென்றது எந்தத்தாயையோவென ஐயநிகழாமைப்பொருட்டு இச்செய்யுளில் பெற்றதாயெ

ன வலியுறுத்தி ஆசிரியரே முடித்துவைத்தார். அதனை அவ்வாசிரியர்க்குடன்பாகாதெனத்தம்மறிவிற் கேற்பப் புரட்டுகின்றார் பேதையர். இதைக்கற்றோர் ஆராய்க.

அல்லதூஉம், ஆமினாவுக்குச் செவிலித்தாயில்லையேயென வழக்கிடவருவாராயினும், ஆசிரியர் பெற்றதாயரெனக்கூறியதே அதற்குச் சான்றாமே.

இச்செய்யுளில் தன்மகளென்றதைத் தம்மகளென்றும், குறித்தாளென்றதைக் குறித்தாரென்றும் யாம் திருத்தியதற்கு நையாண்டிபண்ண மறந்தார்போலும்!

55. செறிந்தவார்குழ லாமினாவுரைத்தசெய்தியைக்கேட்,டறிந்துதாயதற் கெதிர்மொழிகொடுத்தலு மாராய்ந்,
துறைந்தவல்லிருட் சித்தெறிமதியெனவோங்கி, நிறைந்தபேரொளி முகமலர்தரசபாநிகழ்த்தும்.

இச்செய்யுளில், ஆசிரியர், ஆமினாவுரைத்தசெய்தியைத் தாய்கேட்டறிந்து அதற்கு எதிர்மொழிகொடுத்தலும் அதனை சபா ஆராய்ந்து முகம்மலர்தர நிகழ்த்தும் எனமிகத் தெளிவுறவமைத்திருப்ப, திலகக்காரர் ஆமினாவுரைத்த செய்தியையும் தாய் எதிர்மொழி கொடுத்தலையும் சபாகேட்டு நிகழ்த்தும் என முடிக்கின்றார். அவர் கல்வியறியு வியக்கற்பாலதே

அதாஅன்று, சபாமுகம்மலர்தர நிகழ்த்தும் என்புழி ஆமினாவின் முகம்மலர்தர சபாசொல்லுவாரெனப் பொருள்கூறும் அவர், யாம் சபாவின் முகம் மலரவென்றதை இனிவரும் சுசு-வது " என்றும்பற்பல",

என்னுஞ் செய்யுளில் மறுக்கின்றார். யாமும் அச்செய்யுட்கண்ணே நிராகரிக்குதும்.

56. இரிந்தபாலெனச் செறுத்துப்பண் ணேழையுஞ்சினந்து, விரிந்ததெண்டிரைக் கடலிடையமுதெனவிளங்கிச், சொரிந்ததேன்மொழி யாமினாவயிற்றினிற்சூலா, யிருந்தநாளெலாங் கனவலாதிருந்தநாளிலையே.

இச்செய்யுளில், ஆசிரியர் இரிந்தபாலெனக் கடலிடையமுதெனவென்று எனவென்னும் உவமவுருபுசொடுத்தும், பண்ணேழையுஞ்சினந்து செறுத்து விளங்கித் தேன்சொரிந்த மொழியாமினாவென்று கொண்டு கூட்டவு மமைத்திருப்ப, பாலெனச்செறுத்து எனப்பொருந்தாது கிடக்கும் இவ்விதமான செய்யுளைக்கொண்டு கூட்டாகப்பொருள்கொள்ளக் கல்லாது, நேரான பொருடந்து நிற்குஞ்செய்யுளைக்கொண்டு கூட்டுப்பொருள்கோளென்று கெடுக்குந் திலகக்காரர் இச்செய்யுளைக்கிடந்தபடி வைத்துக்கொண்டு, “பாலெனவும் தேனெனவுங்கோபித்து” என்கின்றார்.

தேன் என்பது அங்கிருந்து இங்கு என்வந்ததோ! வந்தாலும் வரட்டும், முன்சினவுவேலென்பதற்குக் கோபிக்கின்ற வேலென யாம் பொருள்கூறியதனை மறுத்து, வேல் எங்ஙனங் கோபித்து யாதுசெய்யுமென்றாரே, இங்குப் பாலுந்தேனும் எங்ஙனங்கோபித்து யாதுசெய்யுமோ! பேதையர் கவனித்திலர்போலும்!

ஈண்டுக் கனவலாலென்றதைக் கனவலாதெனத் திருத்திய வெம்மை நிந்தித்தலை மன்னித்தார்போலும்!



57. உள்ளகங்குளிர்ந் தருமறைமூன்றையு முணர்ந்தோர், வள்ளலாகிய வப்துல்லாவயிற்றினில் வடிவாய்ப், பிள்ளையொன்று தோன்றிடுமுகம்மது வெனும்பெயரினெள்ளலின்றிய வுண்மைநன்னபியென விசைத்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் யாதுங்கூறிலர். ஆயினும், தமது விசேஷவுரையில்,

“எல்லா நபிகளையும் போலாது என்றும் நிலைப்பாடானவும் மாற்றப்படாதவுமான நபியென்பது தோன்ற எள்ளலின்றிய உண்மை நன்னபி என்றார்” என்கின்றார்.

நமது நபிபெருமானாரல்லாத மற்ற எல்லா நபிகளும் என்றும் நிலைப்பாடாகாதவர்களும், மாற்றப்பட்டவர்களும் போலும்! அந்தோ! விபரீதம்!!

இன்னும் அவர், நிலைப்பாடானவரும் மாற்றப்படாதவருமெனக் கூறற்பாலதை நிலைப்பாடானவும் மாற்றப்படாதவுமென அஃறிணைப்பலவின் பாலாக் கூறுகின்றார். சொல்லிலக்கண நாற்றமும் அவர்மீது வீசவில்லைப்போலும்!

58. சொரியும்பூந்துகட் டடைவைசூழ்சாமினிற்றோன்றலரிவைதன்னகத் தறிவினுந்தேர்ந்துணர்ந்தறிந்து, தெரியக்கூறிய பெரியவர்சொல்லினுந்தெளிந்து, வரிசைநேருமக் காவினில்விளாவினில்வந்தாள்.

இச்செய்யுளில், ஆசிரியர் அரிவை தன்னகத்தறிவினும், தெரியக்கூறிய பெரியவர்சொல்லினும், தேர்ந்

துணர்ந்தறிந்து தெளிந்துவந்தாள் எனைவினைமுடித்தி
ருப்ப, திலகக்காரர் அதனைமாற்றி, தேர்ந்துணர்ந்தறிந்
த பெரியவர் என நிமித்தமின்றிக் கூறுகின்றார். இது
பொருட்துய்கொல்லே வென்பதைக் கற்றோர்கவனிக்க.

59, வந்துநல்வழிக் குரியவரிருக்குமக்காவிற்
சந்தனப்புயத் தப்துல்லாதமைமணம்புரியச்
சிந்தைநேர்ந்தன ளவ்வுரைகேட்டுளந்திடுக்கிட்
டிந்தவூருளர் மிகுதிபேர்மணத்தினுக் கிசைந்தார்.

இச்செயுளில், திலகக்காரர் தம்மனஞ் சென்ற
வழியேயுரைகூறியும் அம்மட்டிலடங்காது;

“புயவலியினைப்பற்றவர் என்பது தோன்றப் புய
த்தப்துல்லா என்னாது புயனப்துல்லா என ஒருமைப்
பாற்படக்கூறினர். இக்கருத்தறியாத முதலுரையார் பு
யத்தப்துல்லாதமை எனத்திருத்திக்கொள்வர்” என்
கின்றார்.

ஒருமைப்பாற்படநிற்கும் ஒருவனைப் பன்மைப்பா
ற்படக்கூறினலன்றோ அது உயர்வுபற்றி அவனது ஒ
பறுதலைக்காட்டி நிற்கும்? அங்ஙனமின்றி, உள்ளபடிக்
கூறின் எங்ஙன முயர்ந்து ஒப்பறுதலையுணர்த்தும்
இதை யாண்டுக்கற்றனரோ பேதையர்!

60. எனக்குனக்கென மடந்தையர் மணத்தினுக்கிகல
தனக்குநேரிலானெழுதிய படித்தனிமுடிந்து
வனக்கருங்குழ லாமினுவெனுமடமானைச் [ந்தார்
சினக்கும்வேற்கரத்தப்துல்லாமணத்தொடுஞ்சே



இச்செய்யுளில், ஆசிரியர், மடந்தையர் மணத்தினு
க்கு எனக்கு உனக்கென இகலத் தனக்குநேரிலான்
(அஇயானில்) எழுதியபடி முடிந்து அப்துல்லா ஆமி
னவை மணத்தொடுஞ்சேர்ந்தார் என இனிதாகவிளக்
கிப் பொருண்முடித் திருப்ப,

திலகக்காரர், தனக்குநேரிலான் எழுதியபடித் த
னிமுடிந்து என்புழி முடிந்து என்பதை முடித்து
எனப் பிறவினையாக்கொண்டு, ஆமினவை அப்துல்லா
அவர்கட்கு விவாகமுடித்துச் சேர்ந்தார் என அம் மு
டிந்தென்பதை விவாசமுடித்து என்று கொடுத்துப்
பிதற்றுகின்றார்.

அப்துல்லா அவர்கட்கு ஆமினவை விவாசமுடித்
துச் சேர்ந்தார் எனின்; விவாகமுடித்ததும் சேர்ந்த
தும் அப்துல்லாவல்லாமல் வேறொருவராகப் பொ
ருள்பயந்து பெருங்குற்றம் நேர்வதை யறியார்போலும்
பேதையர். அப்துல்லாவை எழுவாயாக்கிக் கூறினலன்
றோ அப்துல்லாவானவர் ஆமினவை விவாகமுடித்துச்
சேர்ந்தார் எனப்பொருள்படும்? அங்ஙனங் கூறாது,
அப்துல்லாவுக்கு விவாகமுடித்துச் சேர்ந்தார் எனின்,
மேற்கண்டபடிக் குற்றமாமன்றோ! நேரான செய்யுட்
கு இவ்விதக் கோணலான அர்த்தத்தைப் பிரயாசை
யோடுண்டுபண்ணிக் கூறியிடர்ப்பட அவரை என்ன
கிநெருக்கிவருத்திற்றோ ஆச்சரியம்! இதைக்கற்றோர்
கவனிக்க.

61. அந்தவாறறிந்தரிவை யரிநகரலோத்து
மிந்துவாணுதலாமினு மனைவெறுத்திருந்தார்

கந்தமென்குழல் கருப்பமுமுதிர்ந்ததுகாலம்
வெந்துவானவர் பிறரிலை யென்கொலோவிளைவே.

இச்செய்யுளில், தமக்கேற்றவாறே பொருள் கூறிய திலகக்காரர் அம்மட்டிலடங்காது,

"இனி இச்செய்யுட்குப் பொருள் கூறவறியாது அரிவைய ரிந்நகரனைத்தும் எனக்கூட்டி விவாகத்திற்கு மனமிசைந்திருந்த மற்றையபெண்களும் இம் மக்கா நகர முழுவதும் என வாளாக்கூறுவர் முதலுரையார். இவர் விவாகத்திற்கு மனமிசைந்த பெண்களொழிய நகரரெல்லாம் வெறுத்தற்கு முறையன்றென்பதை யறிந்திலர்போலும்" என்கின்றார்.

அனைத்தும் என்பது இந்நகரென்பதோடு கிடந்தமை பற்றி நகர் முழுவதுமென யாங் கூட்டினேம். அவர் அனைத்தும் என்பதனை அந்தவாறென்பதோடு கூட்டி, அந்தவாறனைத்தும் என்கின்றார். ஒருவாறமைக. பின் அரிவையரிந்நக ரென்பதனை இந்நகரரிவைய ரெனகூட்டுகின்றார். அங்ஙனமாயினும் இந்நகரரிவையர் வெறுத்திருந்தாரென யாங் கூறியவாறே முடியுமன்றி, குறைஷிப் பெண்களைமாத்திரம் எங்ஙனங் குறிக்கும்? அந்நகரரிவைய ரனைவரும் குறைஷிப் பெண்களா? ஆயினும், குறைஷிப்பெண்களில் விவாகத்திற் இசைந்தவர்களை மாத்திரந்தானே குறித்தல்வேண்டும்? அல்லது, விவாகத்திற் கிசைந்திருந்த அரிவையரோ இந்நகரரிவையர்; ஏனைய அரிவையர் பிறநகரரிவையர்போலும்! இங்ஙனம் பெருமலைவு தோன்ற ஆசிரியர் செய்யுள் செய்தது புதுமையன்றோ!



அதாஅன்று, "இதுவேயுமன்றி கருப்பமும் காலமும் முதிர்ந்தன எனப் பன்மையாற் கூறிய ஆசிரியர் கருத்தை யறியாது அவரினு மிக்க கற்றார்போன்று கருப்பமும் என்பதன் உம்மையைக் காலம் என்பதனோடு படுத்தியும் முதிர்ந்தன வென்பதை முதிர்ந்தது எனத்திருத்தியும் தமதறியாமையை விளக்கிப் போந்தார்" என்கின்றார்.

காலம் முதிர முதிரக் கரு முதிருமன்றி, காலம் வேறும் கருவேறுமாய் இரண்டும் முதிர்ந்துவாரா. ஆகவே, காலந்தானே முதிர்ந்து ஆமினாவின் கருமுதிர்ச்சியை யுணர்த்தி நின்றதாகலின், அவர் கூறியது ஆசிரியர்க்குடன்பாடாகாது. யாம் ஒருமையைப் பிரித்தும் திருத்தியதுமேயுடன் பாடாமென்பதுணர்க. இது எமதறியாமையை விளக்கிப்போதலே யாம்.

அதாஅன்று "இதூஉம் நிறைந்தபேரொளி முகமலர்தர சபாநிகழ்த்தும் என்புழிப் பெரிய பிரகாச நிறைந்த முகமலரும்படி சபா என்னும் பெண் சிறுத்துக்கிச் சொல்லும் எனப் பொருள் கூறிப் போந்தவர், தாமே, என்கொலோ விளைவே, என்றற்கு அதனால் இனி யுண்டாகுவதென்னோ! எனவரைந்து கொல் என்பது ஐயங்குறித்து நின்றதென்பர். இங்ஙனம் ஐயநிகழு மேல் ஆண்டுக்கூறிய முகத்தின் மலர்ச்சி கேடுறமுடியுமென்பதை இயற்கையானே மறப்பெனும் பகைவன் கைப்பட விடுத்தார்போலும் பிறவரும் விகற்பங்களை யவருரையானே அறிக" என ஈண்டுக்கூறவேண்டாதனவற்றைக்கூறி மறுக்கின்றார். அவர் பின்னும் இதையே ௬௬-வது செய்யுளிலுங்கூறி மறுப்பதால், யாம் அங்கு நிராகரிக்குதும்.

62. மண்ணருந்திலள் புளிப்பையும்விரும்பிலள் வயி
யுண்ணிரந்தில மெய்பலவருந்திலவுதரக் [ஞே
கண்ணிருந்தபூப் பொன்றுமேகண்டிலசனிமென்
பண்ணிருந்தவாய் வெளுத்தில பலன்பெறும்படி
யே.

இச்செய்யுளில், சபா ஆமினா கருப்பவதியென்பதைக் கனவுகள்காணுங் குறியொன்றலன்றி வேறு குறிகளாலறியக் கூடாமையாயிருப்பது கருதி, மனமலைவுதோன்ற, ஆமினா கருப்பவதிகளைப்போல மண்டின்றிலள், புளிப்புவிரும்பிலள், அன்றியும், வயிற்றுள்நோய் நிரந்திலது, சரீரம் பலவழிவருந்திலது, இடைபருத்திருந்திலது, உதரம் புடைத்திலது, முலைமுகங் கறுத்திலது, அதரம் வெளுத்திலது. இவ்வேதுவான் கருப்பவதியன்று எனக்கொள்வாமெனின்; கருப்பவதி யல்லாத பெண்கட்கு மாதந்தொறும்வரும் சூதகம் கண்டிலையே. இவ்வேதுவான் கருப்பவதிதான் என்பதற்குச் சமுசயமில்லையென்று ஆராய்ந்ததாக "பூப்பொன்றுமேகண்டில,, என்றார் ஆசிரியர் அதனால் பூப்பென்பது மாதர் சூதகமன்றி வேறன்று. இதனைத் திலகக்காரர் மறுத்து,

"அது கர்ப்ப முதிர்காலத்து வயிற்றின்கீழ்ப்புறம் விரிவடிவாய்ப்பரந்து தோற்றுமென்க. ஈண்டு அதைச் சொட்டியெனவழங்குவர். இக்கருத்தரியாது முதலுரையார் மாதருதரத்தைக் கூறுவர். அது ஒன்றுமேகண்டில வென்றமையான் ஆசிரியர்க் குடன்பாடாகாதென மறுக்க" என்றும் பிறவுங் கூறுகின்றார்.



ஒன்றுமே கண்டிலவென்றநிமித்தம் பூப்பென்பது சொட்டியென்னுஞ் சூனியப்பொருட்பெயராய் விட்டதுபோலும்! இதனைக்கற்றோர் ஆராய்க.

அல்லதூஉம், யாங்கூறிய சூதகத்தை அவர் உதிரமென்றுகூறவறியாது உதரம் உதரம் எனப் பலவிடத்துங்கூறுகின்றார். "தம்பீ! உதரமென்றால் வயிறு; உதிரமென்றால் இரத்தம்" என்று ஒருவரும் அவர்க்குப் போதிக்கவில்லைப்போலும்!

அதா அன்று, பலன்பெறும்படியே என்பதற்குமசவையின்று பலனைப்பெறும்படியென யாங்கூறியதனைப்பொருந்தாதென்று "பின்னர்க்கூறுதும் ஆண்டுக்காண்க" என்கின்றார். யாமும் ஆண்டே அதனை நிராகரிக்குதும்.

63. சிறுத்தமெல்லிடை பருத்திருந்திலதிருவுதரம்
பொறுத்துவீங்கில வுந்திமேற்புடைத்திலபொருப்
கறுத்திருந்தில பசுநரம்பெழுந்திலகவின்கள் [புங்
வெறுத்திருந்தில கருப்பமென்றழகுறும்விதமே.

இச்செய்யுளில், சிறுத்தமெல் இடை பருத்து இருந்திலது என ஆசிரியர் கூறிய கூற்றிற்கு, திலகக்காரர் மெலிவாகிய இடைபுடைத்திருந்திலது என்றுபொருள் கூறுகின்றார், மெல்லிடையென்பதையே மெலிவாகிய இடையென்றமைத்தவர், சிறுத்த என்பதை மிக்க என்று அர்த்தம்பண்ணினார். இது எந்த இலக்கியத்திலுள்ளதோ! பருத்திருந்திலவென்பதற்குப் புடைத்திருந்தி

லவென்கின்றார். இடை எங்ஙனம்புடைக்குமோ ! இவற்றைக்கற்றோர் கவனிக்க

64. என்றும்பற்பல மொழிந்துசபாசலித்திருப்ப
மன்றலங்குழ லாமினாகருப்பமும்வலிய
மின்றுதோன்றுவ தெனவெடுத்தியம்பினரிலக்கும்
வென்றிவேல்விழி மடந்தையர்க்கிசைசொலிவிடுத்
[தார்.

இச்செய்யுளில், ஆசிரியர் சபாவானவர் என்றும் பற்பலவும்மொழிந்து சலித்திருப்ப என மிகத்தெளிவாக்கூறியிருப்ப, திலகக்காரர் மிக நுண்ணறிவார்போன்று சலித்து என்பதை ஆமினாபாற்சேர்த்து, அச்சலித்து என்பதற்குச் சரீரத்தையசைத்து எனப்பொருள்கூறுவதுமன்றி

“சலித்து என்பதை ஆமினாவுடன்கூட்டுக. இனி சபாவுடன்கூட்டி இடர்ப்படுவர் முந்துரையார். என்னை ? நிறுவது செய்யுளில் நிறைந்தபேரொளி முகமலர்தரசபாநிகழ்த்தும் என்றதுமுதல் என்றும் பற்பல மொழிந்து சபா என்பதிறுவாய் சபாவினது கூற்றுதல்பற்றிச் சலித்து என்பதைச் சபாவுடன் கூட்டுமேல் முகமலர்ச்சிகேடுறுவதான் இந்நூலிழுக்கியுறுமாதல் பற்றி யவருரையிடர்ப்படுமென்றறிக” என்றும் பிறவுங் கூறுகின்றார்.

சபாமொழிந்தவையனைத்தும் முந்திய சிலமொழிகள் சந்தோஷந்தரத்தக்கனவும், பிந்தியசிலமொழிகள் அயாந்தரத்தக்கனவுமாம். எங்ஙன மெனின்; “இரிந்தடாவென” என்னுஞ்செய்யுண்முதல் “எனக்குனக்கெ



ன” என்னுஞ் செய்யுளிறுவாய்க்கிடக்கும் ஐந்து செய்யுளினும் சபாவின் மொழிகள் சந்தோஷத்தையும், “அந்தவாறறிந்து” என்னுஞ்செய்யுண்முதல் “சிறுத்தமெல்லிடை” என்னுஞ் செய்யுளிறுவாய்க் கிடக்கும் மூன்றுசெய்யுளினும் துயரத்தையுந் தந்து நிற்பதைப் படித்துப் பார்க்க. இதுபற்றியே முதற்கண் சபாமுகமலர்தர நிகழ்த்துமென்றும், பின்னர் சபாசலித்திருப்பவென்றுங் கூறினா ராசிரியர். இதற்கேற்கவே யாமும் முகமலர்ச்சியை சபாவுக்கு முன்னர்க் கூட்டி, பின்சலித்தென்பதையும் சபாவுக்கே கூட்டினாம். இதனையுய்த்துணராத அவர் பலவாறு கூறுவது தவறாமென்க.

அல்லதூஉம், சபா ஆமினா முன்னிலையிற கூறாது படர்க்கையாற் கூறுவதால், முகமலர்ச்சி ஆமினாவுக்குண்டாக நிமித்தமின்று. புறமொழியாகக்கேட்டு முகமலர்ந்தாரெனக்கொள்வாமெனின்; சபாவின் பிந்திய கூற்றுக்கள் செய்யுட்படிச் சஞ்சலமுடையனவாகலின், அவற்றைக்கேட்டக்கால் ஆமினாவுக்கு முகமலர்ச்சி எங்ஙனம் பிறக்கும்? இதனைக் கற்றோர் ஆராய்க.

65 உரைத்தவாசகங் கேட்டலுமங்கருணைறவோ [யா
ரிரைத்தடங்கலு மொருமொழிப்படவெடுத் திசை
வரைத்தனிக்கொடி யாமினாமனையினின்மறந்துங்
கரத்தலாயினும் வருவதில் லெனக்கழறினரே.

இச்செய்யுளில், வரைத்தனிக்கொடியாமினா வென்பதை இன்னார்கூற்றெனத் திலகக்காரர் அறியாது

“ இனி வரைத்தனிக்கொடியாமினாமனை என்புழி ஆமினாவைப்புகழ்ந்து கூறினாரெனக்கொள்வாருமுளர்.

இஃதே முதலுரையார்க்கு முடன்பாடுபோலும். குறைஷிகள் ஆமினா அவர்கட்கு மிக்கவிரோதிகளேயுமன்றி வமிஸத்தாலொரே தன்மைத்தவராகலின் அவ்வாறு சிறப்பித்துக்கூறல் அவர்க்குப்பொருந்தாதெனமறுக்க" என்கின்றார்.

அங்ஙனஞ் சிறப்பித்துக்கூறுங்கூற்று ஆசிரியர் கூற்றாகலின், அவர் கூறுவது எமக்குடன்பாடன்றென்பதறிக.

66. உற்றவாய்மையைக் கேட்டலுமாமினாவுலைந்து
குற்றமேதுநம்மிடத்தென மனத்தினிற்குறித்துப்
பெற்றருள்வலி யடிக்கடிப்பெரிதெனப்பதறி [ர்.
வெற்றிவாட்கரத் தப்துல்முத்தலிபுக்காள்விடுத்தா

இச்செய்யுளில், உற்றவாய்மை என்பதை ஊர்ப்பெண்கள் சொல்லிவிட்டசொல் என யாங்கூறியதனைத் திலகக்காரர் பொருந்தாதென்கின்றார். பந்துவிலுள்ளாரும்பிறருமாகிய பெண்களுமென்பதுதோன்ற ஊர்ப்பெண்களென்றாம். எங்கூற்றே எல்லார்க்குமுடன்பாடாமென்பதை முன்னர்க் கூறியவாற்றானுமறிக.

அதாஅன்று, தாமும், உற்றவாய்மையைக்கேட்டலுமாமினாவுலைந்து என்பதற்கு "வந்தமொழியைக் கேள்வியுற்றவுடனே ஆமினா அவர்கள்—குறித்துப் பதறி, அப்துல்முத்தலிபெனுந் தமது மாதுலர்க்கு வரும்படியோரடிமையை யநுப்பினார்கள்" என்று பொருள் கூறி, அம்மட்டிலொழியாது அதனையுடனே மறந்துவிட்டு,



"மாதுலர்க்காள்விடுத்தாரென்றது அப்துல்முத்தலிபுக்காள் விடுத்தார் என்றமையால் சண்டு மாதுலனை வருகவென ஆள்விடுக்குமாறு தாயரை ஏவத் தாயார் ஆள்விடுத்தாரென்பது கருத்தாயிற்று. இனி கேட்டலும் என்பதை ஆமினாவுடன் கூட்டி ஆமினாவே அப்துல் முத்தலிபுக்காள் விடுத்தாரென்றுபொருண் முடிப்பது சிறப்பென்பாருமுளர். இதுமுதலுரையார்க்கு முடன்பாடுபோலும்" என்றும் இன்னும் பலவுங் கூறுகின்றார்.

மாதுலர்க்காள் விடுத்தாரென்பது * புராணிகர் கூற்றாகலின், யாங் கூறியதே முடிபென்பதறிக.

அல்லதூஉம், அடுத்தசெய்யுளிலும் "சருவுவேல்விழி மடந்தையர் சாற்றக் குரிசில் கேட்டு" என்புழிச் சருவுவேல்விழிமடந்தைய ரென்பதை ஆமினாவாகக் கொண்டு "ஆமினா லநுப்பப்பட்டவர் சென்றங்குரைப்ப அப்துல்முத்தலிபு கேட்டு" என்று மடந்தையரை மூன்றாம் வேற்றுமையாக்கிப் பொருள் கூறுகின்றார்.

யாம் மறவியுள்ளேமென்று எம்மை நிந்திக்க வந்த அவர்க்கு இம்மறவி என்வந்ததோ!! விடுத்தார் என்பதைப் பிறவினை யெனக் கொண்டார்போலும் பேதையர். இன்னும் அவர் தடுமாற்றங்களை விரிப்பிற் பல்குமென்று நிறுத்துகின்றாம்.

* புராணிகர் எனப்படுவோர் அறபுபாஷையில் றாவிகளாம். றாவியென்றால், றிவாயத்துக்காரர்.

67. சருவுவேல்விழி மடந்தையர் விடுத்தவர்சாற்றக்
குரிசில்கேட்டவரவர்க்கெலாம் வகைவகைகூறி
வருகவென்றலுங் கொடியிடைப்பிடிநடைமடவா
ரொருவருமவண்வருவதில்லெனமறுத் துரைத்
தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் ஒன்றும் விபரீதப்படுத்தாமையால், யாமும் ஈண்டு ஒன்றும்பேசிலம்.

68. மருந்தவார்குழ லாமினாவுரைத்தது மறுத்தா
ரின்சொற்கூறிநா மழைக்கவுடனமிரங்கிலரென்
றஞ்சியுள்ளகம் புழுங்கினின்றப்துல் முத்தலிபு
தஞ்சமீதெனக் கருபத்துல்லா தனைச்சார்ந்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் மறுத்தார் என்பது மறுத்து என எச்சப்பொருளிடத்துவந்ததென்கின்றார்.

ஆமினாவுரைத்ததுமறுத்தார்! நாமழைக்கவுமனமிரங்கிலர் என ஆசிரியர் ஈரிடத்தும் உம்மைவிரித்துக் கூறுவதால், மறுத்தார் என்பது வினை முற்றாயே நிற்பதறிக.

69. வடிவிருந்தொளிர் கருபத்துல்லாதனை வலமாய்க்
கடிதிற்றுன்புற வருங்கருமாரியின்களையாற்
கொடியிடைப்பர தாபமும்வருத்தமுங்கூறி [ம்.
நெடிதுயிர்த்தயர்ந் திரந்துகொண்டிருக்குமந்நேர

இச்செய்யுளில், ஆசியர், கடிதில்துன்புறவரும் கருமாரியின்களையாலுண்டாம் கொடியிடைப் பரதாபமும் வருத்தமுங் கூறி நெடிதுயிர்த்து இரந்துகொண்டு அப்துல்முத்தலிபு இருக்கும் அந்நேரம் எனத்தெள்ளிதிற் கூறியிருப்ப,



திலகக்காரர் " அப்துல் முத்தலிபு கருபத்துல்லா தனைத் துன்புறக்கடிதில் வலமாய்வந்து களையாலயர்ந்து எனக் கருமாரியின் குறிசனை அப்துல் முத்தலிபு மேலேற்றித் தடுமாறுகின்றார். இதனைகற்றோர் கவனிக்க.

வேறு.

70. அரியமெய்ப்பொருளா யளவிடற்கரியோ
னருளினனமரர்கள் சுவர்க்கத்
தெரிவையர்பறவைக் குலங்கள்மற்றனையுஞ்
செழும்பொழிற் செகதலத்திறங்கி
வரிஞிமிறுதரிக் கருங்குழன்முடித்த
மடக்கொடியாமினா மனையி
னிரைநிரைசெறிந்தாங் கவருளாமருந்து
நின்றிடும்பணிவிடைக் கெனவே.

இச்செய்யுளில், தமக்கியைந்தபடி யெல்லாங்கூற வந்த திலகக்காரர்,

" இனி பறவைக்குலங்களையும் என்புழிப்பட்சிசாதிகள் எல்லாவற்றையும் என உரைகூறி சுவர்க்கத்தில் பட்சிகளென்பது ஒன்றுமில்லாமையாய்விட முழுது மறுப்பப்பட்டன என்பதே கருத்தென்பாருமுளர். இதே முதலுரையார்க்கு முடன்பாடுபோலும்" என்கின்றார்.

அவரே பட்சிசாதிகள் யாவற்றையும் என முழுது மறுப்பப்பட்டனவென்பது தோன்றக் கூறுகின்றாரன்றி, யாங் கூறவில்லை. எங்கூற்றுச் சாதிகளெல்லாவற்றையு மேன்பதேயாம் உய்த்துணர்க.

அதாஅன்று, "இனி ஆங்கு என்ப தசைநிலை யென்றும் அவர் என்பது ஆமினாவைக் குறித்துவந்த தென்றுங் கருதுவர் முதலுரையார். ஆமினா பிரவச வேதனையி னிருப்பிருக்குங்கால் எங்ஙனமேவலுறுத்து வர் எனுங் கடாநிகழுமாகலின் அது பொருந்தாதென க" என்கின்றார்.

செகதலத்திறங்கி, ஆமினாமனையில்செறிந்து, அவ ர் உரை மறாதுநின்றிடும் என்பதான், அங்கு என்றது அசை நிலையும், அவர் என்றது ஆமினாவுமாயே விளங் குவதோர்ந்துணர்க. இதனைமறுத்தவர் அங்கு அவ ரென்றுகூட்டி, அங்குற்றவர்களின் சொற்களைக்கேட்க வென் றுரைகூறுவதே பொருந்தாதென்க.

ஒருபெண் பிரசவவிருப்பிலிருக்குங்கால் ஏன் பிற ரைப் பணிகொள்ளாள்? தாராளமாக்கொள்வள் அவ்வி ருப்பு மரணவஸ்தையாயின் இயலாதாம். அல்லதூ உம், அமரரும், அரம்பையரும், பறவைகளும் அநுப் பப்பட்டமை ஆமினாவின் பணிவிடைக்கேயன்றி, பிறர் ஏவலைக் கேட்கவன்றென்றுதெளிக.

71\. கருவினிற்றோன்று தொளிவினிலுருவாய்க்
கண்ணிமைத்துண்டுறங்காத
பெருவடிவழகாய்க் குழுவுடன்றிரண்டு
பெரியவனுரைமறா தெழுந்து
விரிகதிர்க்ககனம் புடவிமட்டொழுங்காய்
விண்ணவ ரெண்ணிறந்தனையோ
ரருவரையனையா ருருவமுஞ்சிறிதா
யாமினாத்திருமனை சூழ்ந்தார்.



இச்செய்யுளில், கண்ணிமைத்து உண்டு உறங்கா த விண்ணவர் என்பது, "உண்டுதின்று உடுத்து மகி ழாதவெளியன்" என்றாற்போல நின்றது. அது, உண் ணாது தின்னாது உடுத்தாது மகிழாதவெளியவன் என ப்பொருள் கொள்ளுமாறு கொள்ளவே ஆசிரியர் கூற் றாகச் செய்யுளிற்கிடந்தபடி வைத்து யாங்கூறினேம். தி லகக்காரர் இதனையறியாது,

"இமையா உண்ணா என்பன இமைத்து உண்டு எனத் திரிந்துநின்றன" என்கின்றார்.

இமையாத உண்ணாத என்னும் எதிர் மறைவி னைகள் இமைத்து உண்டு என வினைமுற்றாய்த்திரிவது ஆறுவதிலக்கண விதிபோலும்!

அதாஅன்று "மலக்குகளின்பெருமை மிக்கபெ ரிதென்பான் அருவரையனையார், என்றார். அது, குன் றினையாருங் குன்றுவர். என்ற வள்ளுவராலுமறிக. இக்கருத்தறியாத போலிவித்வான்கள் கண்ணிமைத் துண்டுறங்காத என்புழிக் 'கண்களையிமைத்து உணாமு தலினவுண்டு உறங்காத' என்றும் அருவரையனையா ருருவமுஞ்சிறிதாய் எனச் செய்யுட்கிடந்தவாறே கூட் டி 'அரியமலைகளை யொத்தவர்களாகிய வவ்வானவர்க ள் தமதுருவங்கள்சிறிதாகி' என்றும் பெருவடிவென் புழிப் 'பெரியவடி' வென்றும் வாளாப்பொருள்கூறி பி ர்ப்படுவர். இக்கூற்றாரின் முதலுரையாருமடங்குவர். இங்ஙனங் கூறிற்படும்இடர் என்னையோ? வெனின் கண் ணிமைத்து உணாமுதலியன உண்டு நித்திரைசெய்யாத வானவரென்றால் கண்ணிமையாது உணாமுதலியன

உண்ணாது போமிடத்துத் துயிலுவரென்பது அருத்தாபத்தியானே பெறுதுமாகலானும், அரிய மலைகளையொத்தவர்களாகிய வவ்வானவர்கள் என்புழி அவர்கள் மலையின் அளவின ரென்பதூஉம், தமதுருவங்கள் சிறிதாய் என்புழி ஆமினாவின் மனையின்கண் அவர்கள் அமைதற் கொவ்வாமையாதல்பற்றித் தமது மலைகளையொத்த வுடல்களைச் சிறிதாயமைத்தாங்குற்றா ரென்பதூஉம், பெரியவடிவென்றவிடத்து மலக்குகள் இயற்கையில் பருமிகவென்பதூஉம் பெறுமாகலி னவருரையிடர்ப்படுமென மறுக்க" என்கின்றார்.

கடவுள் மலக்குகளைப் பெரியரும் சிறியருமாகவே பலவகைப்படப் படைத்திருக்கின்றானென்பது எவருமறிந்ததே. அவர்களுள் குறித்தமலக்குகள் பெரும்படைப்பினரென்பது தோன்றவே "அருவரையனையார்" என்றும், அவர்கள் ஆமினா மனைக்குள் பிரவேசித்திருப்பதற்காகவே "உருவமுஞ்சிறிதாய்" என்றுங் கூறினா ராசியர். அங்ஙனம் அருவரையனையாரென்பது பெரும்படைப்பினரென்னும் பொருள்பெறுமிடின், உருவமு ஞ் சிறிதாயென்று கூறவேண்டிய நிமித்தம் யாது? உருவமுஞ்சிறிதாயென்பது தானே பேருருவினரென்பதை விளக்குகின்றதே. இவ்வேதுக்களால் அவர் கூறுவன பழுதாமென்றுணர்க.

இனி "உண்டுதின்று உடுத்து மகிழாதவெளியவன்" என்பது, உண்ணாது தின்னாது உடுத்தாது மகிழாத வெளியவன் எனக் காரணகாரியப்பொருட்டாய்ப் பொருடந்து நிற்பதுபோல, கண்ணிமைத்து உண்டு உறங்காத விண்ணவர் என்பதும் கண்ணிமைக்காது



உண்ணாது உறங்காத விண்ணவர் எனப் பொருடருவதை அறியார்போலும்! "உண்டு தின்று உடுத்து மகிழாத வெளியவன்" என்பது உண்டால்தின்றால் உடுத்தால் மகிழ்வன் என அருத்தாபத்தியாற்பொருள்பயப்பதுபோல, "கண்ணிமைத்தால் உண்டால் உறங்குவர் என்று பொருள்பயக்குமன்றி, கண்ணிமையாது உணா முதலியன வுண்ணாது போமிடத்து உறங்குவர் என்பது அருத்தாபத்திப்பொருளாமா? அங்ஙனமாயின், "உண்டுதின்று உடுத்துமகிழாத வெளியவன்" என்பதும் உண்ணாது தின்னாது உடுத்தாது போமிடத்து மகிழ்வன் என்றன்றோ பொருளாதல்வேண்டும்? இது பொருந்துமா!

"கண்ணிமைத்துண்டுறங்காத" என்பது மறைச்சொல்லின் முதனிலை விதிப்பொருள்பெற்று வந்ததென்பதை * "விதிச்சொன் மறைப்பொருளாகி வருதலும்" என்றவிதியானறிக.

அதாஅன்று, "உருவமும் என்பது வினைப்படுதொகுதியாகலின், 'இனைத்தெனவறிந்த வினைமுதற்கிளவி' (சினைமுதற்கிளவி என்று பேதையர்க்குப் போதிப்பாரில்லைப்போலும்!) என்ற விதிப்பற்றி உம்மை வந்ததென்க" என்கின்றார்.

உருவமுஞ்சிறிதாய் என்புழி உம்மை "நெடியனுமாயினன்" என்றாற்போல ஆக்கவும்மையாய் நிற்கின்றதன்றி, வினைப்படுதொகுதிக்கண் வந்ததன்று. "பன்னிருகையும் பாற்படவியற்றி" "முரசுமுழங்குதானை

* இலக்கணக்கொத்து, வினையியல், ௩௰ வது சூத்திரம்.

மூவருங்கூடி" என்பன போல்வனவே வினைப்படுத்தொ
குதியாமன்றி, உருவமுஞ்சிறிதாய் என்பது வினைப்ப
தொகுதியாகாது. இவற்றைக் கல்லாதபேதையர் எ
மைப் போலிவித்துவான்களோடு கூட்டினார். இதனை
கற்றோர் ஆய்க.

72. தேன்பெருக்கொழுகி வழிதருங்கனிகள்
சிதறிடுஞ்சோலைவாய்த் தெளிந்த
வானதிமூழ்கித் துகிலெடுத்துடுத்து
வளைபணித் தொகையெலாமணிந்து
கான்மலர்முடித்துக் கடுவரிவடிவேற்
கண்களிலஞ்சனங் குலவச்
சூன்முதிராமினா மனையிடத்திற்
சூழ்ந்தனர்விண்ணவர் மகளிர்.

இச்செய்யுளில், தெற்றெனப் படுவனவற்றையெ
லாம் மாற்றித் தமதியற்கைக்கு வேறுபடாமற் கொண்
கூட்டுப்பொருள் கூறிய திலகக்காரர், அம்மட்டிலடங்
காது,

"இனி வானதிமூழ்கி என்புழிப் பரிசுத்தயாற்றில்
குளித்து என்று பொருள்வரைந்த முதலுரையார் அ
நதி யிஃதெனவிரித்துக்காட்டாது அதைப்பலர் சுவர்
கத்துநதி என வாளாமயங்குவர் என விகழ்ந்தும் போ
தார். ஆகவே அவர்க்கந்நதி காவேரி என்பதே கருத்
துபோலும்" என கையாண்டி பண்ணுகின்றார்.

வானதியென்பதை வால்நதி எனப் பிரித்து அத
குப் பரிசுத்தயாறென யாம் பொருள்கூறி, விண்ணவ



மகளிர் என்றமையால், சோலையென்றது சுவர்க்கத்துச்
சோலையும், அதன்வாய்த்தெளிந்த நதியென்றது சுவர்க்
கத்து நதியுமாமென்பதை விரித்துக்காட்டினால் வீணா
மென்று மறைத்துக்காட்டி, கோணற்புத்தியுள்ள மதி
கேடர் சிலர், விண்ணவர்மகளிரென்றதால் சுவர்க்கத்
துச்சோலையென்றும் அங்குள்ள நதியென்றும் பொருள்
கொண்டு, வானதியென்பதனை வால்நதியென்று கொள்
ளாது வான் நதியென்றுகொண்டு பின்னுஞ் சுவர்க்கத்
துநதி யென்பாரென்னுங் கருத்துப்பற்றி "வானதி
யென்பதனையே சுவர்க்கத்துநதியெனப் பலர் வாளாம
யங்குப" என்று கூறினோம். இதனால் அந்நதி காவேரி
யென்பது எங்கருத்தாமா! பரிசுத்தயாறென்றதால்
யாம் காவேரியைத்தான் கருதினோமென்று அவர் தா
மாகவைத்துக் கொண்டதால், பரிசுத்தயாறு காவேரி
தானென்பது அவர்க்கே யுடன்பாடென நன்குவிளங்கு
கின்றது. அங்ஙனமாயின் விழாக்காலத்திற்போய் நான
ஞ்செய்கின்றார்போலும்!

73. மறுவறுத்திருந்த நிறைந்தபூரணமா
மதிக்குலந் திரண்டுவந்ததுவோ
வுறைதருமமுதத் திரளைகளுருவா
யொழுங்குட னெழுந்திடுதிரளோ
கறைபடாச்சுவனக் காட்சிவாழ்வனைத்துங்
கலந்துடனிலங்கி வந்ததுவோ
குறைபடாச்சுவனத் தருவினிலுதித்த
கொழுங்கதிர்ச் செழுங்கனிக்குலமோ.

இச்செய்யுளில், கறைபடாச் சுவனக்காட்சி வாழ்
வனைத்தும் என்பதான், சுவர்க்கங்களினது அற்புத
வாழ்க்கை யெல்லாமென்பதுதோன்ற ஆசிரியரமைத்
து, வாழ்வனைத்தும் என்பதான, சுவர்க்கங்கள் என
எட்டுச்சுவர்க்கத்தையும் விளக்கி, அச்சுவர்க்கத்திற்கு
எதுகைநோக்கிக் கறைபடா வென அடைகொடுத்து
வைத்தார். திலகக்காரர் இதனையுணராது, கறைபடா
வென்று சிறப்பித்தவதனால் ஏனைய ஏழுசுவர்க்கங்க
ளுங் கறைபட்டன வாகலின் கறைபடாதது இல்லீ
னென்று கருதி, இல்லீனாகிய அவ்வொரேசுவர்க்
கத்துக் காட்சிவாழ்வனைத்துமென்று பொருள் கூறு
கின்றார். இதனைக் கற்றோர் ஆராய்க. இல்லீனென்ப
து சுவர்க்கமல்லவென்பதும், அது, சாலிசானவனு
டைய றூகு இனி கியாமத்தாய் எழுப்பப்படும்வரை
யும் தங்கியிருக்கும் சுவர்க்கத்திற்கு வதிலான ஒரு
தானமென்பதும், சிஜ்ஜீனென்பதும் அப்படியே பா
சிகானவனுடைய றூகுதங்கியிருக்கும் நரகத்திற்கு வ
திலான தானமென்பதும் அறியாது இங்ஙன முளறு
கின்றார் பேதையர்.

74. அணித்துலைக் கனலிலுருக்கிடா தொளிரு
மாயிரங்கோடி மாற்றெனவுங்
கணித்திடாப் பசும்பொனெடுத்தெடுத் தமைத்த
கவின்குலங் கூண்டெழுங் கணமோ
மணிக்கதிரெறித்துத் திரட்டிவைத்துருவ
வடிவமைத் தெழுந்திடுங் குழுவோ
துணித்துமின்குலங்கண் மறைபடா தெழுந்த
தொகுதியோ வெனவறிகிலமால்.



இச்செய்யுளில், திலகக்காரர் "மாற்றெனவும்
என்றவிடத்து நின்ற உம்மைப் பசும்பொன்னினது
மாற்று இனைத்தெனவரை யுறுத்தற்கமையாதெனுஞ்
சிறப் புணர்த்துகையான் உயர்வு சிறப் பும்மையாயிற்
று, இனியது இத்தனைமாற்றெனத் துணியாமைக்கண்
வந்தமையால் ஐயவும்மை யென மயங்குவர் முதலுரை
யார். செம்பொனின்றகை இனைத்தென்பதில் ஐயநிக
ழுமேல் அவ்வாறுற்ற பொருளாலியன்ற பொருள் எங்
ஙனஞ் சிறக்கும்? எனுங்கடா நிகழுமாகலின் பொருந்
தாதென்க" என்கின்றார்.

"குறவருமருளுங்குன்றம்" என்புழி உம்மை
குன்றத்தினுயர்வைச்சிறப்பித்து நின்றாற்போல, ஒரு
பொருளினுயர்வைச்சிறப்பித்தலே உயர்வுசிறப்பும்மை
யாம். "ஆயிரங்கோடி மாற்றெனவுங் கணித்திடாப்ப
சும்பொன்" என்புழி அவ்வும்மை பொன்னினுயர்வைச்
சிறப்பித்து நில்லாது, ஆயிரங்கோடிக்கு அதிகப்படவு
மென்பதுபயப்ப மாற்றின்வரையறையைத் துணிவுபடு
த்தாம னிற்பதால் ஐயவும்மையேயாம். அவ்வையம்
பொன்னோ பித்தளையோவெனப் பொருண்மேனில்லா
மல், மாற்று ஆயிரங்கோடியோ இலட்சங்கோடியோ
வென மாற்றின்மேலதாய், உற்றபொருள்பொன்னே
யாய் நிற்றலின், அப்பொன்னாலியன்ற பொருள் எங்ங
னஞ் சிறக்குமென்னுங்கடா யாண்டும் நிகழாதென்க.
அங்ஙனக்கடாவுவான் பேதையனென்க.

அதாஅன்று, "அல்லதூஉம், வெஃகினும் வெஃ
லுமவன்றேடுனை, என்புழிவரும் ஐயவும்மையான்

அவ்வீரனது துணைபோலியாதலான் சிறப்பின்றெனமுடியுமாறுபோலும் என்றுங்கூறி மறுக்க" என்கின்றார்.

வெல்லினும்வெல்லும் என்றவும்மையானது வெல்லாமையுமிருக்குமென எதிர்மறைப்பொருடந்து நிற்பதால், அதை எதிர்மறையும்மையென்றறியாது ஐயவும்மையென்கின்றார் பேதையர். ஆகலின் இது உதாரணமாகாதென்க.

அதாஅன்று, "இனி பசும்பொன் னெடுத்தெடுத்தமைத்தகவின்குலங் கூண்டெழுங்கணமோ என்புழிப் பசும்பொன்னை எடுத்தெடுத்துச்செய்த அழகினங்கூடி எழுந்த கூட்டமோ எனப் பொருள்வரைவர் முதலுரையார்; அழகு எனப்படுவது தோற்றப்படுமே வஸ்துவின் சினையுருவங்களால் அவ்வஸ்துக்களிலே பொதுவகையா னிகழும் ஓரரியகாட்சியே; அஃதுசெயப்படுவதன்று ஆயினும் செயப்படுவனவற்றி லமைந்தும் அமையாது முருத்தோற்றமின்றி நிலைக்கும் வஸ்துவெனலாம். அவ்வஸ்துவே செம்பொன்னினும் இலாதிருப்பின் அப்பொன்னு மோரிழிபின்தாயுறும் ஆகவே அதுகொண்டு சிறந்தபொன்னானே அதைச் சிறப்பித்தற் பொருந்தாதென மறுக்க" என்கின்றார்.

சரி. யாம் பொன்னைக்கொண்டு அழகைச்சிறப்பித்திருந்தாலன்றோ அவர் கூறும் இத்தனையும் பொருந்தும்? அழகினங்கள் கூடியெழுந்த கூட்டமோ என்னும் எங்கூற்றில் அவர் கூறியவாறின்றென்பதைக் கற்றோர் நிதானிக்க. அவரே முந்திய செய்யுளில் அமுதத்திரளை என்பதற்கு இனிமைத்துண்டம் என இனி



மையென்பது தோற்றப்படாது தோற்றப்படும் வஸ்துவிலமைந்து நாவானுகரப்படுமோரரிய சுவையன்றி, திரட்டவும் நீட்டவும் விளக்கவும் வாராத அருவப்பொருளென்றறியாது உரைகூறினர். அதுபோல யாங்கூறிலமென்க.

இன்னும் அவர் கவின்குலம் என்பதை யாங்கூறியவாறு கூறிற்பழுதாமெனக் கருதி அழகிய மாளிகையென்கின்றார். ஆசிரியர் பலவிடத்தும் "மதிக்குலம்" "கனிக்குலம்" "பறவைக்குலம்" எனக்குலமென்பதை இனமென்பதுணர்த்தக் கூறுமாறும், இச்செய்யுளில் கவின்குலமென்பது இன்னது தானென்னுந் துணிபுகொள்ளுந் திறனும் இல்லாமையால் இங்ஙனம் இடருழக்கின்றாரென்பதுகாண்க.

அதாஅன்று, "நபிபெருமானாரது அவதாரகாலத்தினவாஞ்சரிதையினை யெல்லாம் வகைப்படக்கிளந்தார் சபாநாயகமென்பதே வேதநூலாகலின் யாமெனுந் தோன்றாவெழுவாய் அந்நாயகியை யுணர்த்தி நின்றது. இனி முதலுரையார் அது இன்றெனத் துணிந்து கூறாமையான் அவர் கூறுவனவெல்லாம் உடன்பாடென்பது தமக்குங் கருத்தன்றெனக" என்கின்றார்.

நபிபெருமானரது அவதாரசரிதையனைத்தையும் சபாவே நிகழ்த்தினாராயினும், இப்புராணத்தி லங்ஙனங் கூறப்படவில்லை. அதற்கு இப்படலத்தின் ஆதியிலேயே சபாகூறுவதாகத் தொடங்கி அந்தமும் அவர் கூற்றாகவே முடிந்திருப்பதே முறைமை. ஈண்டு அவ்வாறின்றி, அனைத்தும் புராணிகர் கூற்றாய், சபாவின்

கூற்று "முகமலர் தரசபாநிகழ்த்தும்" என்பதில் தொடங்கி "என்றும்பற்பல மொழிந்து சபாசலித்திருப்ப" என்பதில் முடிந்துபோய், ஏனைய முன்னதற்கொப்பப் புராணிகர் கூற்றாயே நிகழ்வதை யறியாது பேரையர் மொழிந்து சபாசலித்திருப்ப என்பதையும் ௬௪-வது செய்யுளில் தாமே கூறுவதையும் மறந்து, இன்னும் சபா சொல்வதாகவே வைத்துக்கொண்டு எம்மை இகழ்கின்றார். இதனைக் கல்விமான்கள் கவனிக்க.

75. இருட்டடைகிடக்குங் கருங்குழற்பின்ன
லெழுதுபதினாயிரமிலங்க
விரித்தபொன்னிழைப் பூந்துகிலு மேகலையும்
விட்டொளிவிசிடத்துலங்கத்
தரித்தமுத்தார முடுக்குலமனைத்துந்
தாங்குடியிருந்தெனத் தயங்கக்
கரித்தகண்ணிமையா முலைக்குவடசையரக்
கன்னியர் திரண்டிருந்தனரால்.

இச்செய்யுளில், ஆசிரியர், கன்னியர் ஒவ்வொருவரும் குழற்பின்னலாகிய பனிச்சைகள் எழுபதினாயிரமிலங்கவும், பூந்துகிலும் மேகலையும் துலங்கவும், முத்தாரம் தயங்கவும், திரண்டிருந்தார் எனக்கூறியிருப்ப, திலகக்காரர் பனிச்சையினெண்ணாகிய எழுபதினாரத்தைக்கெடுத்துக் கன்னியர் எழுபதினாயிரர் திரண்டிருந்தாரென்று முடிக்கின்றார்.

அரம்பைகளின் கூர்தல் வருணனை கூறுமிடத்து இங்ஙனமே பலநூலினும் வருவனவற்றை ஈண்டு



க்கூறப்புகின் விரிவாமாகலின் நிறுத்துகின்றாம். கற்றோர்கவனிக்க.

76. பண்ணமைத்தீஞ்சொல ரம்பையர்மேனிப்
பரிமளந்தெருவெலாங்கமழ
விண்ணகத்திரவிக் கதிரொளிமணிகள்
விடுவெயில் விழுதுவிட்டொழுகத்
தண்ணகைத்தரக் கதிருடுணிப்பத்
தரையெலாம் பொன்மைபோர்த்திருப்ப
மண்ணகத்திருந்தவாமினாமனையை
வானவர் பதியெனலாமால்.

இச்செய்யுளில், திலகக்காரர் விபரீத மொன்று முண்டாக்காது உலகத்தோடொப்பவே பொருள்கூறினார். ஆயினும், சொற்கடோறும் அருத்தாபத்தில்வைத்துப் பார்க்கும் அவர், ஈண்டு ஆசிரியர் "மண்ணகத்திருந்த ஆமினா" என்றமையான் விண்ணகத்திருந்த ஆமினாவு மொருவருண்டேயென்று அருத்தாபத்திப்பொருள் கொள்ளமறந்தார்போலும்!

77. பறவைகளனைத்துமேவலின்படியே
படியினுமந்தரமனைத்து
நிறைதரப்பெருகவதிலொருவெண்பு
ணித்திலக்கதிர்கள்கான்றொழுக
வுறைதருமாமினாத்திருமனையி
னுட்புகுந்தெதிர்வருவதுகண்
டறைதாமனமும் பயந்திடவொதுங்கி
யஞ்சிநின்றதிசயித்தனரே.

இச்செய்யுளில், ஆமினாவுக்கெதிர்வந்த அப்புள் நித்திலத்தாற் படைக்கப்பட்ட தென்பது தோன்ற "வெண்புள் நித்திலக்கதிர்கள் கான்றொழுக" என்றா ராசிரியர். இதனையறியாத திலகக்காரர்,

"நித்திலக்கதிர்கள் கான்றொழுக வறைதருமாமினா" எனச்செய்யுளிற்கிடந்தபடி வைத்துக்கொண்டு, ஆமினாவே நித்திலக்கதிர்கள் கான்றொழுக விருந்ததாகப் பொருள்கூறி "தரளத்தாற் படைக்கப்பட்டபுள் எனக் கொள்வர் முதலுரையார். அது பொருள் வியப்பின்றா தல் பற்றிப்பொருந்தாதென்க" என்கின்றார்.

யாருரையிற்பொருள்வியப்பின் றென்பதைக் கற்றோர் சற்றுக்கவனிக்க.

அதாஅன்று, அப்புள்ளைக்கண்டு ஆமினா பயந்தத னால், அவரதிருதயத்துடிப்பைக் கூறுவான் ஆசிரியர் "அறைதரமனமும்" என்றார். இதனையறியாத அவர் "அறைதர" என்பதற்கு "தமது முகத்தைத்திரை செய்து" எனப்பொருள்கூறுகின்றார். அதென்னவென் று கற்றோர் அவரைக்கடாவுவார்களாக.

78. வருந்திநொந்திருந்தவாமினாத்திருமுன்
வந்துநின்றழகுறும்வெண்பு
ளிருந்தவெண்சிறையை விரித்தொளிசிறந்தே
யிலங்கிடவீசியகாற்றாற்
பொருந்தியசரீரவேர்வையுந்தீர்ந்து
புளகெழச்சிலிர்த்தனரோமங்



திருந்திழைமனத்துட்பயங்கரமகன்று
தேகமுங்குளிர்ந்ததுவன்றே.

இச்செய்யுளில், ஒளிசிறந்து இலங்கிட வீசிய என் புழி, சிறந்து இலங்கிட என்னும் வினையெச்சங்களை வீ சியவென்னும் வினைமுற்றோடு முடித்து யாம் பொருள் கூறினதுமன்றி, வீசியது எனமுடித்தும் அக்காற்றா லெனப் பிரித்தும்பொருள் கூறினுமமையும் என்றுங்கூ றினாம்.

திலகக்காரர் எங்கூற்றையே தழீஇ யுரைகூறுவ துமன்றி, அவ்வெச்ச மிரண்டனையும் விரித்தென்ப தோடு கூட்டிக்கொண்டு "அதை வீசுதலோடுகூட்டு வர் முதலுரையார். அதில் பொருள்வியப்பின்றாகலின் பயனில் கூற்றென்க" என்கின்றார்.

அவர் அவ்வெச்சங்களை விரித்தென்பதோடு மு டித்ததால் என்னவியப்புப் பிறந்ததோ ஆச்சரியம்!

அதாஅன்று, வீசியகாற்றாலெனச் செய்யுட்கிடந் தவாறே பொருட்கூறுவாருஞ் சிலர். அஃதே முதலு ரை யார்க்குமுடன்பாடு" என்கின்றார்.

எம்முடன்பாடு அஃதொன்றுமாத்திரமன்று; அ வரைக்கூறத்தூண்டிப் பின்னர் யாங்காட்டியிருப்பதும் எம்முடன்பாடேயாம்.

அதாஅன்று "வேர்வையும் தேகமும் என்ற உம் மைகளான் முறையே ரோமமும் எனவும் மனத்துள் ளதும் எனவும் உம்மைபெறப்பட்டன. இக்கருத்தறியாது

தம்மதமே பெரிதென வுள்ளிட்ட முதலுரையார் ஆசிரியரை ஒருமை பன்மை யறியாதாரெனும் தவறுளம்பற்றிக் குளிர்ந்தனஎன்பதைக் குளிர்ந்தது எனத்திருத்திப்போந்தார். அவர்க்கிவ்வழக்கே இயற்கையென்க" என்கின்றார்.

அவர்கூறுமாறு உம்மையை யாண்டாண்டுவிரிப்பினும் அவ்வும்மைகள் எண்ணிநின்று, வேர்வையும் ரோமமும் மனமும் தேகமும்குளிர்ந்தன வென்றன்றோ முடிதல்வேண்டும்? அங்ஙனமின்றி, வேர்வையுந்தீர்ந்து ரோமங்களுஞ் சிலிர்த்தன. பயங்கரமகன்று தேகமுங்குளிர்ந்தது என்றன்றோ ஆசிரியர் முடித்திருக்கின்றார் ஆகவே, தேகமென்ற ஒருமைச்சொல் குளிர்ந்தனவெனப் பன்மையாய்முடிய விதியாதோ! ஆறுவதிலக்கணம் போலும்!!

79. அண்டரிலொருவர் மரகதகிண்ணத்
தமுதினையேந்திவந்தடுத்துக்
கொண்டவர்கொடுப்பகூறலின்வாங்கிக்
கொடியிடைமடமயிற்கிய
முண்டகக்கரத்தாற்றாங்கியேபருக
முதிர்பரதாபமுநீங்கிக்
கண்டெனுமொழியார்கருப்பநோயகன்று
கலக்கமுந்தெளிந்தனரன்றே.

இச்செய்யுளில், திலகக்காரர், கொண்டவர்கொடுப்ப என்புழிக்கிடக்கும் கொடுப்ப வென்பதை யெடுத்துவிட்டு மடமயிற்கிய என்புழிக்கிடக்கும் ஈயவென்பதைக் கொணர்ந்துவைத்து இங்கெடுத்த கொடுப்ப



வென்பதை ஈயவென்பதை யெடுத்தவிடத்தில் கொணர்ந்துவைத்துக் கொண்டவரீய மடமயிற்குக் கொடுப்ப என்றும், பரதாபமும் நீங்கிக் கருப்பநோய் அகன்று கலக்கமுந் தெளிந்தனர் என்பதை, பரதாபமும் கருப்பநோயும் அகன்ற கலக்கமும் நீங்கித் தெளிந்தனர் என்றும், எவர்க்கும் எவ்வாற்றானும் பொருந்தாவண்ணம் தம்மனம்போனபடி யுளறுவது மன்றி,

“இச்செய்யுட்கு முதலுரையார் கூறுவனவெல்லாம் முரணுரை யாகலின் எடுத்துக்கூறி மறுத்திலம். அவருரை யானே அறிக” எனமன்னிக்கின்றார்.

அறப்போலியான அருவருப்பான அநாதாரமான அவருரைக்கு எம்முரை முரணுரைதானென்று யாம் ஒப்புக்கொள்ளுதும்.

80. பொன்னொளிர் கவினு முறக்குழைத்தெழுது
பூந்துகில்வெண்ணிறங்கவின
மின்னொளிகரப்பக் கதிர்விடுகலையை
விரைந்தொரு தட்டினி லேந்திப்
பன்னியவமரர்த் தொகையினிலொருவர்
பரிவுடன்கொணர்ந்ததைவாங்கி
யன்னமோ மயிலோவெனு மொருமடமா
னாமினாத்திருக்கையிலீந்தார்.

இச்செய்யுளில், ஆசிரியர் “அமரர்த்தொகையினிலொருவர் கதிர்விடுங்கலையை ஒருதட்டினிலேந்திக் கொணர்ந்ததை ஒருமடமானாகிய ரம்பைவாங்கி ஆமி

ஞத் திருக்கையில் ஈந்தார்" என்று மிகத்தெளிவாகப் பொருளமைத்திருப்ப,

திலகக்காரர் ஒருகலையைத் தட்டினிலேந்திக் கொணர்ந்து ஒருமடமானாகிய ரம்பையைக் கூப்பிட்டு அவர்கையிற் கொடுத்தார்" என்றுபொருள் கூறி, ஆமினாததிருக்கையி லீந்தார் என்பதை முழுதும் விழுங்கிவிட்டது மன்றி,

"இனி ஆமினாவினது சிறப்பு இனைத்தெனவும் இச்செய்யுளிற்கிடந்த அரியகருத்து இனைத்தெனவும் உணராது முதலுரையார் தாங்கொண்ட போலிய கருத்துக்கிணங்க பொருளும் இலக்ஷணமுங் கூறிப் போந்தார். அவர் ஈந்தாரென்பதை ஆமினாவொடுபடுத்து கையான் உறும் இடரினைத் தென்பதை யறிந்திலர் போலும்' பிறவருஉம் விகற்பங்களை யவருரை கொண்டு நோக்குக" என்கின்றார்.

ஆசிரியர்க்கும் ஏனையர்க்கும் எவ்வளவும் பொருந்தாத விபரீதவுரையை யெழுதித் தமதறியாமையை விளக்கும் அவர், மேற்காட்டியவாறு தெளிபொருள்விளக்கிய யாம் போலிய கருத்திற்கிணங்கக் கூறியுள்ளேமென்று இகழ்வது மதிகேடென்பதைக் கல்விமான்களறிவர்.

வயிரம் பாய்ந்த கருத்தினராகிய அவர், ஒரு மடமான் வாங்கி என்பதற்கு "மடமான்—மடமானாகிய ரம்பையை, வாங்கி—கூப்பிட்டு" எனப் பொருள் கூறுகின்றார். "கல்வாங்கியடித்தான்" என்னுங் கூற்றாரில் அவரும் ஒருவர் போலும்! அந்தோ!! பேதையீர்!!! பரிதாபம்!!!!



81. செவ்விவீற்றிருந்துமுகமதியிலங்குந்
திருந்திழையாசியாதமைய
மௌவலங்குழலார் மறியமென்றுரைக்கு
மயிலையுமரம்பையர்தமையுங்
கவ்வையங்கடல்சூழ் புடவியிற்சிறந்த
காட்சிசேர்மக்கமாநகரி
னவ்விவேல்விழியா ராமினாவிருக்கு
நறைமனைபுகவிறையுரைத்தான்.

இச்செய்யுளில், தமக்கேற்றவாறே பொருள்கூறிய திலகக்காரர் அம்மட்டிலடங்கி யொடுங்கிக்கிடவாது,

"இனி நவ்விவேல்விழி என்புழி மானையும் வேலையும் போன்றவிழி எனப்பொருள்கூறுவாருமுளர். அஃதே முதலுரையார்க்குமுடன்பாடு. அது உவமையாற்பொருந்தாதெனமறுக்க. என்னை மான்போன்றல் வேல்போலாது ஆகலானும் ஒருருபின்மேலே ஒரே காலத்து இருவாகுவமம் ஏற்றன்மரபாகா ஆகலானும் அங்ஙனமாகுமேல் ஐயவணியா மாகலானுமென்க' என்கின்றார்.

எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்களையே கற்றுத் தெளியாத அவர், அணியிலக்கணத்திற்பாய்வது ஆச்சரியம்! நவ்விவேல்விழி என்பது * "அதுவே, விரியேதொகையே" என்றவிதிப்படி பலபொருளுவமையாம். பலபொருளுவமையென்பது, ஒருபொருட்குப்

* தண்டியலங்காரம், பொருளணியியல் ௫-வது, சூத்திரம்.

பலவுவமைகாட்டுவது. உதாரணம்:— "வேலுங்கருவிளையுமென்மானுங்காவியுஞ், சேலும்வடுவகிருஞ் செஞ்சரமும்—போலுமால், தேமருவியுண்டு சிறைவண்டறைகூந்தற், காமருவுபூங்கோதைகண்" என்பதானறிக.

இங்ஙனம் சாமறியாதனவற்றிலெல்லாம் பேதையர் தலையிட்டுக்கொண்டதுமன்றி, கல்விமான்களை நிந்திப்பது என்னபுத்தியோ! ஆச்சரியம்!!

அதாஅன்று, "ஆசியா அவர்களை பிறஒளனுடைய மனைவி என்று துணிந்துபோந்தார் முதலுரையார். மனைவித்துவம் ஒருகாலத்தேனு நிகழ்ந்திலாமையான் அங்ஙனம் பொருந்தாதென்க" என்கின்றார்.

பிறவூன் ஆசியாவை விவாகஞ்செய்துகொண்டது உலகறிந்ததே. அதனாலே உலகத்தார் அவரை அவன்மனைவியென்கின்றார். அவரிருவருள் புணர்ச்சிநிகழாமையால் மனைவியென்பது பொருந்தாதென்கின்றார். ஒருத்தி ஒருவனுக்கு விவாகஞ்செய்யப்பட்டுப் புணர்ச்சியின்றியிருந்தால், அவள் அவனுக்கு மனைவியென்னும் முறையை விட்டு ஒழிவாளா? இதனை எவருங்கவனிக்க.

அதாஅன்று, "மறியம் மசிகுடையதாயார் என்பதினு மவ்வாறேகொள்க" என்கின்றார்.

எவ்வாறுகொள்ளலாம்? தாயின்றன்மை யில்லையென்கின்றார் போலும் பேதையர். பின்னைமறியம் மசிகுக்குயார்? மசிகுதாம் யார்வயிற்றிற்பிறந்தார்? இ



தென்ன மதிகேடு! ஆனாலும்! ஆமினா புத்தைவணங்கினா ரென்றதைப்பார்க்கிலும் இது மிகக்கேடன்று.

82. இறையவனுரைப்பச் சுவனமாமடவா
ரெங்கணும் பரந்தெழுமொழுங்கு
மறியமுமழகு டமுத்தொளிததும்பு
மானஃராசியாதாமு
நிறைமதியிரண்டு வானகத்திழிந்து
நிலத்திடையுடுவொடுந்திரண்டே
யறைகழல்சிலம்ப வருவபோல்வந்தங்
காமினாதிருமனைபுகுந்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் "அறைகழல்சிலம்ப என்புழிச் 'சொல்லுகின்ற அடிகளில் ஆபரணங்கள் ஒலிக்கும்படி, என்று பொருள்கூறுவர் முதலுரையார். அக்கூற்றில் பொருள்சிறக்காமையான் பயனில் கூற்றென்க" என்கின்றார்.

யாங்கூறிய சொல்லுகின்றவென்பது, புகழ்ந்து சொல்லுகின்றவென்பதை அறிந்திலர்போலும்!

அதாஅன்று, வந்து அங்கு ஆமினாத்திருமனைபுகுந்தார் என்புழி, அங்கென்றது மக்காவைச்சுட்டி நிற்கின்றதென்பதை யறியாது, அசைநிறை என்கின்றார்.

அசைநிலையென்றும், இசைநிறையென்றுமுளவன்றி, அசைநிறையென்றும் ஒன்றுண்டென்பதையாம் இதுகாறும் அறிந்திலம்! ஆறுவதிலக்கணம் போலும்!!

83. படித்தலம்புகலு மாமினுவலது
பாரிசத்தாசியா தாமும்
வடித்ததெள்ளமிர்த மெனுமொழிக்குதலை
மறியமுமிட துபாரிசத்தி
லடுத்தவப்பொழுதி லரம்பையர்சிலர்வந்
தணிமுழந்தாடுணைகணைக்காற்
பிடித்தடிவருடி நின்றனர்மனையும்
பேரொளிபிறங்கினதன்றே.

இச்செய்யுளில், திலகக்காரர் தாம்வேண்டியவாறு ரைகூறினதோடடங்காமல்,

"இனி மனையும் என்ற உம்மையை ஆக்க உம்மையெனவும் பேரொளி என்பதைப் பெரிய ஒளியெனவுங் கொண்டு பிறங்கினவென்பதைப் பிறங்கினது எனத்தமதியற்கைக் கிலக்காய்த்திருத்தியும் அடங்காது மனையும் என்ற உம்மையை எச்ச உம்மையாய்க்கொண்டு மனையும்பிறவும் பிறங்கின எனப்பொருள்கூறுவாருமுளர் என்றிழித்துப்பேசியுந் தமதறியாமையை விளக்கிப் போந்தார் முதலுரையார். ஆகலினவருரை போலியாமென மறுக்க" என்கின்றார்.

பேரொளி பிறங்கினது என்புழி உலகம் ஒப்புக்கொள்ளாதவண்ணம், "பேரொளி—அடங்காப்புகழ், பிறங்கினநிறைந்திருந்தன" என்று பொருள்கூறும் அவர் கோணன்மதிக்கு யாம் எமதறியாமையை விளக்கிப் போந்ததாகப் புலப்படுவது புதுமையன்று.



84. மடந்தையுமகப்பே றடுத்திடுஞ்சமயம்
வானவர்குழுவினைநீந்திக்
கடந்துவந்தொருவர் நின்றனரவர்செங்
கரத்தினிற்கிண்ணமொன்றேந்தி
யிடங்கொளாதுறைந்த கூறுலீன்களிலோ
ரேந்திழைகடிதினில்வாங்கி
யடர்ந்திலம்புகுந்து கொடுப்பதைப்பருகி
யாமினுமகிழ்ந்தனரகமே.

இச்செய்யுளில், ஆசிரியர் "ஒருவர், அவர்கரத்தினிற் கிண்ணமொன்று ஏந்தி வானவர்குழுவினை நீந்திக் கடந்துவந்து நின்றனர். (அதனை) கூறுலீன்களில் ஓர் ஏந்திழை கடிதினில்வாங்கி" எனமிகத் தெளிவாகப் பொருளமைத்திருக்கின்றார். திலகக்காரர் இதனையறியுந் திறனின்றி,

"ஓர் ஏந்திழை அவர்கையிலிருந்து விரைவாய்க்கடந்துவாங்கி" என, குழுவினைநீந்திக்கடந்துவந்து நின்றனர் என்புழிக்கிடந்த கடந்தென்பதையெடுத்துக் கையிலிருந்து என்பதிற்சேர்த்து, அக்கடந்துவாங்கி என்பதற்குப் பாய்ந்துவாங்கியென்றும், பின்னும் பலவாறுங் கூறுகின்றார். கற்றோர்கவனிக்க.

85. பானகம்பருக வொளிவும்வந்திறங்கிப்
பகலவன்கதிரெனப்பரப்ப
வானவர்மகளிர் மருத்துவம்புகுத
மறியமுமாசியாதாமுந்

தேனவிழ்பதுமச் செழுங்கரங்கொடுத்துச்
சேர்ந்தணைந்தருகுறச்சிறந்த
கானமர்குழலா யஞ்சலென்றுரைப்பக்
கனிந்திளகினகருப்பமுமே.

இச்செய்யுளில், மறியமும் ஆசியாவுமே ஆமினைவைநோக்கி "கானமர்குழலாய் அஞ்சல்" என்றுகூறினராக ஆசிரியர் நன்குவிளக்கியிருப்ப, திலகக்காரர் ஆண்டு மலக்குகளை வாளாவருவித்து,

"கானமர்குழலாய் அஞ்சல்" என்று அம்மலக்குகள்கூறினதாகக்கூறுகின்றார்.

பிரசவ ஸ்திரீமாட்டு ஆண்டன்மையுள்ள மலக்குகள் நெருங்கி நில்லாராகலின், அவர்கூற்றுப் பதராமென்க. தூரவிலகி நின்றுசொன்னார்களெனின்; ஆசிரியர் ஏன் அங்ஙனம்விளக்கிக்கூறிலரென்றுகளைக.

86. கோதறப்பழுத்து மதுரமேகனிந்த
சொவ்வைவாயரம்பையர்வாழ்த்தித்
திதறநெருங்கி யேவல்செய்திருப்பச்
செழுங்கமலாசனத்திருந்த
மாதருக்கரசி யாமினாவுதர
மனையிடத்திருந்துமாநிலத்தி
லாதரம்பெருக நல்வழிப்பொருளா
யகுமதுதோற்றினரன்றே.

இச்செய்யுளில், "கோதறப்பழுத்து மதுரமேகனிந்தகொவ்வை" எனப் பழுத்தலையுங் கனிதலையும் கொவ்வைக்கமைத்தவாறு யாம் பொருள்கூறியிருப்ப,



திலகக்காரர் கோதறப்பழுத்து மதுரங்கனிந்து அரம்பையர் எனப்பொருள்கூறி,

"இனி, கோதறப்பழுத்து மதுரமேகனிந்து என்பதைக் கொவ்வையோடு கூட்டி 'சக்கையறப்பழுத்து இன்பங்கனிவான கொவ்வைக்கனி' என வாளாப்பொருள்கூறி யிடர்ப்படுவர் முதலுனாயார்" என்கின்றார்.

யாம்பொருள்கூறி இடர்ப்படுவதை ஈண்டுக் கற்றோர் ஆராய்க. அவர் கனிந்த என்றே கிடந்த பெயரெச்சத்தைக்கனிந்து எனவினையெச்சமாக்கி, பின் அதற்குப்புதைதலாகிய வெனப்பெயரெச்சமாகவே பொருள்கூறுந்தடுமாற்றத்தையுங் கவனிக்க.

78. கிடந்தொளிபரப்பி வாசங்கொப்பளித்துக்
கிளர்கிபுலாவைமுன் னோக்கி
யிடங்கொளந்தரநேர் சிரசினையுயர்த்தி
யெழில்பெற சுஜூதுசெய்திணைத்தாட்
டிடம்பெறமடித்துக் குறியிடக்கையாற்
சேர்த்தொளிர் வலக்கைகான்மேல்வைத்
துடனணிக்கலிமா விரலினையுயர்த்தி
யுதித்தனர் முகம்மதுநபியே.

இச்செய்யுளில், ஆசிரியர் "கிடந்தொளிபரப்பி வாசங்கொப்பளித்துக் கிளர்புலா" எனக் கிடத்தலும், ஒளிபரப்புதலும், வாசங்கொப்பளித்தலும், கிளர்தலும் கிபுலாவின் வினையாக (கிபுலாவென்றது கருபாவை.) அமைத்திருப்ப, திலகக்காரர் அவ்வினைகளை நபிபெரு

மானூர் மேலேற்றிப் பொருள்கூறுவதுமன்றி, பின்னும் பலவற்றையும் விரித்தெழுதி, யாம் இக்கருத்துக்களை யறியாது ஆகாயத்திற்குநேர் சிரசினையுயர்த்தி எனக் கூறியது போலியுரையென்றும், ஆகாயத்திற்கு மாறலாக வுயரப்பண்ண லென்பதொன் றின்மையானும், உயர்த்தியென்பதே ஆகாயத்திற்கு நேரேயென்னும் பொருடருமாகலானு மென்றும் நியாயமுஞ் சொல்லுகின்றார்.

அவர் தாமும் "தலையைக் கரத்தைப் பார்வையை ஆகாயத்தளவில் உயர்த்துதல் பற்றி" எனவும், "சிரசினை ஆகாயத்தளவில் உயர்த்தினர்" எனவுங் கூறுவதைக் கவனித்திலர் போலும்!

88. சிரசினிநெய்தோய்த் திருவிழிக்கருமை
சிறந்திடக்கொப்புழுங்கொயலாய்
மருவுசுன்னத்துஞ் செய்யலாய்த்துடக்கின்
வருங்குறியொன்றுமிலாதாய்ப்
பரவுகஸ்தூரி மனையெலாநிறைந்த
பரிமளங்கமகமகமெனப்
பெருகியவொளிவு வானமட்டுலவப்
பிறந்தனர்முகம்மதுநபியே.

இச்செய்யுளில், ஆசிரியர் சிரசினிநெய்தோய்த்து என்பதை வேற்றுமைத்தொடராக்கிச் சாரியையையும் உருபையும் விரித்துக்கூறியிருப்ப, திலகக்காரர் இன் இல் என்றசாரியையையும் உருபையும் இசைநிரப்பின்மசாரியைகள் என்று நீக்கிச் சிரசானதுநெய்தோய்க்கப்பட்டு எனத் தாமாகப்பொருள்கூறுவதுமன்றி,



"இனி, சொப்புள் என்பது, சொப்பூழ் என்னும் பொருள் சிறவாமையால் கரலிகிதங்களாலாய வழூ வென்றடங்காது முன்பாடமெனமறுத்துக் 'கொப்பூழ்' எனத்திருத்திப் போந்தார்முதலுரையார். இவ்விருகூற்றினும் கொப்புள் என்பதற்குக்குமிழி என்னும் பொருள்பயந்து குமிழிபோறலால் நாபியைக்கொப்புள் என்றாராசிரியரெனினு மொருவாறமையும் மற்றையசொப்புழ் என்பது என்னபொருளோ? எப்பாடையின்மொழியோ; யாமறியேம்" என்கின்றார்.

அது கரலிகிதவழூவாயே முன்பாடமாய்க்கிடந்ததென்றெடுத்துக்காட்டி யாந்திருத்தினும், ஏனையவழீஇய முன்பாடங்களும் கரலிகிதவழூக்களென்பதே எங்கொள்கை. கொப்புளேயாய், குமிழிபோறலால் கொப்புளாமெனினுமொருவாறமையுமெனின்; மேற்புடைத்திருக்குங்குமிழியை உட்குழிந்திருக்கும் நாபிக்கு உவமையாக்குதல்பொருந்தாது. அங்ஙனம் எவருங்கூறிலர்.

இனிக் கொப்பூழென்பது தமிழ்ப்பாடைமொழியாய் நாபியென்னும்பொருட்டாய், செய்யுளின்பம்பற்றிச் சொப்புழ் எனக்குறுகிநிற்பதைக் கற்றுக்கொள்வாராக.

அதாஅன்று, எமது முதலுரையில் "அண்டரிலொருவர்" என்றசெய்யுளில் வந்தெடுத்துக்கொண்டவர் " என்றும், "செவ்விவீற்றிருந்து" என்றசெய்யுளில் "இறையுறைத்தான்" என்றும் வரைந்து, அவற்றின் உரையில் "வந்தடுத்துக்கொண்டவர்" "இறையுரைத்தான்" என முரணக்கூறினமென்றும், அவை,

இவையென எடக்குமுடன்பாடின்றென்றும், அவைகா லிகிதவழுவாயின், கொப்புளென்பதும் அவ்விதவழுவாமென்றும், அதை முன்பாடமெனமதத்துக்கூறிப்போர்தாமென்றும், படர்க்கையும் முன்னிலையுங்கலப்ப வுளறுகின்றார்.

எம்முரையில் அச்சு வழுவாயினவற்றுள் திருத்தப்பட்டனவன்றித் திருத்தாதனபலவுள. அவற்றுள் இவ்விரண்டுதாம் அவர்க்குப் புலப்பட்டன போலும்! இவ்விரண்டைமாத்திரம் அவர் எடுத்துக் காட்டவந்தார். அவரது திலகத்தில் பிழைதிருத்த அட்டவணையிலடங்கினவைபோக அநேகம் வழுக்கள் மலிந்துகிடக்கின்றன. அவற்றை யெடுத்துக்காட்டப் புகின் பக்கத்திற்குப் பதின்கலவழுப்பொறுக்கலாம். அவ்வனைத்தும் அவரறியாதனவன்றி அச்சுவழுவல்ல வென்றுஞ்சொல்லலாம். அவற்றை யெடுத்துக்காட்டல் வீண்காரியமென்றுயாமதில் தலையிடவில்லை. சந்தர்ப்பமிருந்தால் அவற்றைப்பொறுக்கி யெடுத்து, இப்புத்தகமுடிவில் ஒரு அட்டவணைகாட்டிவைப்பேம்.

89. செம்மையங்கோட்டுக் கடக்கரிக்கலகந்
தீர்ந்தபி னைம்பதாநாளி
லம்மதிமாசத் தொகையினில்றபியு
லவ்வலிற் பனிரண்டாந்தேதி
யெம்மனைக்கும்பே றெனவரும்பொருளா
யிசைத்திடுந் திங்களிராவின்
மும்மையென்றுரைக்கும் புவனமும்புரக்க
முகம்மது நபிபிறந்தனரே.



இச்செய்யுளில், திலகக்காரர் பலவிரிவிசேஷங்களை யெழுதினதுமன்றி,

“எம்மனைக்கும் என்றமையான் மனைகளடங்கிய உலகத்திற் கென்பதேகருத்து” என்கின்றார்.

உலகமென்னும் முதலுக்கு மனை சினையாமா? அங்ஙனமாயினன்றோ மனைகளடங்கிய உலகத்தை மனை யென்றுகூறப் பொருந்தும்? இதைக் கற்றோர்கவனிக்க.

அதாஅன்று, “தினங்களில் நபிபெருமானார் உதயமாதற்கேதுவாயவத் திங்கட்கிழமையே எல்லாத்தினங்களினுஞ் சிறந்ததென்பான் இசைத்திடுந்திங்கள் என்றார். ஆகவே பிறவருந் திங்கட்கிழமையெல்லாம் அத்தன்மைத்தனவாஞ் சிறப்பினதன்றெனக் கொள்க” என்கின்றார்.

தினங்கள் ஏழனுள் வெள்ளியென்று பெயர்பெற்றதினம் சிறந்தாற்போலத் திங்கள் என்றுபெயர்பெற்றதினமுஞ்சிறந்ததாம். ஆகவே திங்கட்கிழமை எந்தக்காலத்ததாயினுஞ் சிறந்ததே. அதனாலன்றோ நபிபெருமானார் அவதரித்ததும், மிகுறாஜுக்கு எழுந்ததும், நபிப்பட்டம் பெற்றதும், இன்னும் பல விசேஷகருமங்கள் நிகழ்ந்ததும், உடாத்தானதும் திங்களென்னும்பெயரையுடைய கிழமையாயிற்று. இங்ஙனமாக, நபிபெருமானார் அவதரித்ததான அந்தவருஷத்து அந்தமாதத்து அந்தத்தேதியின் அந்தத்திங்கட்கிழமையே சிறந்தது; ஏனைய திங்கட்கிழமைசிறந்ததன்றென்பது பேதைமையாம். இதை இன்னும் விரிப்பிற் பல்குமாகலின் விடுகின்றேம்.

அதா அன்று, எம்மனைக்கும் பேறெனவரும்பொருளாய் முகம்மது எனக் கூட்டுகவென்றும், யாம் அதைத் திங்களொடுகூட்டிப் பொருள்வரைந்து விசேடவுரையுங்கூறி இடர்ப்பட்டுப் போந்தேமென்றும், நபிபெருமானார்பிறந்த திங்கட்கிழமையைப்பெறுதல் குணியமென்பது எமது பேரறிவிற் புலப்பாடின்றி மறைந்ததுபோலுமென்றுங் கூறுகின்றார்.

எந்தெந்த முநியோர் எந்தெந்த மாதத்தில், எந்தெந்தத்தேதியில், எந்தெந்தக் கிழமையில் பிறந்தனர்; அல்லது இறந்தனரோ அந்தந்த மாதத்தை, அந்தந்தத்தேதியை அந்தந்தக்கிழமையைக் கொண்டாடுவது இயற்கையேயன்றி, அவர்கள் பிறந்த அல்லது இறந்ததான அந்தக்காலத்தில்வந்த அந்தமாதமும், அந்தத் தேதியும், அந்தக்கிழமையும் திரும்பிவந்து கொண்டாடப்படுவதில்லை இதற்குத் திருட்டாந்தத்தை எண்ணிப்பார்க்க விளங்கும். அங்ஙனமே நபிபெருமானார் பிறந்ததும் உபாத்தானதுமான திங்களென்று பெயர் பெற்றகிழமையே கொண்டாடப் படுகின்றதன்றி, முன் யானைக்கலகம் நிகழ்ந்த ஐம்பத்தோராந்தினமாய்வந்த திங்கட்கிழமையைப் பெறுகின்றாரென்பது எவ்விதப் பேதைக்குங் கருத்தாகாது.

அதா அன்று, எம்மனைக்கும் என்புழிக்கிடந்தமுற்றும்மையை யாம் எச்சவும்மையாகக் கொண்டு, அது முஸ்லீங்களது மனையைமாத்திரங் குறித்துநின்றது எனப் பதருரைவரைந்து போந்தேமென்றும், முஸ்லீங்களென்று ஒருசாதியாரில்லை யாகையால் எம்மனைக்குமென்றவும்மை முற்றும்மையாய்க் காபிர்களது மனை



யையுங்குறித்து நின்றதென்றும், எமதிழுக்கை அங்ஙனமே கூறுமிடத்துப் பல்குமென்றும், தமக்குச் சாவகாசமில்லையென்றும், அறிவுளர்க்குப் போதுமென்றுங் கூறுகின்றார்.

நபிபெருமானார் பிறந்த திங்கட்கிழமை கொண்டாடப்பட முஸ்லீங்கள்மனைக்குமாத்திரம் வந்துகொண்டிருக்கின்றதன்றி, காபிர்கள்மனைக்கும் வருவதை இதுகாறும் யாம் அறிந்திலம். அதற்காகத்தான் அவ்வும்மையை முற்றாகவைத்துக்கொண்டார்போலும்? இருக்கட்டும். எம திழுக்கனைத்தையுமெடுத்துப் பரப்பி நாறடிக்க அவர்க்குச் சாவகாசமில்லாமற்போனது யாஞ்செய்த தபோபலன்றான். ஆயினும், சிற்சிலகூறினதை அறிவுளார் பார்த்துக் காரித்துப்புவார்களோ என்று நாணுகின்றேம். இது விதிப்பலன்போலும்!

90. பூதலத்தரசு பதியெனவுதித்த
புகழ்பெறு மக்கமாநகரிற்
சீதவொண்கதிர்சேர் கருபத்துல்லாவின்
றிசையினில் வடகிழக்காக
வேதமொன்றணுகா ஜெமுறத்துலுஸ்தா
வெனுமொரு தலத்தினிடுவே
மாதவரபீத்தாலிபுதிருமனையின்
முகம்மது நபிபிறந்தனரே.

இச்செய்யுளில், திலகக்காரர் எம்மைமறுத்து யாதுங்கூறிலர். அதனால், எமக்கும் அவர்க்கும் ஈண்டுவழக்கில்லை.

91. நெறிநிலைதிரியா மருண்மரமிகுந்து
நெடுநில மெங்கணும்பரந்து
துறவறந்தவறி யில்லறமடிந்து
சுடரிலா மனையதுபோலக்
குறைபடுங்கால மிருளெனுங்குபிரின்
குலமறுத் தறநெறிவிளக்க
மறுவிலா தெழுந்த முழுமதிபோல
முகம்மது நபிபிறந்தனரே.

இச்செய்யுளில், ஆசிரியர் உலகத்தினிகழும் நன்மைபயக்கும் இல்லறம் துறவறமென்னும் இரண்டும் பிழைத்தென்பது தோன்ற "துறவறந்தவறி; இல்லறமடிந்து" எனக்கூறினார். திலகக்காரர் உலகம் நடைபெறற்கு இன்றியமையாதது இல்லறமென்பதை யறியாது "இல்லறமடிந்து" என்பதற்கு உலகப்பேற்றிலேயே மடிவுற்று எனக் கூறுவதுமன்றி, நெறிநிலைதிரியா என்பதற்குச் சன்மார்க்கத்தின் முறைகள் நடைபெறாது எனப் பொருள்கூறி,

"இனி, நெறிநிலைதிரியா என்பதை நெறிநிலைதிரிந்து எனத் தமது சிற்றறிவிற்கேற்பக்கொண்டு சன்மார்க்கநிலை மாறுபட்டு எனப்பொருள்வரைந்து போந்தார் முதலுரையார். சன்மார்க்கம் யாண்டுங்கெடா, அங்ஙனம் நடவாரேயன்றி, ஆகலின் அது உரையாகாவென மறுக்க" என்கின்றார்.

திரிதலென்பது மாறுபடுதலாகலின், மாறுபட்டு என யாம் பொருள்கூறினேமன்றி, கெட்டு எனக்கூறிலேம். பேரறிவினராகிய அவர் திரியா என்பதற்கு நடைபெறாதெனப் பொருள்கூறி எம்மை நிந்திக்கின்றார். இதனைக் கற்றோர் கவனிக்க.

92 பானுவின்கதிரா லிடருறுங்காலம்
பட்டருந் தருநிழலெனலா
யீனமுங்கொலையும் விளைத்திடும்பவநோ
யிடர்தவிர்த் திடுமருமருந்தாய்
தீனெனும்பயிர்க்கோர் செழுமழையெனலாய்க்
குறைஷியின் றிலகமேயெனலாய்
மாநிலந்தனக்கோர் மணிவிளக்கெனலாய்
முகம்மது நபிபிறந்தனரே.

இச்செய்யுளில், ஈனமுங் கொலையும் விளைத்திடும் பவநோய் என்பதற்கு, இழிவையுங் கொலைத்தொழிலையும் விளைக்காநின்ற பாவமென்னும் நோய் எனப் பாவத்தின் செய்கையைச்சுட்டியாம் பொருள்கூறினதுமன்றி, ஈனமுங் கொலையும் விளைத்திடப்படும்பவநோய் எனப் பொருள்கூறினுமமையும் எனப்பின்னுங்கூறினேம். திலகக்காரர் யாம் பின்னர்க்கூறியிருப்பதைத் தாமுந் தெரிந்துள்ளோர்போலக் கூறுவதுமன்றி, மணிவிளக்கென்பதற்கு மாணிக்கவிளக்கென்ற எங்கூற்றை மறுத்து, நன்மைபயக்குந் தீபமென்றுங்கூறி, எம்முரையைப் போலியென்கின்றார். இவற்றைக் கற்றோர் ஆராய்க.

ஒருவனுக்குப் பாவமென்னும் நோய் முன்னமே யுண்டாயிருந்து, அதுவே ஈனத்தையுங் கொலையையும் விளைக்குமென்பது தெள்ளிதாம். கேட்டுத்தெளிக.

93. செங்கதிர்பரப்பி யுலகெலாம்விளக்கித்
திரிதினகரனும் வெண்ணமுதந்
தங்கியகிரணச் சசியுமந்தரத்திற்
றவழ்தருமுடுக்குல மனைத்தும்
பொங்கொளியெவையுஞ் சுவனநாடனைத்தும்
பூதலம் விசும்புமற்றனவு
மிங்கெழின்முகம்ம தொளிவினிலென்று
மிவர்க்கெதை யுவமைசொல்லுவதே.

இச்செய்யுளில், திலகக்காரர் என்னென்ன கூறினும் எம்மைப்பற்றிய தொன்றுமின்மையான், யாம் வாய்மூடுதும்.

94. மகிதலம்புக ழீசாநபிபாரில்
வந்தநாட் டொடுத்திடைவிடாது
பகுபதமிலையென் றறுநூறாண்டு
பாரிசுக்காரர்கள் வணங்கும்
புகையுடன்கெழுமிப் பொறிபலதெறிப்பப்
புரிந்தெழு மக்கினிக்கொழுந்து
திசைதொறுந்தெரிய வெரிந்தசெந்நெருப்புத்
தேய்ந்துநாட் டழிந்ததுவன்றே.

இச்செய்யுளில், ஆசிரியர், ஈசா நபிபாரில்வந்த நாள்தொடுத்து பாரிசுகாரர் ஆறுநூறாண்டு வணங்கும் நெருப்பு என்றார். எனின்; பாரிசுகாரர் ஈசாநபி பாரில்வந்தநாள் தொடுத்துத்தான் நெருப்பைவணங்கினர் என்பது கருத்தன்று ஆறுநூறாண்டு என்றதற்கு இன்னகாலமுதல் இன்னகாலம்வரையும் ஆறுநூறாண்டெனச் சொல்லவசியமாகலின்; ஈசாநபி பாரில்வந்த



நாண்முதல் நபிபெருமானார்பிறந்த நாள்வரையுமான ஆறுநூறாண்டு என்பதற்காகவே அங்ஙனங்கூறினார். ஆகலின், ஈசாநபி பாரில்வருமுன்னரும், நபிபெருமானார் அவதரித்தபின்னரும், இக்காலத்தும் நெருப்பைவணங்கும் அக்காபிர்கள், ஈசாநபி பாரில்வந்தநாள்முதல் ஒருதானத்தில் இராப்பகலவியாத காடாக்கினியொன்றை ஆலயம்போல வளர்த்துவைத்துக்கொண்டு வணங்கிவந்தார்கள். அது அறுநூறாண்டுவரையும் அவியாதிருந்து, பின் நபிபெருமானார் பிறந்தவன்று நூந்தது என்பதே கருத்து. இதனையறியுந் திறனில்லாத திலகக்காரர், ஈசாநபி பாரில்வந்தநாட்களிலும் வணங்கின நெருப்பென்றும், அக்காபிர்கள் இருக்குமிடமெங்கும் குவியலாகவைத்திருந்த பலநெருப்புகளென்பான்கருதி, அழிந்தன எனப் பன்மையாற் கூறினாரென்றுங் கூறுகின்றார். யாம் மேற்கூறியவேதுவான் இது பொருந்தாமைகாண்க.

அதாஅன்று, பின்னும் அவர் "இச்செய்யுளின்கருத்தறியா வாசிரியனையுள்ளிட்ட மாணாக்கர் படுமிடர் மிக்கமலிவென்க. முதலுரையாரு மிச்செய்யுளை நன்குணராதவராய்—பொருள்கூறி மிடர்ப்படுவர். ஆகவே மஜூசிக்காபிர்கட்குத் தீவணங்குங்கொள்கை ஈசாநபி பாரில்பிறந்தவன்று கிடைத்ததென்பதூஉம் ஈசா அலைகிஸ்ஸலாம் பிறந்த நாண்முதல் நபிபெருமானார் பிறந்தநாள்வரையும் அறுநூறுவருஷமென்பதூஉ மிவர்க்குக் கருத்துப்போலும். இவை பயனில் கூற்றாமென மறுக்க" என்கின்றார்.

இதனைமேல் நிராகரித்தேம். ஆனால், ஈசாநபிக்கும் நயிபெருமானார்க்கு மிடையில் நிகழ்ந்தவருடத் தொகை அறுநூறாமென்பது எமக்கும் ஏனையார்க்கு முடன்பாடாம். அன்றேல், ஈசாநபி பாரில்வந்த நாட்களிலும் நபிபெருமானார் பிறந்தநாள்வரையும் வணங்கின தெருப்பெனின்; எந்த நாண்முதல் அறுநூறுவருடமாமெனனுங் கடாவுக்கு அவர்யாது கூறுவரோ!

95 படியிடைப்புடைப்பப் பெருக்கெடுத்தகிரப்
பாயலைசுருட்டிவிட்டெறிய
விடுகடல்சாவா வெனும்பதியிடத்தில்
வெறுந்தரையாயினவறந்து
குடிலமட்டோங்கி மஞ்சடைகிடக்குங்
கொத்தளமொருபதினன்கு
மிடிபடவீழ்ந்து சேருவானகர
மெங்கணுங்கலங்கியதன்றே.

இச்செய்யுளில், ஆசிரியர்கருத்திற்கும் முதனூற்கு மொப்ப "சவாவெனும்பதியிடத்தின் கடல்பெருகி வற்றிப்பாழ்ந்தரையானது" என, பிரவாகித்தவளவே வற்றிவெறுந்தரையானதாக யாம் பொருள்கூறியுள்ளே மன்றி, அக்கடலேவற்றி வெறுந்தரையானதென்பது, எங்கூற்றுமன்று; கருத்துமன்று இதனைத் திலகக்காரர் அறியாது எம்முரையைப்போலியுரை யென்கின்றார். அவர்க்கு விளங்காதனவெல்லாம் போலியேபோலும்!

96. சிலையெடுத்துருவா வைத்தபுத்தனைத்துஞ்
சிரசுகீழ் படமுகங்கவிழ்த்த
சலமதில்புலீசியற்றியசிங்கா
சனமுமன்றிடிந்ததுஷைத்தான்



குலமுமன்றொருங்கி வானகம்புசாமற்
கூண்டுநக்கேத்திரமெரிந்து
நிலமிசைவிழ்ந்த வினுஞ்சிலபுதுமை
நிகழ்ந்தனவரியவன்றிரவே.

இசசெய்யுளில, உலகத்தில் காபிர்கள்வணங்குதற்கு ஆங்காங்குச் சிலையெடுத்து உருவாவைத்தபுத்துசளனைத்தும் சிரசுகீழ்ப்பட முகங்கவிழ்த்தன என்றும், சலமதில் இபுலீசியற்றிய சிங்காசனமும் இடிந்தது என்றும் மிகத்தெளிவாய் பொருள்விளங்கிநிற்ப, திலகக்காரர் இவ்வரும்பொருள்கலைய அரியசெய்யுளைச்சிரழித்து, இபுலீசியற்றிய சிங்காசனம் பொய்யினாலமைந்ததென்றும், அவ்வாசனம் இடியாமல் அதில்வைக்கப்பட்ட புத்துகளே சிரசுகிழ்ப்பட இடிந்தனவென்றும், ஷைத்தான்குலமும் முகங்கவிழ்ந்தவென்றும் கண்டபடி யுளறுவதுமன்றி, முகங்கவிழ்த்தலை புத்துகளோடுங் கூட்டுவர் முதலுரையாரென்றும், "கடவுளையுட்கொள்ளவிடாது சர்வசூன்ய சகாய ஜகத்ரூபமான வன்னிதாதோற்றத்திற்கேதுவாய ஆட்சிக்குடையான் இபுலீசாகயின் 'சலமதில்யற்றிய சிங்காசனமும்' என்றாராசிரியர். இனி அதற்குக் 'கடல்மேலியற்றப்பட்ட சிங்காசனம் இடிந்தது' எனப்பொருள்கூறுவர் முதலுரையார். கடல்மேலாயதோர் ஆசனம் இபுலீசுக்குளதென்பது வேதாகமக் கொள்கையன்மையான் அங்ஙனம் இபுலீசுக்கு ஆசனமுளதென அவர்க்குப் பயப்பித்த போதகாசிரியரே இடர்ப்பட்டாரெனக்கூறி அவ்வுரைபோலியாமெனமறுக்க" என்றுங்கூறுகின்றார்.

யாம் முகங்கவிழ்த்த வென்றதை புத்துகளோடுங் கூட்டியது உலகத்திற்சேற்காதுதான்! இருக்கட்டும் கடல்மேலாயதோராசனம் இபுலீசுக்குளதென்பது வேதாகமக்கொள்கையன்மையாயின், நிலைபெருததும் சூனியமானதும் அறிவானறியப்படுவதுமாகிய பொய்யினல் நிலைப்படுத்திய சிங்காசனம் அவனுக்குளதென்பது வேதாகமக்கொள்கைபோலும்! ஆயின், அது எந்த ஆகமகிரந்தத்திற்சொல்லப்பட்டுளதோ! அதை அவர் ஏன் குறித்திலரோ! அங்ஙனம் பொய்யினனிலைப்படுத்திய ஆசனத்திற்றன் மலைக்கற்களாற் செய்தபுத்துகள் எவ்வாறுதரிபட்டிருக்குமோ! இவ்வாருக அவர்க்குப்படிப்பித்த ஆசிரியர் "பக்காப்பேர்வழி" போலும்!

அதா அன்று "முதலுரையார் இச்செய்யுட்குப் பொருண் முடிந்தவாறறியாது தமது அறிவிற்கிலக்காய்ச் செய்யுளைத்திருத்திப்போந்தார் அவைஎல்லாமவருரையானேகாண்க" என்கின்றார்.

இலக்கிய இலக்கணத்திற்கிலக்காகச் செய்யுளைத் திருத்தினேமன்றி, அவரைப்போல அறிவிற்கிலக்காகப் புரட்டிலேம். அதனை ஏன் விளக்கிலரோ!

97. சிறந்தநன்மதலை தனைவிரைந்தெடுப்பத்
தெரிவையர்மனந்தனினினைப்ப
மறந்திகழ்விழியார் தொடத்தகாதென்றன்
முகம்மதைவிரைவினிலேந்தி
நிறந்திகழ்சுவனத் தினிற்கொடுவெம்மி
னென்றனனெடியவனதனு
லறந்திகழாமினுத் திரிமனைபுக்
கடுத்தவர்பிள்ளையையெடுத்தார்.



இச்செய்யுளில், நெடியவன் என்பதற்குத் திலகக்காரர் "மனத்திற்கும் புலப்பாடின்றியளத்தலமையாது உயர்ந்துதோன்றுகையான் வந்ததோர் காரணப்பெயரென்க" என்று விதிகூறி, "இனி, அது நீண்டகாலத்தையுடையவன் எனும்பொருட்டு எனபர்முதலுரையார் காலம்கடவுளை யணுகாதென்பது அவரது ஆசிரியரும் பயின்றிலர்போலும்" என்கின்றார்.

ஒருகாலத்தை வரையறுத்து, அக்காலத்தையுடையவன் என்றுன்மாத்திரம் அக்காலம் கடவுளையணுகாது. வரையறுக்காத, அளவிறந்த காலத்தையுடையனெனின்; எங்ஙனமணுகும்? இதற்கு ஆதியும் அந்தமும் இல்லாத தன்மையை யுடையவனெனபது அர்த்தமன்று! இதனை அவராசிரியர் இன்னுங்கேட்டிலர் போலும்!

அதா அன்று மறந்திகழ்விழியார் என்பதற்கு ஒவ்வாமையின்குணம் விளங்கும் பார்வையையுடையாரென்றும், அது அபூஜகில் முதலானோருடைய பார்வைபோன்றவையென்றும் பொருள்கூறினதுமன்றி,

"இக்கருத்தறியாதார் கொலைபுரியும்விழியார் எனவாளாப்பொருள்கூறுவர். இக்கொள்கையே முதலுரையார்க்கு முடன்பாடு" என்கின்றார்

மறியம் ஆசியா இருவர்கண்களும் ஒவ்வாமையின் குணம் விளங்கும் அபூஜகில் முதலானுரது கண்கள் போன்றனவோ! ஆச்சரியம்!! பெண்கள்கண் கொலைவிளங்குவனவென்று வருணனை முகத்தாற்கூறுவது மரபென்றறியா துளறுகின்றார் பேதையர்.

அதா அன்று, "சொடுவம் மின் என்பது செய்யுளாகலின் விகாரவகையாற் கடைகுறைந்து கொடுவம் என நின்றது இனி அதைப் பொருளருமொழியெனக் கருதி கொடுவம்மின் எனப்படுத்தியும் சுவனப்பதி என்பதைச் சுவனத்தினில் எனப் புரட்டியும் போந்தார் முதலுரையார். இவ்வாறு செய்யுளைக் கலைத்துத் தமது சிற்றறிவிற்கேற்பப் பொருள்கூறிப்போதலே யவர்க் கியற்கையாதல்பற்றி மும்மலங்களுங் கழீஇ தெளிந்த பெரியோர் கருத்தெனச் சற்றுமஞ்சாது துணிந்தமையாலாண்டாண்டு மிடர்ப்படுவர், காண்க" என்கின்றார்

அரிய சங்கச்செய்யு ளிரண்டொன்றில் இவ்வாறடிப்பட்டு வந்துளதென்பதும், அது அருகியல்லது, இவ்வித அரியது மின்பமுள்ளதுமான புராணங்களிற் பயின்று வாராதென்பதும் யாம் நன்கறிந்ததே. யாந் திருத்தியது பெரும்பாலும் பயின்றுவந்து விளங்கநின்றிலதென்பதுபற்றியே யன்றி வேறன்று. இதற்கு இத்தனையும்விரித்து இகழ்வது முறைகேடெனபதைக் கற்றோர் கவனிக்க.

98. அமரருக்கிறைவர் ஜிபுறயீல்வரிசை
யகுமதை யெடுத்தினிதேந்தித்
தமருடன்சுவனப் பதியினிற்கொடுபோய்ச்
சலநதி தொறுமுழுகாட்டி
யிமைதிறந்திருகண் மையினையெழுதி
யெண்ணெயிட் டமுதமூட்டிச்
சுமைதரவாசந் திகழ்த்தியெண்டிசையுஞ்
சுற்றியே சிலமொழி பகர்வார்.



இச்செய்யுளில், "நபிபெருமானாரவர்கட்கு ஜிபுறயீல் முதன்மையாக மறையுணர்த்துகையான் குருவென்றறிக. அமரரென்ற பொதுமையான் ஜிபுறயீல் எல்லார்க்குங் குருவாயினாரென்பது கருத்தாயிற்று. இனி, அமரருக்கு இறைவர் ஜிபுறயீல் எனத்திருத்தி அமரர்களுக்கரசராகிய ஜிபுறயீல் எனப் பொருள்கூறுவர் முதலுரையார். ஜிபுறயீல் மலக்குகளுக்கு அரசென்பது வேதாகமவளவை யன்மையான் அப்பொருளா யிழுக்காமெ மறுக்க" என்கின்றார்

நபிபெருமானார்க்கு முதன்மையாக வேதமுணர்த்தினதால் ஜிபுறயீல் குருவென்பது பொருந்தாது. பொருந்துமென்பராயினும், நபிபெருமானார்க்கே குருவென்பது பெறப்படுமன்றி, அமரருக்குக் குருவென்பது எங்ஙனமாம்! எந்த வானவர்க்கு எந்தநூலைப் புகட்டினார்? எந்த உபதேசத்தைப் போதித்தார்? ஜிபுறயீல் அமரருக்கு அரசரென்பது வேதாகமக் கொள்கையன்மையாயின், குருவென்பது கொள்கைபோலும்! ஜிபுறயீலை அமரருக்கு அரசரெனக்கூறும் நூற்கள் எத்தனையோவுள. அவைகளைகாட்டிற் பல்குமென்று விடுகின்றேம். இனி, இறைவன் என்பது குருவெனும்பொருட்டாய் நிற்பினும் பகர்வார் என்றமையான் இறைவர் என யாந் திருத்தியது இழுக்கன்றாம்.

அதா அன்று "இனி, சுவர்க்கத்தில் தேனதி பானதி சுராநதி சலநதி என நான்கு நதிகளுண்மையான் நதியெனப்பொதுப்படக்கூறாது சலநதி எனப்பிரித்துக்கூறினார். எனக்கொண்டு அதை 'நீரையுடைய ஆறு' எனப்பொருள்கூறுவர் முதலுரையார். முழுகாட்டியென்

றும் நதிதொறும் என்றுங்கூறினமையானே நீரையுடையாநதி என்பதூஉம் அந்நதி பலவாயின வென்பதூஉம் தெற்றெனத்தோன்று மாகையால் குளிர்ச்சிபொருந்திய ஆறெனத் தோற்றுவிப்பான் சலநதியென்றாரல்லது அவர்கூறியவாறன்றெனமறுக்க" என்கின்றார்.

முழுகாட்டியென்பதும் நதிதொறுமென்பதும் சலநதியென்பதை யுணர்த்துமென்று, சலநதியென்பதைக் குளிர்ச்சிநதியெனக்கோடல் தவறுமென்பதைக்கவனிக்க.

99\. ஆதிநாயகன்றன் திருநபியிறசூ
லாமிவர்தங்கலிமாவைப்
பூதலத்துறைந்த படைப்பெவையவையும்
போற்றுதல்வேண்டுமென்பதுவு
மீதலாலமரரிவர்கலிமாவுக்
கிசைந்தனரென்பதுமுரைத்துச்
சூதரமொழியா ராமினவிடத்திற்
றோன்றலைக்கொடுத்தகன்றனரே.

இச்செய்யுளில், சரலிகித வழுக்கலந்து "போற்றுதல்வேண்டும்" "இசைந்தனரென்பது மிசைத்து" என வினைமுடிபுபெற்றுப்பொருள் பயவாது நிற்பதால், "போற்றுதல்வேண்டுமென்பதுவும், இசைந்தனரென்பதும் இசைத்து" எனத்திருத்தியவெம்மைத் திலகக்காரர் பழித்து,

போற்றுதல்—வளர்த்தலை, செய்யவும்—தமக்குத்தொழிலாகக்கோடலும், வேண்டும்—கடமையாமென்பதையும் என்று பொருள் கூறுவதுமன்றி,



"இவ்வாறு ஒட்டிப்பொருள்கூறவறியா முதலுரையார் உரைகூறப்புகுந்தது இழுக்கு ஆகலின் அவர் செய்யுளைத்திருத்தி வாளாப்போவர். அன்றியும் இசைத்து என்பதை உரைத்து என்றுந் திருத்துவர். இத்திருத்தலுக்குக் காரணம் என்னுதல்வரோ வறியேம்" என்கின்றார்.

யாங் கூறியவாறு கூறப்புகுந்தது இழுக்கென்பதும், திருத்தியதற்குக் காரணங்கூறவறியாது கலங்குவமென்பதும் கற்றோர்க்கு விளங்கும். ஆகலின் ஈண்டுவிளக்கிலேம்.

100\. அந்தரமவனி கடன்மலையெழுதீ
வகத்தினு மெண்டிசைமுழுதுஞ்
சுந்தரவதன முசம்மதைக்கொடுபோய்ச்
சுற்றியெங்கணும் பெயர்விளக்கிச்
சந்தமென்முகத்தா மரைமலர்குளிரத்
தடஞ்சிறை வானவர்திரண்டு
வந்துதுமாமினத் திருமனையில்
வைத்தது மொருநொடிப்பொழுதே.

இச்செய்யுளில், தடஞ்சிறைவானவர் என்பதற்கு அகன்ற சிறையையுடையவானவரென்று யாம்பொருள் கூறியதனைத் திலகக்காரர் மறுத்து, பெருமைபொருந்திய சிறையையுடைய வானவரென்று பொருள்கூறுவதுமன்றி,

"ஓர்பெரிய அளவினதாய்விரிந்துள்ளவஸ்துவை அகன்றதென்பாரேயன்றி அடங்காதகலு மாற்றலுடை

யதோர் வஸ்துவை அசலமென்றாசிரியராகலின்" எ
ணக்காரணங்கூறுகின்றார்.

ஜிபுறயீலினது சிறையை அகன்றசிறையெனிற் ப
டுமிழுக்குப் பெரிதெனக் கருதினர்போலும்பேதையர்.
இதனைக்கேட்டறிவாராக.

அதாஅன்று "இச்செய்யுட்கு முதலுரையார் கூ
றுவனவெல்லாம் முற்றமுராணதல்பற்றி எடுத்துக்கூறி
மறுத்திலம்" என்கின்றார்.

இவ்வாறே முன்னருங்கூறியுள்ளார். அதற்குயாங்
கூறியுள்ளதையே ஈண்டுங்கொள்க.

101. வள்ளலென்றுதவிப் பெயர்நிலைநிறுத்தி
வளந்தரும்புகழபுல்காசி
முள்ளகநிறைந்த செம்மலர்ப்பதந்தொட்
டொளிபெறுமிணைவிழிக்கேற்றி
விள்ளரும்பவளம் விரிந்தனகனிவாய்
விளங்கிடவாழ்த்தெடுத்துவந்து
தெள்ளமுதனைய முகம்மதுநபியை
சபாதிருமடிமிசைக்கொண்டார்.

இச்செய்யுளில், வளந்தரும்புகழ புல்காசிம் என்பு
ழித் தரும்புகழென்பதைத் தருபுகழெனமாற்றி, அத்த
ருவென்பதை மரமெனக்கொண்டும், உள்ளகநிறைந்த
செம்மலர்ப்பதம் என்பதை, உள்ளகம் செம்மலர்நிறைந்
தபதம் என்று பிறழ்த்தியும் இலகக்காரர் மாழ்குவது
மன்றி,



"இச்செய்யுளினும் பொருண்முடிந்த வாறறியாது
முதலுரையார் வாளாப்போந்தமையா னெடுத்துக்கூறி
லம், அவருரையானேகாண்க" என்கின்றார்.

இப்படலத்துச் செய்யுட்களத்தனையிலும் பொ
ருண்முடிந்தவாறறியாது யாம்வாளாபோயினது கற்
றோர் எவரும் நன்கறிவர். அவர் அறிந்துகூறுவதை
மாத்திரம் உலகம் மதிப்பது எமக்குச்சந்தோஷமே.

102. மலர்தருகரத்தா லேந்தியேம்டியில்
வைத்தினி திருக்குமந்நேர
மலர்தரும்பவள வாயிதழ்திறந்தே
யமுதனர் முகம்மதுநபியு
முலகமும்விசும்பு நிறைதரப்பொருந்து
முடையவன் சத்தமுண்டான
இலகியகமல முகமலர்சபாவுக்
கிறகுமத் துண்டாகவென்றிசைந்தே.

இச்செய்யுளில், நபிபெருமானை மடியிற்கொ
ண்ட நிமித்தம் சபாவுக்கு றகுமத்துண்டாக என்று
சத்தமுண்டானது எனத் தெளிவாய்ப் பொருள்விளங்
கிநிற்ப, இலகக்காரர் அதனை மாற்றி, றகுமத்து முகம
மதுக்கு உண்டாகவென்று சபாவுக்குச் சத்தமுண்டா
னது எனப்புரட்டிக்கொண்டு, நபிபெருமானர் அழுத
மையான் கடவுள் அக்குறிப்பறிந்து மங்களமொழியோ
துகவென ஜிபுறயீலுக்குரைப்ப அவர்கூறிய அச்சத்
தத்தை சபாகேட்டாரென்றும், நபிபெருமானர் தும்
மினர்; அதற்கு அவ்வாறோத சபாகேட்டாரென்றும்
கூறி,

"இக்கருத்துகளை யறியாத போலிவித்துவான்கள் முதனூலோடுமுரணித் தங்கருத்துக் கிலக்காய்ச் சபாவுக் கிறகுமத்துண்டாக எனச் செய்யுட்கிடந்தவாறே உரைகூறி யிடர்ப்படுவர். இதுவே முதலுரையார்க்கு முடன்பாடு" என்கின்றார்.

ஆயினும், இவ்வித அரும்பொருளைத் தெளிவாய் விளங்கவமைத்துச் செய்யுட்செய்யாது, சபாவுக்கு றகுமத்துண்டாகவென்று நான்கனுருபை சபா மீதுவிரித்துக் கூறவேண்டியதென்னை? அந்நான்கனுருபிற்குப் பொருந்துமாறு சபாவுக்குச் சத்தமுண்டானதெனின்; முகம்மதுநபி யழுதனர் அவர்க்கு றகுமத்துண்டாக என சபாவுக்குச் சத்தமுண்டானதென்றோ இருத்தல் வேண்டும்? இங்ஙன மின்மையான், இது மயங்கவைத்தல் என்னுங் குற்றந்தருமன்றோ? ஆகலின், ஆசிரியர் இங்ஙனம் குற்றப்படச்செய்யுட் செய்திலர். நபிபெருமானை சபா மடிமீதுகொண்டதால் இவ்விதத்தொனி பிறந்து, அங்ஙனமே சபா றகுமத்தைப்பெற்றதாலன்றோ உடனே அவர்க்கு மஷ்றிகுதொடுத்து மகுறிபுவரைக்குந் தெளிவாய்த்தோற்றி, றூமிராச்சியத்து மாளிகைகளும் தெரிந்தன? ஆசிரியர் இக்கருத்தானே செய்யுட்செய் திருக்கின்றாரென்பதை அவர்கூற்றானேயறிக.

இது திலகக்காரர் கூற்றிற்கு நிராகரணமாம். ஆயினும், எம் உரை அவர் கூறுமாறன்று. "முகம்மதுநபி யழுதார்கள். அவர்களழுதமாத்திரத்தில், கடவுளது சத்தமொன்று சபாவென்னும் பெண்ணுக்கு, 'றகுமத்து உண்டாக' என்று உண்டானது" என்பதேயாம். ஆகவே, அந்த றகுமத்து முகம்மதுநபிக்கு, அவரழுத



மையால் உண்டாகவென்று சபாவுக்குச்சத்த முண்டானது என்பது கருத்தாம். இதனையுய்த்துணருந் திறனற்றவர் சபாவுக்கு றகுமத்துண்டாக எனக்கூட்டித்தடுமாறுவரே. இது பற்றியன்றோ "சத்தமுண்டாகிக்கேட்டவப்பொழுது" என்புழியும், மேற்சொன்னசத்தமானதுண்டாய் சபாவினது செவிகளுக்குக்கேட்ட அந்த நேரத்தில்" என்று கூறியிருக்கின்றேம். கவனித்துக் கருத்தூன்றிப்பார்க்க.

அதா அன்று, "அணுவினும் மலையினும்தனதுதத்துவம் ஒரேதன்மைத்தனவாய்ப்பொருந்தி விளங்குமகத்துவமுடைய கடவுளென்பது தோன்ற 'உலகமும்விம்பு நிறைதரப் பொருந்துமுடையவன்' என்றார். இக்கருத்தறியாது உலகமும்விசும்பு நிறைதரப்பொருந்துமுடையவன் என்றற்கு 'ஈண்டு யாங்கூறியதே முடிபன்று' என நழுகவிடுவர் முதலுரையார். இவ்விடத்தும் தமது அறிவிற் கிலக்காய்ச் செய்யுளைத்திருத்தி ஓர் முடிபு கூறுதுபோதல் இவரதியற்கைக்கு முரணாயினும், 'குணநாடி' என்ற வள்ளுவர்க்கிலக்காய்ப் பொறுத்தருள்க" என்கின்றார்.

அவர் ஈண்டுக்கூறுமாறு செய்யுட்குரைகூறுமிடத்துங்கூறியொழியாது "பூலோகத்திலும் வானலோகத்திலும் அமர்ந்திருப்பவன்" எனக்கூறியதைக் குற்றமென்றுகற்றிலர்போலும்! அது பலவாறுபொருள்பயக்குமாகலின், யாங்கூறியதேமுடிபன்று; அறிஞர் பின்னும்பொருள் விரிப்பரென்றுகூறினேமன்றி, நழுகவிட்டிலேம். ஒருசெய்யுள் இலக்கணத்திற்குமாறாய் நேரே பொருள்பயவாது நிற்பினன்றோ யாம் அதைத்திருத்

டு முடிபுகூறுவேம்? எல்லாச்செய்யுளையுந் திருத்தவில்லையென்று கூறுகின்றாரே. நிமித்தம்யாது? இவற்றைக் கற்றோர் கவனிக்க.

103. சத்தமுண்டாகிக் கேட்டவப்பொழுதே
சபாவெனுமடமயிறனக்குப்
பத்திவிட்டொளிரு றாமிராச்சியத்துப்
பதியின்மாளிகையெலாந்தெரிந்து
மித்திரனெழுந்த குணதிசைதொடுத்து
வீழ்தருகுடதிசைவரைக்குஞ்
சித்திரம்பெறவே யிருவிழிக்கெதிரே
தெரிதரச் சிறந்தனவன்றே.

இச்செய்யுளில், குணதிசைதொடுத்துக் குடதிசை வரைக்கும் இருவிழிக்கெதிரேதெரிதர எனற்பாலது, குணதிசைதொடுத்துக் குடதிசைதொடுத்து எனக்காபிதவழுப்பட்டுப்போந்ததென யாந் திருத்திப்பொருள் கூறினேம். திலகக்காரர் அதனைமறுத்து, தமக்கியைந்தவாறு திருத்திப்பொருள்வரைந்து வாளாப்போவர்முதலுரையாரென்றும், மஷ்றிகுதொடுத்து மகுறிபுவரைக்கு மொருங்குதோற்றியதெனுங்கருத்து ஆசிரியர்க்குளதேல் றாமிராச்சியத்துப் பதியின்மாளிகையெலாந் தெரிந்து என விதந்தும் ஓதல்வேண்டாவென்றும், சிறப்புப்பற்றி வேண்டுமெனின், இருவிழிக்கெதிரே யென்றமையான் மஷ்றிகு மகுறிபு அடங்க இருவிழிக்குமுன்னிலையாதல் சூனியமென்றும் பலவாறுகூறி, குணதிசை தொடுத்துக்குடதிசை தொடுத்து எனக்கிடந்தபடிவைத்துக்கொண்டு, கீழ்த்திசையையணிந்து மேற்குத்திசை



யையச்செலுத்திப் பிரகாசிக்கும் இஸ்தக்தனிய்யாவின் கொலுமண்டபம் என அதற்குப்பொருளும் விரிக்கின்றார்.

அம்மாளிகை தெரிதற்காகவே மஷ்றிகுதொடுத்து மகுறிபுவரைக்கும்மறைபாடின்றிவெளியாய்த்தோற்றி, பின்மாளிகைதெரிந்தனவென்பதை அறியார் போலும்! உலகம்முழுவதையும் ஒருவர் விழிக்கெதிர்தோற்றுவிக்க வல்லகடவுள்செய்யுமிடத்து, அங்ஙனமாதல் சூனியமென்பது பேதைமையன்றோ? அல்லதூஉம், இருவிழிக்கெதிரே அம்மாளிகைகளோ தெரிந்துசிறந்தனவென முடிப்பினுமமையுமே.

அதாஅன்று, சபாவெனும் மடமயில்தனக்கு என்புழி மடமயில் என்பதற்கு இளமான் என வயிரம்பாய்ந்த வித்துவானாகிய அவர் பொருள்கூறுகின்றார்.

மயிலை மான் என்று அர்த்தம்பண்ண யாண்டுக்கற்றனரோ பேதையர்!

104. வரியளிகுடைந்து தண்ணறுவருந்து
மலர்ப்புயத்தப்துல்முத்தலிபு
கருதியவரங்கேட் டிருந்துநெஞ்சுருகுங்
காலையிற்கருபத்துல்லாவி
னிரைநிரைசெறிந்த புத்துகளனைத்து
நெட்டுயிர்ப்பொடுகலைந்தலைந்து
விரைவினிலோடிக் காவதவழிக்கு
வேறுவேறாய்க்கிடந்தனவே.

இச்செய்யுளில், திலகக்காரர் ஒருபடியாயுரைகூறி, யாந்திருத்தியதற்கு யாதும்பேசாது ஒழிந்தமையான், யாமும் ஒன்றுங்கூறிலம்.

105. பானலங்கடந்து சேலெனப்பிறழ்ந்து
பரந்துசெவ்வரிக்கொடியோடி
மான்மருள்விழியா ராமினாவிருந்த
வளமனைத்திசையினை நோக்கி
கானிலம்புகலுங் கருபத்துல்லாவி
னாலுமூலையுமொருநெறியாய்த்
தூநறைகமழ வொளிதிகழ்தரவே
சுஜூதுசெய்தெழுந்தனவன்றே.

இச்செய்யுளில், திலகக்காரர் எம்மையொன்றுங் கூறிலராயினும், பானலங்கடந்து என்பதற்குக் கருங்குவளைப் பூவினழகைக்கடந்து மேற்கொண்டு என்பதே எல்லார்க்கு மொப்பமுடிந்தபொருளாயிருப்ப, அவர் "அழகிய கருங்குவளைமலரைத் தமக்குவமேயமாய்ப்படுத்தி" எனப்பொருள்கூறி, செவ்வரிக்கொடியோடியதை ஆமினாவின்கண்கட்கு ஆசிரியரமைத்திருப்ப, மானின்கட் கட்கமைக்கின்றார். இவற்றைக்கற்றோர் ஆராய்க.

106. இறையவனேவ விண்ணவர்கரத்தா
லியற்றியமணிமதிட்சகுபா
மறைபடாதெவர்க்குங் கேட்பனவாக
வாய்திறந்தோதுவபோன்று



குறைபடாவடிவும் பெருமையும்பெற்ற
சொற்றவனென்றனையின்றே
நிறைதரப்புனித மாக்கினானென்ன
நிகழ்த்தியதொருமொழியன்றே.

இச்செய்யுளில், மணிமதிட்சகுபா என்பதற்கு "மணிகளிழைத்த மதிலையுடைய சகுபா என யாம் பொருள்கூறியிருப்ப, திலகக்காரர் 'முத்துகளையுடைய சுவர் என்பர் முதலூனாயார்" என்று பொய்சொல்லிவிட்டு, நன்மைபயக்குஞ் சுவர் என்று பொருள்கூறுகின்றார்.

யாஞ் சொல்லாததைச் சொன்னதாக இங்கன்றி முன்னுஞ் சொல்லியிருக்கின்றார். அச்சிட்டுப் பலர் கையிலுமிருக்கும் புத்தகத்தில் யாஞ் சொல்லாததனைவற்றைச் சொல்லி யிருக்கின்றேமென்று எழுதி அச்சிட்டுப் பரப்புதல் நியாயவிரோதமென்பதை அவர் அறிந்திலர்போலும். மணியென்பது முத்தைத்தானென்று அவராகவைத்துக் கொண்டார்போலும் பேதையர்!

அதான்றி, ஒருமொழியென்புழி ஒரு என்பதை ஒப்பற்றவெனக்கொண்டு "இக்கருத்தறியாது ஒரு என்பதை எண்ணுப்பெயராய்க்கொண்டு 'ஒரு சொல்' என உரைகூறுவாருமுளர்; முதலூனாயாருமது" என்கின்றார்.

ஈண்டு அது ஒருவாக்கியத்தை யுணர்த்திநிற்பதாகலின், ஒப்பற்ற சொல்லாயிருப்பினும் எண்ணுப் பெயராகவே ஒரு என்பதையமைத்தா ராசிரியரென்றறிக.

அதாஅன்று, குறைபடாவடிவும் பெருமையும் பெற்றகொற்றவன் என்புழி, வடிவென்பதை யாம் அழகென்று கூறியதை மறுத்து என்னென்னவோ சொல்லி, தனக்குத்தானே யறியப்பட்டடங்கும் உருவம் என்று பொருள்கூறி, தேவர்களும் ஜின்னுதிகளும் அரூபிகளாகலின் கடவுளை அரூபி எனலும் பொருந்தா தென்று அறிந்திலர்போலு மென்கின்றார்.

வேதநூலார் குறிப்பிட்டதாக அவர் சொல்லும் உருவம் உருவமல்ல "கலக்க ஆதம் அலாசூறத்திகி" என்பதிலுள்ள சூறத்து என்பதை உருவமென்று அவர் அர்த்தம் பண்ணுகின்றார். சூறத்து என்றது உருவத்திற்குப் பெயராயிருப்பினும் அது ஈண்டு ஸிபததாகும். ஸிபத்து என்பது வருணனையாம். இதன்விவரத்தை நல்லாசிரியரை யுள்ளிட்டுக் கற்பாராக.

இன்னும், மலக்குகளையும் ஜின்களையும் அரூபிகளென்கின்றார். மலக்குகளும் ஜின்களும் அரூபிகளே யல்லர்; ரூபிகளாவர். இது எவர்க்கும் தெளிவாய்த் தெரிந்ததே. பின் அவ்விருதரத்தாரும் கண்ணுற்காணக் கூடாதாராகலின், அரூபிகளென்கின்றார்போலும் பேதையர்! இதுபற்றிக் கடவுளை அரூபியெனற் பொருந்தாது; ரூபியென்றே சொல்லல்வேண்டு மென்கின்றார். கடவுளைரூபியென்றே சொல்லுதலுக்கும், ரூபியென்பதாகாதென்பதற்கும் உலகிலுள்ள திருட்டாந்தங்களனைத்தும் சாட்சிபகரும். அவர் எந்த ஆசியரை வழிப்பட்டாரோ!

அதாஅன்று "அழகெனல் கடவுண்மேலே பொருந்துமென வவரோதியகாரணத்தை மறுத்து அக்



கொள்கையையொழிக" என்கின்றார். "இன்னல்லாஹ ஜமீலுன் யுஹிப்புல் ஜமீல்" என்ற ஹதீதிற்கு, "அல்லா அழகானவன்; அழகையுகப்பான்" எனப்பொருள் கூறியிருப்பதை யாதுசெய்வரோ பேதையர்!

அதாஅன்று, "இதுவேயுமன்றி 'ஈண்டு அழகென்றது ஜமாலையும் பெருமையென்றது ஜலாலையும் என்றறிக' என்பர். ஜலால்ஜமால் என்பன வேதபாடையாகலின் அங்ஙனம், தலையிடல் தமதாசிரியர்க்கு முடன்பாடன்றென்பதைத் தெற்றெனவிளக்கினர்" என்கின்றார்.

வேதபாடையில் தலையிடல் அவர்க்கும், அவராசிரியர்க்குமே யுடன்பாடாயின், ஏனையர்க்குடன்பாடாகா; அல்லது எமக்கும், எம்மாசியர்க்கு முடன்பாடாகாவென ஏன் அவர்சட்டலை பிறப்பித்து வெளிப்படுத்திலர்? இதென்ன பேதைமை! அப்பாடைக்குரியார் அவரேபோலும்!!

அதாஅன்று, "ஜலால் ஜமாலென் றோதவேண்டிய ஆசிரியர் வடிவும் பெருமையுமென்றார், என்பது கருத்தாயினுந் தெற்றெனப்பொருண்முடி புறுமைபற்றி அக்கூற்று இழிபாமெனமறுக்க" என்கின்றார்.

அவர்க்குத் தெற்றெனப்படாதனவெல்லாம் இழிபுபோலும்! தெற்றெனப்படாவாயின், எம்மையொத்த ஆசிரியர் மாட்டடங்கியிருந்து கற்பதன்றோயுத்தி!

107. இரவினிற்றனித்தங் கிருந்தகாலையினி
 லியற்றிய புத்துகளனைத்தும்
பரவியேசிதறக் கண்டதுங்ககுபா
 பண்புற சுஜூதுசெய்தியல்பா
விரைவினின்மொழிந்த வார்த்தையுங்கேட்டு
 வெருவியே யப்துல்முத்தலிபு
முருகுகொப்பளிக்கு மாமினுமனையின்
 முழுமணிவாயில்வந் தடுத்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் எம்மைச் சாடாத தால், யாமும் அவரைப்பற்றி ஒன்றும் பேசிலம்.

108 தரையினிற்படர்ந்த குபிரிருட்குலமுஞ்
 சாற்றிய கலியிருட்குலமும்
வரைவிலாதொடுங்க முகம்மதுநபியும்
 மானிலத் துதித்தனரென்றே
கரையிலாவுவகை யாநந்தவெள்ளக்
 கடலிடைக் குளித்துறக்களித்து
விரைவினிற்றிமிரக் கடற்பகைதுறந்து
 வெய்யவன் கதிர்கள்விட்டெழுந்தான்.

இச்செய்யுளில், கலியிருட்குலமும் என்புழிக் கலியென்றதை யாம் வறுமையென்று கூறினேம். திலகக்காரர் அதனைமறுத்து, கலியுகமென்கின்றார்.

தரையினிற் படர்ந்த குபிரிருளென்பதே ஆதிதொட்டு அந்தம்வரையுமுள்ள குபிரிருளென்பதும், அவ்விருளேயொடுங்க நபிபெருமானுதித்தன ரென்பதும் போதருமாகலின், தரையினிற் படர்ந்த இருள்வேறு, தரையினிற்படராமல் எங்கேயோபடர்ந்த கலியுக விருள்வேறாகப் பொருள்கூறுதல் ஆசிரியர்க் குடன்பாடாகாதென்றறிக.



யாம் வறுமையென்ற கலியாவது, தம்மைத்தொடர்ந்தாரது வறுமையாம். அதனை சல்மான்பாரிசுக்குப்பொற்கட்டியும் ஒருபிடி ஈத்தங்கனியும் கொடுத்தும், சாபிறுகொண்டிருந்த கடன்தீர்த்தும் ஒடுங்கச்செய்தமையானும், பிறவாற்றானும், காண்க.

அதா அன்று, நபிபெருமானார் தரையினிற்படர்ந்த குபிரிருளையொடுக்க அத்தரையிலேயே உதித்தனரென்பான்வேண்டி மாநிலத்துதித்தனர் என்றாராசிரியர். அதற்கேற்ப மாநிலம் பெரியபூமியென யாம்பொருள்கூறினேம்.

அவர் " நபிகளுதயகம் உதயஞ்செய்ததலம் இத்தன்மைத்தது என்பான் மாநிலமென்றாரல்லது பூமி எனுங்கருத்தினரல்ல ராசிரியரென்க " என்கின்றார். இதனைக்கற்றோர் நிதானிக்க.

109. விடிந்தவப்பொழுதி லப்துல்முத்தலிபு
 விரைவினிலாமினுவென்னு
மடந்தையைக்கூவி வருகவென்றுரைப்ப
 மடமயில்பெடையெனவெழுந்து
நடந்தெதிர்வரக்கண் டம்மநின்னுதலி
 னலங்கிளர்பேரொளியொன்றுண்
டிடந்திகழ்ந்திலங்கக் காண்கிலேனென்ன
 வின்றனன்மகவெனவிசைத்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் ஒன்றையும்விபரீதப் படுத்தி, எம்மையுமிகழ்ந்து வைக்காவிடினும், ௱௩-வது செய்யுளில் வந்த மடமயில் என்பதை இளமான் என்றவர் இங்குவந்தமடமயிலை இளமயில் என்கின்றார். அந்த மயில் ஆமினாவுக்கன்றி, சபாவுக்காளாமையான் மானென்றார் போலும்பேதையர்!

110. வஞ்சிமென்கொடியின் முகமலர்க்கவினை
மருங்கினில்விசித்தபட்டுடையுங்
கஞ்சமென்மலர்த்தா ணிலம்புடைபெயர்வுங்
கமழ்தருமெய்யினிற்குறியும்
பிஞ்சுநன் னுதலுங் கண்டுளத்தடக்கிப்
பெற்றவாறென்கொலென்றெண்ணிக் [ன்
கொஞ்சுமென்மொழியாய் மதலையைக்கோணர்கெ
றுரைத்தனர்குளிர்மழைக்கொடையார்.

இச்செய்யுளில், திலகக்காரர் முகமலர் என்பதற்கு முகத்தின்கண்மலர்தலாகிய எனப்பொருள்கூறி,

“ இனி, முகமலர் என்புழிமுகமாகியதாமரைமலர் என்று உரைகூறுவர் முதலுரையார். தாமரையை ஈண்டுப்பாதத்திற்கு வமித்திருத்தலால் அங்ஙனமே முகத்திற்கு முவமானித்தல் ஆசிரியர்க்குடன்பாடன்றென்க ” என்கின்றார்.

* “ திருமுகங்கமலம் ” என்றசெய்யுளில், முகம், விழி, வாய், கை, கால் ஆகிய இவ்வுறுப்பனைத்திற்குங் கமலத்தையே யுவமையாக்கிக் கூறியிருக்கின்றதே அதற்குயாது செய்வாரோபேதையர்!

* தணிகைப்புராணம்.



அதா அன்று, மொழியாய் என்னும்விளிமொழியீர் எனமாறிக்கிடந்ததோர்ந்து திருத்தி யாம் பொருள்கூறியிருப்ப, அவர் அதனை மென்மொழி என அன்மொழித் தொகையாய் நிற்கின்றதென்றுகருதி அண்மைவிளியாக வைத்துக்கொண்டு, ஈர் என்பதனைப்பிரித்து மதலைக்கு அடையாக்கி ஈர்மதலையெனவமைத்து, மனதைப்பிளக்கும் மதலை என்று பொருள்கூறி,

“ இக்கருத்தறியாது முதலுரையார் மொழியாய் எனச்செய்யுளைத்திருத்தித் தவறுரைவரைந்து போந்தார் ” என்கின்றார்.

தனக்கு மூக்குப்போனாலும் போகட்டும்; எதிரிக்குத் துற்சகுனமாகுக என்று மூக்கையறுத்துக்கொண்டான் கதைபோலத் தமக்கிழிபு வந்தாலும் வரட்டுமென்று எம்மை மறுக்கவந்த அவர், நூலாசிரியர்க்கும் இழிபுசற்பிக்கின்றார் எங்ஙனமெனின்; நபிபெருமானாராகியமதலைக்கு அடைமொழிகொடுக்கும் ஆசிரியர் மற்றோர்சிறந்த அடைமொழியையறியாது ஈர்மதலையென அமைத்தாரென்னும் இதனானும், பிறவானுமென்க.

111. கூறியமொழிகேட் டாமினாவெனது
குமரனை மூன்றுநாள்வரைக்கும்
வேறொருவருக்குங் காட்டொணாதெனவே
விண்ணவ ருரைத்தனரென்றே
யூறியமதுர வாயிதழ்திறந்தே
யோதினா ரப்துல்முத்தலிபு
சீறினர்புருவ முரிதரவிருகண்
டீப்பொறி தெறித்திடச்சிவந்தே.

இச்செய்யுளில், எனது குமரனை வேறொருவருக்கும் காட்டொணாது என விண்ணவருரைத்தனர் என்பது, இங்ஙனமே நில்லாது, வேறொருவருக்குங் காணொணாதென விண்ணவருரைத்தனர் என நிற்பதோர்ந்து, வேறொருவருக்குங் காட்டக்கூடாதென்று ஆமினாவுக்கு விண்ணவர் கட்டளையிட்டமையால், அது காட்டொணாதென்றே யிருத்தல்வேண்டும் அன்றி, காணொணாதென்றிருப்பின், வேறொருவருக்குமென நான்கனுருபுவிரிந்த வேற்றுமைத்தொடராகாது. வேறொருவம் காணொணாதென எழுவாய்த்தொடராய் நிற்றல் வேண்டுமென்னும் விதிபற்றி, காட்டொணாதென உருபுநோக்கிப் பிறவினையாக யாந்திருத்தினேம் திலகக்காரர் வேறொருவருக்கும் என்ற நான்கனுருபு மூன்றனுருபின் பொருளிடத்து வந்ததெனக்கொண்டு, வேறொருவராலுங்காணொணாது எனப்பொருள் கூறி,

"இக்கருத்தறியாத முதலுரையார் 'காட்டொணாது' எனச் செய்யுளைத் திருத்திப்போந்தார். அங்ஙனமாகுமேல் நபிபெருமானா ரவர்களின் றகைமைமிக்க விழுக்கியுறுமாதல்பற்றி அவருரையை ஒதற்க" என்கின்றார்.

எனது குமரனை ஒருவராலுங்காணொணாதென்றால், உம்மாலுங்காணொணாதென ஆமினா சொன்னதாகப்பொருள்படுமன்றி, உமக்குங்காட்டொணாதென்று தடைப்பொருள்படுமா? உமக்குங்காட்டொணாதென்பது தோன்றவன்றோ வேறொருவருக்குங்காட்டொணாதென ஆமினாசொன்னார்? அதுபற்றியன்றோ அப்துல்முத்தலிபுக்குக்கோபம்பிறந்தது? இதனைவிளக்கிக்கூறிய எம்மு



ரையான் நபிபெருமானாரது தகைமை யிழுக்கியுறுத லெங்ஙனம்? இதனைக்கற்றோர் ஆராய்க.

அதாஅன்று, விண்ணவருரைத்தனர் என்பதற்கு, நபிபெருமானாரைத் தூக்கிச்சென்று செய்யவேண்டியன செய்து, மீண்டுகொணர்ந்து ஆமினாவிடங்கொடுத்துப்போந்தவர் ஜிபுறயீலாகலின், அச்சொல்லை அவரே சொல்லிக்கொடுத்துப் போந்தாரென்பது மிகத்தெளிவாய்த்தெரிதல்பற்றி, ஜிபுறயீல்சொன்னாரென்று ஆமினா சொன்னதாக உரைகூறினேம்.

அவர் "அது ஆமினாவினது கூற்றாகலானும், ஜிபுறயீலை ஆண்டு யாருமறியாராகலானும் அவருரை அறியாமை என்க" என்றுகூறித் தள்ளிவிட்டு, தேவர்கள் சொன்னார்கள் என மௌனமாகவே யுரைகூறுகின்றார். இதனையும் கற்றோர் கவனிக்க.

112. சினந்தமாதுலரைக் கண்டுளம்பதறிச்
சேயிழையாமினா திகைத்துக்
கனந்தருங்கொடையீ ரசர்நாயகமே
கருதலர்க்கசனியே நுந்த
மனந்தனிற்சினமென் மனையுநும்மனையே
மகவுநும்மகவினன்மகவே
யினந்தரும்பலன்போ லெழுந்தசந்ததியை
யெடுமிலம்புகுமென விசைத்தார்.

இச்செய்யுளில் ஆசிரியர், சினந்தமாதுலரைக்கண்டு என இரண்டாவது விரித்துக்கூறியிருப்ப,

திலகக்காரர், "மாதுலவரை மாதுலரது, கண்டு—குறிகளைநோக்கி என" இடருழப்பது மன்றி, கனந்தருங்கொடையாய், அரசர்நாயகமே, கருதலர்க்கசனியே என்னும் விளிகளையுஞ்சிதைத்து, கனந்தருங்கொடையாய் வரும் பிள்ளையெனக் கூட்டிக்கொண்டு, அதை யாம்விளியாக்கொண்டு திருத்தினதைப்பற்றியிகழ்ந்து, பொருள் கேடுறவல்லது திருத்தேமென்கின்றார்.

சரி; யாம் செய்யுளிற்பொருள் கேடுறத் திருத்துவேமன்றி, பொருள்கேடறத்திருத்தேமேயாம். இதனால், அவர் வாய்க்குச்சர்க்கரைபோடுதும்.

அதாஅன்று, மகவினின்மகவே என்றிருந்ததனை, மகவினன்மகவேயென யாந்திருத்தினேம். அது * "இன்னெனவரூஉம் வேற்றுமையுருபிற் கின்னென்சாரியை யின்மைவேண்டும்" என்றவிதிபற்றியதாம்.

அவர் மகவினது இனியமகவெனப்பொருளமைத்துக்கொண்டு, இனிப்புமகவென்பது இன்மகவெனச்சாரியையும் விகுதியுங்கெட்டு நின்றதென்றும், "சாரியை விகுதிதான்கெட லுரித்தே" என்றவிதியை யறிந்திலமென்றும், எமதறிவிற் கிலக்காய்த்திருத்தினேமென்றும் பழிக்கின்றார்.

அகத்தியம் பன்னீராயிரஞ்சூத்திரங்களையுங் கரைத்துக்குடித்துத்தானே அவர்வயிரம்பாய்ந்த வித்துவானாயினார். போலிவித்துவானனை யாம் எங்ஙனமறிவம்! அவர் கூறும் இனிப்புமகவென்பதினும் யாங்கூறும் நன்மைமகவென்பது இழிபுபோலும்!

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புணரியல், ௨௯-வது, சூ.



113. மருமலர்செறிந்து வண்டுகண்படுக்கு
மஞ்செனுங் கருங்குழன்மடந்தை
தருமுரைகேட்டு வெகுளியைப்போக்கிச்
சசிமுகமலர்ந்தகங்குளிர்ந்து
பருதியொத்திலங்கு மாளிகைபுகப்போய்ப்
பார்த்தனர்வாயிலுளொருவ
ருருவியசுருவி கரத்தினிலேந்தி
யுறக்கிடவெருக்கொடுமீண்டார்.

இச்செய்யுளில், திலகக்காரர் ஒன்றையுங்கெடுத்திலர்; எம்மையும் இகழ்ந்திலர். ஆகலின், யாமும் திருத்துதும்.

114. மீண்டனர்பதறிக் காறடுமாறி
விளந்திடும்பயனையோராம
லாண்டகையிவனோர் நம்மனைதனைவந்
தடுப்பனோதகாதெனவெண்ணிப்
பூண்டநம்மினத்தாரனைவர்க்குமுரைத்துப்
போக்குவமிவனைநாமென்னத்
தூண்டியேநடந்து வாயிலைக்கடந்தார்
துன்பமுற்றப்துல்முத்தலிபு.

இச்செய்யுளில், மீண்டனர் என்பது மீண்டு என்னும் வினையெச்சப்பொருடந்து நிற்ப, திலகக்காரர் அதனை "பெயரெச்சப்பொருண்மைக்கண்ணின்றது" என்கின்றார்.

அது, "உண்டான் சாத்தனார்க்குப்போனான்" என்புழி, உண்டசாத்தனார்க்குப்போனானெனப் பொ

ருடந்து சொற்றொடர்ந்தமெக்கியாங்கு பெயரெச்சமாய் நிற்குமன்றி, இங்ஙனம் பயின்று நில்லாதென்றுகளைக.

அதாஅன்று “ஆண்டகை என்பதாகுபெயர். இனி, அதை அன்பொழித்தொகை என்பர் முதலுரையார். அது பொருந்தாது; என்னை? ஆகுபெயர் ஒன்றன் பெயரான் அதனோடியைபுபற்றிய பிறிதொன்றனையுணர்த்தி ஒருமொழிக்கண்ணதாம்; அன்மொழித்தொகை இயைபுவேண்டாது இருமொழியும் தொக்கதொகையாற்றலால் பிரிது பொருளுணர்த்தி இருமொழிக்கண்ணதாம்; இவையே தம்முள்வேற்றுமையாதல்பற்றி ஆண் என வியர்துகூறும் வீரன் என்பார் ‘ஆண்தகை’ என்றார். ஆகவே ஆண் என்பது பாம்பொதுமையினீக்கிப் பொருளைவிசேடித்துநிற்ப தகை என்பது விடாத ஆகுபெயராய் அப்பொருளின் வீரத்தை யுணர்த்திநிற்ப இருபெயரும் ஒன்றனையொன்று விசேடித்து இன்னது இது என உணர்த்துமாற்றலான் ஆண்டகை ஆகுபெயராயிற்றெனக” என்கின்றார்.

அவர் ஆகுபெயர்க்கும் அன்பொழித்தொகைக்குமிடையிலுள்ள வேற்றுமையைத் தொல்காப்பியச் சூத்திர விருத்தியிற்கண்டபடி எடுத்தெழுதிவிட்டாரன்றி, அவற்றின் உண்மையை யறிந்திலர். அறிந்திருப்பின், ௨௫-வது செய்யுளில் வலிமை என்ற ஒரு மொழியை அன்மொழித் தொகையென்றும், ஈண்டு ஆண் தகை என்ற இருமொழியை ஆகுபெயரென்றுங் கூறுவரா? ஆண் தகை என்னும் இருமொழியை ஆகுபெயரென்று தங்கூற்றுக்கு மாற்றமாய்க் கூறவந்தவர், அதை இருபெயரொட்டாகு பெயரென்றுகூறவு மறியாமற்பிதற்



றுகின்றார். அங்ஙனமும் அது ஆகுபெயராகாது. எங்ஙனமெனின்; வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்றற்றொடக்கத்தனவே வகரம், மக்கள் என்னும் அடைமொழிகள் கிளவி, சுட்டு என்னும் இயற்பொருளை விசேடித்து நில்லாது, எழுத்தும், பொருளுமாகிய ஆகுபெயர்ப் பொருளை விசேடித்துநிற்ப, கிளவி, சுட்டு என்பனவே ஆகுபெயர்ப்பொருளை யுணர்த்த, இருபெயரும் ஒட்டி இருபெயரொட்டாகுபெயராய் நிற்கும். ஆண்டகை என்பது அங்ஙனமன்றி, ஆண் என்பது அவ்வாறு அன்மொழித் தொகைப்பொருளை விசேடித்து நில்லாது தகையினையே விசேடித்துநிற்ப, அவ்விரண்டன் தொகையாற்றலான் உடையான் என்னும் அன்மொழித்தொகைப்பொருளையுணர்த்தி நிற்கின்றதென்பதை நல்லாசிரியரை யுள்ளிட்டு இனி பேணுங் கற்பாராக.

115. காரணமனைத்தும் வெளிப்படாதமைக்குங்
காலமென் றறிந்துணராம
லூரவரெவர்க்கு முரைத்திவண்புகவெண்
ணுளத்தினி லெண்ணியகாலைப்
பாரிடத்தெறும்பீ றாவிபமுதலாப்
பகுத்தமைத் தவன்விதிப்படியா
லீரமற்றுணங்கி நாவழுங்காம
லெழுதின மில்லம்புக்கிருந்தார்.

இச்செய்யுளில், அப்துல்முத்தலிபு உணங்கி நாவழுங்காமலிருக்குங் காரியத்திற்கு ஈரமாகிய அறிவிழத்தல் காரணமாகலின், ஈரமற்று என யாம் திருத்தினேம்.

திலகக்காரர் ஈரமுற்று எனவே வைத்துக்கொண்டு "ஈரமுற்று என்றமையான் ஆறறிவோடு மிருந்தாரென்பது கருத்து" என்றும், இக்கருத்தறியாது முதலுரையார் ஈரமற்று எனச் செய்யுளைத் திருத்தித் தமதறியாமையை விளக்கினாரன்றி யாதும் பயந்திலரென்றொழிவிடுக" என்றுங் கூறுகின்றார்.

அப்துல்முத்தலிபு எதைச்செய்ய நாடினரோ அதைச் செய்யாமலிருந்தாரென்பதே கருத்தாகலின், ஈரமென்பது மனனறிவொன்றையே யுணர்த்தி நிற்பது காண்க.

116. சிலைநுதற்கயற்கண் ணமினாவென்னுஞ்
 செவ்விபூத் திருந்தபொன்மடந்தை
மலர்தலையுலகிற் சுருதியைவிளக்கு
 முகம்மது நபிநயினாரை
யிலகியகமலக் கரத்தினிலேந்தி
 யிருவிழிகுளிர்தர நோக்கிப்
பலகலையறிவுங் கொடுப்பபோலெழுமாட்
 பான்முலை கொடுத்தனரன்றே.

இச்செய்யுளில், உலகிற் சுருதியைவிளக்கு முகம்மதுநபி என்புழிச் சுருதியென்பதை யாம் குறு ஆன் என்றேம்.

திலகக்காரர் "நபிபெருமானாரவர்கள் நான்குவேதத்திற்கு நாயகமாகலின சுருதி என்புழி நான்குவேதத்தையுங்கொள்க. அது குறு ஆன் என்பர் முதலுரையார். அது பொருள்வியப்பின்றாகலின் பயனில் கூற்றாமென்க" என்கின்றார்.



சுருதிநாயகம் என்று ஆசிரியர் கூறினால் அங்ஙனப்பொருந்தும். அவ்வாறு கூறாது சுருதியைவிளக்கும் என்றமையான், முன்னர் மாற்றப்பட்ட மூன்று வேதங்களையும் விளக்காது தமது குறு ஆன் ஒன்றையே உலகில் விளக்கினாராகலின், சுருதியென்றது குறு ஆனையே யென்றும் யாங்கூறிய இம்முடிபே ஆசியர்க்கும் ஏனையர்க்கு முடன்பாடாமென்றுங் கொள்க.

117. மின்னவிர்சுவன வானவர்கூண்டு
 விளங்கொளி யினமணித்தசும்பி
லின்னிலைச்சலிலங் கொணர்ந்துகோதறவே
 நறைகமழ் முகம்மதுநபியை
யிந்நிலம்விளங்க விளக்குவதெனவே
 யெழிற்கரத் தேந்திநீராட்டிப்
பன்னியசலவாத் தோதியேவாழ்த்திப்
 பரிவுடன் புகழ்ந்துபோற்றிடுவார்.

இச்செய்யுளில், கோதற என்பதனைக் கொணர்ந்தென்பதோடு கூட்டிக் கோதறக்கொணர்ந்து எனின்; சுவர்க்கத்துக் கோதற்ற தண்ணீரை அங்குள்ள கோதற்றமலக்குகள் கொணருமிடத்துக் கோதறக்கொணர்ந்தெனல் வேண்டற்பாலதன்றாகலானும், நீராட்டி என்பதோடுகூட்டி முகம்மது நபியைக் கோதற நீராட்டி எனின்; என்றுங் கோதில்லா நபிபெருமானாரை அங்ஙனங் கூறுதற் பொருந்தாதாகலானும், இந்நிலத்தைக் கோதற விளக்குவதெனவேயென நிலமென்பதோடு கூட்டி யாம் பொருள்கூறினேம்.

திலகக்காரர் "கோதற என்பது ஈண்டுக்கொண்டு வருதலின் பரிசுத்தம் இத்துணையதாமென்பதை யுணர்த்தி நின்றது. இனி, இந்நிலம் விளங்க கோதற விளக்குவது என என்றுகூட்டி—பொருண்முடிப்பர் முதலுரையார்; அது தெற்றெனப் பொருண்முடியாமைபற்றிப் போலியுரையாமென மறுக்க" என்கின்றார்.

இதன்போலி அப்பேதையர்க்கு எங்ஙனம் விளங்கிற்றோ! அவர் கூறுவதன்றோ அறவும்போலி!!

118. இலங்கிலைவேற்கை யப்துல்முத்தலிபு
மெழுதின மனையசத்திருந்து
நலங்கிளர்நாவும் வழங்கிடமனத்தி
னல்வகைப் பயனையுமுணர்ந்து
சலங்கியேதெளிந்து மதலைமேல்விருப்பாய்க்
கடுவிழிக் கனிமொழித்துவர்வாய்ப்
பொலங்கொடியாமி னாமணிமனையிற்
புக்கினர் புயங்கள்விம்முறவே.

இச்செய்யுளில், நலங்கிளர் என்பதனை ஆசிரியர் அப்துல் முத்தலிபினது நாவுக்கடையாக வமைத்து, முன் எழுநாள் வரையும் நலங்கிளராதிருந்து பின் வழங்குமிடத்து நலங்கிளர்ந்ததென்பதை விளக்கியவாறு யாம் பொருள்கூற, திலகக்காரர் அதனை மணிமனையென்பதோடு பெயர்த்துவைத்து ஆமினாவினது நலங்கிளர் மணிமனையெனக் கூட்டிக்கொண்டதுமன்றி,

"இனி, நலங்கிளர் என்பதை நாவோடுகூட்டுவர் முதலுரையார். அதில் பொருள்வியப் பின்றாகலின்



பொருந்தாதென்க" என்கின்றார். அவர் கூற்றிற் பொருள்வியப்புண்டு போலும்!

அதாஅன்று, நால்வகைப்பயனையு முணர்ந்து என்பதற்கு, நபிபெருமானால் இனி நிகழும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்குவகைப்பயனையுமறிந்து என ஆசிரியர்கருத்திற்கேற்ப யாம் பொருள் கூறினேம். அவர் அப்துல்முத்தலிபு கண்டவுங் கேட்டவுமான பலகாரணங்களையெனக்கருதி, நானாவிதக் காரியாமிசங்களையும் எனப் பொருள்கூறி,

"இனி, அதை அறம், பொருள், இன்பம், வீடு என்பர் முதலுரையார். அவைக ளிங்ஙனம் நிகழாமையானும் அல்லதூஉ மவைகளை அப்துல்முத்தலிபு நினைத்தற் கேதுவின்மையானும் அவர்கூற்றுப் பிரதிப்பிரயோசனமாகலின் இழுக்காமென மறுக்க" என்கின்றார்.

இதனைக் கற்றோர் கவனிக்க. பிரதிப்பிரயோசனம் என்னும் வார்த்தை ஈண்டு என்வந்ததோ!

119. *திண்டிறற்பொருப்பும் பொருவராதெழுந்து
செம்மைவீற் றிருந்தபொற்புயத்தார்
வண்டணிகுழலா ராமினாவெனும்பேர்
மடைந்தைதந் திருமுகநோக்கிக்
கண்டெனுமொழியா யிவ்வயினிகழ்ந்த
காரணக் காட்சிகளெல்லாம்
விண்டெமக்குரையா யென்றனர்முறுவல்
விளங்கிய குமுதவாய்திறந்தே.

இச்செய்யுளில், ஆசிரியர் "திண்திறல் பொருப்பும் பொருவராது எழுந்து செம்மை வீற்றிருந்த பொன்புயத்தாராகிய அப்துல்முத்தலிபு, வண்டு அணி குழலராகிய ஆமினா எனும் பேர் மடந்தைதம் திருமுகம் நோக்கி, கண்டு எனும் மொழியையுடையாய்! இவ்வயின் நிகழ்ந்த காரணக்காட்சிகள் எல்லாம்விண்டு, நின் முறுவல் விளங்கிய குமுதவாய்திறந்து எமக்கு உரையாய் என்றனர்" என மிகத்தெளிவாமாறு பொருளமைத்திருக்கின்றார்.

ஈண்டுக் கரலிகிதங்களால், புயத்தான் உரையாயென்றனன் என வழீஇன. அதனால் யாம் புயத்தாரென்றும், உரையாயென்றனரென்றும் திருத்தினேம். இதனைச் சிறிதும் கேட்டுமதியாத திலகக்காரர் அருமந்த செய்யுளையும் அரிய பொருளையுங்கெடுத்து,

"திண்திறல் பொருப்பும் பொருவராது எழுந்த பொன்புயத்தான் வண்செம்மைவீற்றிருந்த தணிகுழல் ஆர் ஆகிய அப்துல் முத்தலிபு, ஆமினா எனும் பேர்மடந்தை தன் திருமுகநோக்கி, என்றன் நல் முறுவல்விளங்கிய குமுதவாய்திறந்து இவ்வயின் நிகழ்ந்த காரணக்காட்சிகள் எல்லாம் விண்டுகண்டு எனும் மொழியானதாய் எனக்கு உரை" எனக்கண்டோர் கேட்டோர் அனைவருங் குலுங்கச்சிரிக்கப் பொருள்கூறுகின்றார்.

புயத்தானென்பதும் குழலாரென்பதும் அப்துல் முத்தலிபுக்கே யுரியவெனின்; ஆசிரியர் புயத்தான் குழலான் என்றாவது, புயத்தார்குழலார் என்றாவது ஒருபடித்தாகக்கூறக் கற்றிலரென்பதை அவர் நிரூபிக்கின்றார். இதுநிற்க.



வண்டுகள்பொருந்துங் கூந்தலையுடையாராகிய ஆமினாவென்னும்பெயரினையுடையமடந்தைஎன்னும்பொருளவாய், வண்டணிகுழலா ராமினாவெனும் மடந்தை என்பது சிறந்துவிளங்க, அவர் வண்செம்மை வீற்றிருந்த தணில்குழல் ஆர் அப்துல் முத்தலிபு என வமைத்துக்கொண்டு, வலிமையையுங் கனந்தங்கிய குளிர்சலாகிய இசைப்பாட்டினையு முடையாராகிய அப்துல் முத்தலிபு என்று குழலைப் புள்ளாங்குழலாக்கிப் பொருள் கூறுகின்றார். இது நிற்க.

மடந்தை தன் திருமுகநோக்கி, இவ்வயினிகழ்ந்த காரணக்காட்சிகளெல்லாம் விண்டு முறுவல்விளங்கிய குமுதவாய்திறந்து எமக்கு உரையாய் என்றனன் என்று கிடந்ததைச் சிரழித்து, மடந்தைதன் திருமுகநோக்கி, என்றன் நல் முறுவல்விளங்கிய குமுதவாய்திறந்து எனக்கு உரை எனப்பொருள் கூறுகின்றார். என்றன் வாயைத்திறந்து எனக்கு உரை என்றால் யாருக்குத்தான் சிரிப்புவராது? இதனைப் பித்தனும் பொருந்துவானா! இது நிற்க.

உரையா யென்றனன் என்றுகிடந்த என்றனன் என்னும் குறிப்புவினை முற்றை என்றன் நல் என ஆக்கிக்கொண்டார். அதனால், அப்துல்முத்தலிபு ஆமினாவைநோக்கி இங்கு நடந்தவையனைத்தையும் எனக்குச் சொல்லென்றார் என்று வினை முடிவுபெறாமல், என்றார் என்பதுதொலைந்து, எனக்குச்சொல் என்றுமாத்திரமிருந்து செய்யுள்பெரும்வழுப்பட்டு ஆசிரியர்மீதும் அறியாமையை யுண்டுபண்ணுகின்றதன்றோ? இதுநிற்க.

கண்டெனும்மொழியாய் என்னும் விளியை நிமித்தமின்றிக்கெடுத்து, கற்கண்டுபோலுஞ் சொல்லினதாய் என்றுபொருள்வைக்கின்றார். இது பொருந்தாதன்றோ!

இத்தனைச் செய்யுட்களையுஞ்சிரழித்ததோர் நூதனமன்று; இந்தச்சீரழிவைப் பாருங்களென்று காட்டுமாறு இந்தச்செய்யுளையும் இவ்வாறாகக்கெடுத்து, பேய்க்கோலமாகப்பொருள்கூறுகின்ற திலகக்காரப் பேதையர் அம்மட்டிலடங்காமல்,

“இனி, இச்செய்யுட்குப் பொருண்முடிந்தவாறினைத் தெனவறியாது புக்கினர் என முன்னரும், எழூர்தார், சார்ந்தாரென்று பின்னருங்கூறிய ஆசிரியரை ஒருமை பன்மை அறியாதாரெனக்கருதி புயத்தார், தந்திருமுகம், உரையாய், என்றனர் எனச்செய்யுளைத்திருத்தியும் கண்டெனுமொழியாய் என்பதை விளியாய்க்கொண்டும் பலவாறுதவறிப்போந்தார் முதலுரையார்; அவையெல்லா மவருரையானேகாண்க” என்று எம்மனம் புழுங்க வீறும்பேசுகின்றார்.

இதனைத்தெளிவுறப்பகுத்துச்சீர்தூக்கிப்பார்க்கும் கற்றோர்களே அவருக்கோர் தக்கபட்டத்தைக்கட்டட்டுமென்று யாம் நாவைப்பேணிவாளாயமைகிறதும்.

120. பறவைகளனைத்தும் வந்ததும்சுவனப்
பதியைவிட் டமரர்வந்ததுவு
மறியமுமாசி யாவும்வந்ததுவும்
வானவர் மகளிர்வந்ததுவும்



வெறிகமழ்பறவை வீசிநின்றதுவும்
விண்ணகத்தமுதந் தந்ததுவுங்
குறைவிலாப்புதுமை பலவுங்கண்டதுவுங்
குறிப்புடன் படிப்படியுரைத்தார்.

இச்செய்யுளில், திலகக்காரர் வெறிசமழ்பறவை என்புழிக்கிடக்கும் வெறிகமழ்என்பதைச்சுவர்க்கத்தோடும், குறைவிலாப்புதுமை என்புழிக்கிடக்கும் குறைவிலா என்பதை ஆமினுவுரையோடுங்கூட்டிப்பொருள்கூறி, யாம் நிறுத்த முறையாற்கூறியதை மறுக்கின்றார். கற்றோர் கவனிக்க.

121. புகன்றநன்மொழிசேட் டறப்பெரும்புதுமை
புதுமையீதெனச்சிர மசைத்துன்
மகன்றனைத்தருக வென்றலுமடமான்
மகிழ்வொடுந் திருமனைபுகுந்து
மிகுத்தபேரொளிவு சொரிந்துகால்வீச
விளங்கிய முகம்மதையெடுத்துச்
செகந்தனிப்புரக்கு மப்துல்முத்தலிபு
செழுமணித் தடக்கையிலீந்தார்.

இச்செய்யுளில், பேரொளி என்பதற்கும், செகந்தனிப்புரக்கும் என்பதற்கும் ஆசிரியரமைத்தவாறு யாம் பொருள்கூற, திலகக்காரர் கண்டபடிச் சிதைத்துக்கொண்டு பொருந்தாவிதம் பொருள்கூறுவதுமன்றி, யாம் இடர்ப்படுவதாகவுஞ்சொல்லுகின்றார்.

யாங்கூறுமுரையான் எமக்கு நேருமிடர் என்னேயோ! என்குறித்திலர்?

122. கறைபிணஞ்சுமந்த செங்கதிர்வடிவேற்
காதலத்தப்துல் முத்தலிபு
முறைமுறைமோந்து முத்தமிட்டுவந்த
முழுமலர்ச் செழுமுகநோக்கி
நிறைமதிநிகரா முகம்மதுநயினர்
நிலவுகொப்பளித்திடச் சிரிப்பக்
குறைபடாவுவகை பெருக்கெடுத்தெறியக்
குளித்தசமிகமகிழ்ந் தெழுந்தார்.

இச்செய்யுளில், திலசக்காரர் " இச்செய்யுட்குமுதலுரையார்கூறும் உரை அத்தனைச்சிறப்பன்றென்பதை யவருரையானேகாண்க " என்கின்றார்.

அதை இத்தனைச்சிறப்பின்றென வெடுத்துக்காட்டி, இதுவரையும் உளறினாற்போல ஒரு உளறு வளறுமற் போனதேனோ! அவரே மாற்றியும் பிரித்தும் ஈண்டுரைப்பனவனைத்துஞ் சிறப்பாகாவாம். விளக்கிற் பல்குமென்றொழிகின்றேம். கற்றோர் ஆராய்க.

123 கதம்பமான்மதம்பே ரொளிவுடன்றிகழ்ந்த
காளையைக் கரத்தெடுத்தணைத்து
மதஞ்சொரிந்தசைந்த களிறெனநடந்து
வந்துகஃபாவினைவலஞ்செய்
திதம்பெறப்போற்றி யுள்ளுறப்புகுந்தங்
கிருந்திறை தனைப்புகழ்ந்தேத்தி
விதம்பெறமுகம்ம தெனப்பெயர்தரித்து
வீறுடன்றிரும்பினரன்றே.

இச்செய்யுளில், திலகக்காரர் தம்மறிவிற்கேற்றபடிப் பலவாறு உரைகூறுகின்றார். அவற்றை யீண்டெ



டுத்துக்காட்டிற்பல்கு மாகலானும், எம்மையும் ஈண்டு யாதும் பேசிலராகலானும் யாம் நிறுத்துதும்.

124. தேமலர்ப்பொழில்சூழ் சுவனநாட்டரசைத்
திசைதொறும் விளக்குநாயகத்தை
மாமறைக்கொழுந்தை முகம்மதுநபியை
மறுப்படா தெழுந்தசெம்மணியைப்
பூமலர்க்குழலி யாமினாவென்னும்
பூங்கொடிக்கரத்திலிலருளி
நாமவைவேற்கை யப்துல்முத்தலிபு
நடந்துதந் திருமனைசார்ந்தார்.

இச்செய்யுளில், நாம வைவேல் என்புழி, நாமத்தைக் கீர்த்தியென்றும் செம்மணியை என்புழி மணியை நன்மையானவரென்றும் பூமலர்க்குழலி ஆமினா என்புழிப் பூமலர்க்குழலை அழகுநிறைந்த பெருமை பொருந்தியவென்றும் திலகக்காரர் அர்த்தம் பண்ணுவதுமன்றி, அரசென்பதை உபசாரவழக்கென யாம் அறியாது கூறினேமென்றும், மாமறையென்பதை மகாவேதமாகிய குறுஆன் என்றே மென்றும், மணியை மாணிக்கமென்றே மென்றும், இவையெல்லாம் போலியுரையென்றும், தன் என்பதைச் சாரியையென் றறியாது திருத்திக்கொண்டேமென்றும் பிதற்றுகின்றார்.

இவையெல்லாம் பிதற்றலேயன்றி வேறன்றென்பதைக்கற்றோர்க்கு எடுத்துக்காட்டவேண்டுமாறில்லையாகலின் நிறுத்துகின்றாம்; கவனிக்க. இவையெல்லாமும் அன்றி,

" இங்ஙனமாக, ஐயந்திரிபறக்கற்றுத்தேர்ந்து திரிகுணங்களைத் திருத்தி நிலைகண்ட மகான்களில் ஒருவ

ரும், உமறு எனுந்திருநாமத்தை யுடையவருமாகிய வள்ளல் நபிபெருமானாரது அருளாற் பயந்தியற்றிய புராணத்தின்கண் பலவாறு திருந்திக்கிடந்தசெய்யுட்களைத் தவறெனத்தமது சிற்றறிவிற்கேற்பத் திருத்திப் பெரும்பாலும் இடர்ப்பட்டுப்போயினார் முதலுரையார். ஆகவே அவரிழுக்கை ஒருவாறு யாமிங்ஙனங்கூறிப் போந்தாம். கூறாதனவெல்லாம் அவருரைகொண்டு நோக்குக" என்றுசொல்லித் தமது திலகத்தை முடிக்கின்றார்.

எஞ் சிற்றறிவும், அதனாலாய எம்மிழுக்கும் யாஞ் சிரமித்த செய்யுட்களாலும், எம் மதிகேடான உரையாலும் பலர்க்கும் நன்கு புலப்பாடாம். அதனைக் கற்றோர் நிதானிப்பர். பேரறிவும் இழுக்கின்மையுமுள்ள அவரது அரியவுரைகொண்டு அவரையே உலக முயர்த்தட்டுமென்பது எமக்கும் ஆசைதான். ஆயினும், அவர் அதற்கு இடம்வைத்துக் சொள்ளாமல் நிரேதுவாக நிந்தனைபாணங்களை எம்மீது பிரயோகித்துவிட்டாரே யென்றுமாத்திரம் யாம் கவலைப்படுகின்றோம். பட்டாலும், அவர்செய்த தூஷணைகளைப் பூஷணைகளாக யாம் பூண்டுகொண்டதே அவர்க்குப் புத்திபோதிக்கும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு.

125. அன்புடனெழுநா ளணியிழைசுமந்த
வாமினாமுலையருந்தியபி
னின்புறவபூல கபுதிருமனையி
லிருந்தவோர் மடக்கொடிதுவைபா
மன்பெரும்புகழார் முகம்மதுநபிக்கு
மனமகிழ் வொடுமுலைகொடுத்துத்
தன்பெரும்புகழும் வரிசையும்பெருகத்
தழைத்தினி திருக்குமக்காளில்.



இச்செய்யுளில், திலகக்காரர் " இச்செய்யுள் ஆலிமாமுலையூட்டுப்படலத்தைக்கொளுவிநிற்றலான் ஈண்டு உரைகூறிலம்" என்கின்றார். அதனைச் யாமும் ஒன்றுங்கூறிலம்.

யாம் இந்நூலில் ஆதிதொட்டு அந்தம்வரையும் நியாயமான ஆதாரங்களைச்சொண்டு எடுத்துக்காட்டி வெளிப்படுத்தியிருக்கும் இத்தனை யூழலையும் ஆராய்வின்றிக் கண்டபடியெழுதியும், இலக்கிய இலக்கணங்களிற் சிறந்து கல்விமான்களாற் கொண்டாடப்பட்டுப் பல நூற்களையுஞ்செய்து எங்கும்பிரபலமாய் விளங்கும் எமது கல்வித்திறமுள்ள உரையை நிராதாரமாகமறுத்தும் எம்மனங்கொதிக்க அச்சமின்றி நிந்தித்தும், எம் ஆசிரியர் மீது நிமித்தமின்றிச்சாடியும், நியாயவிரோதமாகத் தம் புத்தகத்தைமுடித்து, அதற்கு "* உரைகடிலகம்" என்று நாணமின்றிப் பெயரும் வைத்துக்

* உரைகடிலகம் என்றால், சீறா நபியவதாரப்படலத்து உரைகட்கெல்லாம் திலகம் என்றாம். ஆயின், அப்படலம் எமது ஒரே யுரையை யுடைத்தன்றி, பல வுரைகளை யுடைத்தன்றாகலின், அது பொருந்தாது. பின்னை, உலகிலுள்ள பலநூற்களின் பலவுரைகட்கும் திலகம் என்றாதல்வேண்டும். அங்ஙனமாயின், நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர், பரிமேலழகர், நக்கீரர், அடியார்க்குநல்லார் முதலாயினோர் செய்துள்ள உரைகட்கும் இது திலகம்போலுமே! ஆம் !! போலுந்தான் !!! அது, "முனைபுனை சேவகன் முனிந்தார்ப் பதுபோற், கசடறக் கற்ற கல்வியாற்றலாற், றன்னைப்புகழ்த்தகுமெனச் சாற்றினர்" என்னும விதிகொண்டு இட்டபெயர் !!!

கொண்டு வெளிவந்த திலகக்காரப் பேதையர்க்கு, துரைத்தனத்தாரிடம் மனுப்பண்ணித் தக்கபிரதி செய்விக்க எமக்கு இடம்வாய்த்திருந்தும் "தம்மையிகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை, யெரிவாய நிரயத்துள் வீழ்வர் கொலென்று, பரிவதூஉஞ் சான்றோர்கடன்" ஆகலின் அப்படிச்செய்யாமல், புத்திவரத்தக்க சற்போதனையுடன் சமாதானஞ்சொல்லி, இனியொருக்கால் இவ்விதம் இறங்காத்துறையில் இறங்கித் தவிக்கவிடாமல் யாமே அவரை எச்சரித்துவைப்பது உத்தமமென்று கருதித்தான் இந்நூலைச்செய்து முடித்தோம்.

> "கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
> கொள்ளா ரறிவுடை யார்."

---

சீறா - நபியவதாரப் படலம்
உரைகடிலக நிராகரணம்.
முடிந்தது.

---

0465

# அறிவிப்பு.

இந்தப் புத்தகம் அச்சிடும்போது பிரதானமான மற்றொருகிரந்தமும் கூடவே அச்சிட்டுவந்தபடியால் சோதனைப்பிரதிகள் பார்வையிடுமிடத்து இதில் அதிகக் கவனிப்புக்கொள்ளவில்லை. ஆதலால், இந்தப்புத்தகம் முழுதும் சில இடங்களில் அட்சரங்கள் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும் கிடக்கின்றன. அவற்றைப்பார்க்கும் கல்விமான்களுக்கு, அச்சுப்பிழையென்றே தோன்றும். இத்தனை சிறுபுத்தகத்தில் பிழைதிருத்த அட்டவணை சேர்த்து வெளிப்படுத்தல் அழகாகாதென்றே அது செய்யவில்லை. கல்விமான்கள் அங்கங்கே திருத்தி வாசிப்பார்களென்று நம்புகின்றோம்.

இப்புத்தகம் பிரயோசனத்திற்கு விற்கப்படாமல் கல்விப் பிரியர்களுக்குமாத்திரம் இனாமாகக் கொடுக்கப்படுவதாகையால், விரும்புவோர் முகதாவில் வந்தாவது, தபாற்கூலிமாத்திரம் (ஒரு அணா) அனுப்பியாவது எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்

வா. குலாம்காதிறு நாவலர்,

நாகூர்.